


கார்ல் மார்க்ஸ்
பிரடெரிக் ஏங்கல்ஸ்
விளாதிமீர் இலியிச் லெனின்
ஜோசப் ஸ்டாலின்
மாசேதுங்
பெரு. சே குவேரா
ஹோ சி மின்
கிம் இல் சுங்
பிடல் காஸ்ட்ரோ
ஜூலியஸ் பியூசிக்
ரூபன் பெரோனியர்

அறிஞர்

அ. சங்கரவள்ளிநாயகம்

வள்ளுவப் பேராளியர்

அ.சங்கரவள்ளிநாயகம்

அன்னம்
மனை எண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613007.

வள்ளுவப் பேரொளியர் / © அ. சங்கரவள்ளிநாயகம் / முதல் பதிப்பு: டிசம்பர் 2002 / வெளியீடு: அன்னம், மனை எண்: 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் -7/அச்சாக்கம்: ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி / விலை. ரூ.50/-

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book		Valluva Peroliar
Subject	:	Essays
Author	:	A. Sankaravallinayakam
Language	:	Tamil
Edition		First Edn. December 2002
Size of the Book	:	Crown 1x8
Printing Point	:	10.5 Pt.
Paper	:	11.6 Cream wove
Number of Pages	:	144
Number of Copies	:	1000
Printers		Hemamala Syndicate, Sivakasi
Publishers	:	ANNAM Plot No: 1, Nirmala Nagar Thanjavur - 613 007.
Price	:	Rs.50/ -

வாழ்க தமிழுடன்

தமிழுக்காகவும் தமிழர் நலனிற்காகவும் மட்டுமே வாழுகின்ற ஒரு சில தமிழ்ப்பற்றாளர்களில் தமிழறிஞர் அண்ணன் சங்கரவள்ளிநாயகம் அவர்களும் ஒருவர்.

பாரதிக்கும் தாசனாக வாழ்வதிலே மிகுந்த பெருமை கொண்ட பாவேந்தர் திருவள்ளுவருக்கும் அவர்தம் குறட்பாக்களுக்கும் எப்படித் தாசனுதாசனாக விளங்கினார் என்பதை உண்மையான ஈடுபாட்டோடு அறிஞர் சங்கரவள்ளிநாயம் விளக்கியிருப்பதே ''வள்ளுவப் பேரொளியர்''என்ற இந்த நூலின் சிறப்பு.

வள்ளுவர் நெறியான தமிழர் நெறியினின்று விலகி இடைப்பட்ட காலத்தில் தடம் புரண்டிருந்த தமிழர் கூட்டத்தை மீண்டும் வள்ளுவர் நெறிக்குக் கொண்டு வந்தது பாரதிகாலம் என்று நூலாசிரியர் குறிப்பிடுகையில் உண்மைகளை உள்ளபடி உரைப்பதில் தன்னை நல்ல தமிழராகக் காட்டிக் கொள்ளுகின்றார்.

போர்வாழ்க்கை, காமவாழ்க்கை என்று பரத்தமைத் தனமும் போதைப் பழக்கங்களும் பெருமையான அடையாளங்களாகக் கொண்டு வாழ்ந்த தமிழினத்தை மீண்டும் சிறந்த மனிதர்களாய் வாழ்வதற்கான வழிமுறைகளைச் சொல்ல வேண்டிய தேவையான காலத்தில் திருக்குறள் தோன்றியது மட்டுமல்ல, ஆரிய தருமத்தை மறுக்க வந்த பகுத்தறிவு நூல் என்றும்

நூலாசிரியர் குறிப்பிடும் பொழுது இடையில் தருமங்கள் என்று போற்றப்பட்ட அனைத்து அதர்மங்களையும் அறவே ஒழிக்க வந்த நூலே பொதுமறை என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல்ல முடிகின்றது.

மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரனார், ''வள்ளுவரின் திருக்குறளை மருவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுஆதி ஒரு குலத்திற்கொரு நீதி'' என்று தெளிவாகக் குறிப்பிட்டதனை நூலாசிரியர் கருத்தினில் எடுத்துக் காட்டுவதனை நம்மால் உணர முடிகின்றது.

பெரும்புலவர்களான இளங்கோவடிகள், சாத்தனார், திருத்தக்கதேவர், சிவப்பிரகாசர் பலரும் வள்ளுவப் பேரறிஞனிடம் கொண்டிருந்த அளப்பரிய காதலாகி, அவர்தம் வரி வடிவங்களிலே எடுத்துத் தந்திருப்பதும் குறள்மொழி தேராதவர் குறித்து வள்ளலாரின் வைர வரிகளைச் சுட்டிக் காட்டியிருப்பதும் சிறப்பான பகுதியாகத் திகழ்கின்றது.

''அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலர்'' என்கின்ற பாரதியார் தெளிவுரைக் கேற்பத் தான்பிறந்த இன, சமயச் சிந்தனைகளைக் குறளில் பரிமேலழகர் ஏற்றி உரைத்திருப்பதனை ஒழுக்க முடைமை, குடிமை என்ற அதிகாரத்தின் குறட்பாக்களிலும் மேலும் பலப்பல குறட்பாக்களிலும் பாவேந்தர் ஆதாரங்களோடு சுட்டியிருப்பதனை அறிஞர் சங்கரவள்ளிநாயகம் நூலில் தொடர்ந்து எழுதித் தமிழினத்திற்குத் துணைபுரிந்துள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்பது வடவர் முறையென்ற அறியாமையைக் கடல்கொண்ட குமரிநாட்டு முதற்கழகத்தார் அருளிய நான்மறை சொன்ன கருத்தே என்ற பாவேந்தர் உறுதிப்பாடும்

''பரிமேலழகர் உரையோ வள்ளுவர்
திருவுள்ளத்தின் திரையே ஆனது''

என்ற உண்மையும் நல்ல தமிழர்களுக்கு இனிமை பயக்கும் கருத்துக்களாகும்.

தமிழர்தம் தலைசிறந்த தலைமகனின் பிறப்பைக் கொச்சைப்படுத்திப் பரப்பப்பட்ட ஆதிபகவன் கதை, சிவல்லபரே திருவள்ளுவராய் வந்தார் என்ற பொய்ம்மைப் புனைவுகளைப் பாரதிதாசன் சாடியிருப்பதனைத் திறம்பட எடுத்துக் காட்டியுள்ளார் நூலாசிரியர்.

மணிமேகலையின் துணையோடு முதற்குறளுக்குத் தாசனார் அளித்துள்ள விளக்கத்தை உணர்ந்தாலே பாரதிதாசன் பல்வேறு குறட்பாக்களுக்கு எழுதியுள்ள விளக்கங்களைக் கற்க அவா மேலோங்கும். அந்த அவாவினை இந்த நூலொன்றே தீர்த்துவிடும் என்பது எனது முடிவு.

குறளில் கோயிலில்லை நாடிமுத்து, வேடப்பன் மூலம் பாரதிதாசன் உணர்த்தியது.

குறளின் மீது கொண்ட அளப்பரிய காதலால் தாசனார் எழுதிய குறட்பாக்களும் நூலினுள் அணிவகுக்கின்றன:

''ஒருவன் புகழ்வான் ஒருவன் இகழ்வான்
இரண்டுக்கும் அப்பால் இரு''.

கம்பனினிலிருந்து அனைத்துப் புலவர்களும் வள்ளுவனின்துணையைக் கொண்டிருந்தாலும் அவனைத் தன் உயிர்த்துணையாகக் கொண்டவர் பாரதிதாசன் என்பதனை விளக்குவதே நூலாசிரியரின் உள்ளக்கிடக்கை என்பது தெளிவாகின்றது.

வள்ளலாரின் கோடையிலே இளைப்பாறிப் பாடலையும் பாரதி குறித்த பாரதிதாசன் வரிகளையும்

வள்ளுவனுக்கும் பாரதிதாசனுக்கும் பொருத்தி அழகு பார்த்திருப்பது அழகுக்கு அழகு செய்த அழகாகத் தெரிகின்றது.

தலைசிறந்த தமிழ்ப் பற்றாளனாக வள்ளுவன் முதற்குறளிலேயே தன்னைக் காட்டிக் கொள்கிறான் என்பது எனது கருத்து. தமிழின் முதலெழுத்தான ''அ''கரத்திற்குத் ''தனக்குவமையில்லாதவன்'' உவமையாக்கப்படுகின்றான்.

''இலன் என்னும் எவ்வம் உரையாதவராகக்'' கையேந்தி நின்ற உலகிற்கு வள்ளுவனைத் தந்ததனாலேயே வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்ற பாரதியின் வரிகள் எத்தனை உண்மையானதே!

தொல்காப்பியனை அந்தணனாக்கக் காட்ட முற்படுவோர் எதிர்காலத்தில் புதிய அடைமொழியான அய்யனை எடுத்து ஆதாரம் காட்டாமல் தடுக்க இந்நூல் பெரிதும் உதவி செய்யும்.

தமிழறிஞர் சங்கரவள்ளிநாயகத்தின் தொண்டு தொடரத் தமிழன்னை துணையிருப்பாள்.

வாழ்க தமிழுடன்

நெல்லை கண்ணன்

22.11.2002.

அணிந்துரை

அறிஞர். மா.பா. குருசாமி
தலைவர், காந்திய இலக்கியச் சங்கம், மதுரை
இயக்குநர், குமரப்பா ஆராய்ச்சி நிறுவனம்,
திண்டுக்கல்.

'தமிழ் இலக்கியச் சிந்தனையாளர்' அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம் அவர்களின் நீண்டகால அகன்ற, ஆழ்ந்த ஆய்வின் விளைவாய்த் தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த அரிய நூல் ''வள்ளுவப் பேரொளியர்.''

பேராசிரியர் அவர்களின் உயிர்மூச்சு வள்ளுவம். அவர்தம் வாழ்நாள் எல்லாம் வள்ளுவப் பெருங்கடலில் மூழ்கி வாழ்வியல் முத்துக்களைத் தெரிந்து, தேர்ந்து, தமிழர் வாழ, வளர வழங்கிக் கொண்டிருப்பவர். அவரையும் வள்ளுவத்தையும் பிரித்துத் தனித்துப் பார்க்க இயலாது.

புரட்சிக் கவிஞர், பாவேந்தர் பாரதிதாசன் வான்புகழ் கொண்ட வள்ளுவத்தை அடித்தளமாகக் கொண்டு, தாயெழிற் தமிழை வாழ்வாகவும் வளமாகவும் எண்ணி வாழ்ந்தவர்; உயர்ந்தவர். ஆதலால் வள்ளுவத்தில் ஒன்றிய பேராசிரியர் பைந்தமிழ்த் தேர்ப்பாகனான பாவேந்தரின் பாடல்களில் உள்ளத்தைப் பறிகொடுத்ததில் வியப்பதற் கொன்றுமில்லை.

தமிழர்களின் தவப்பயனாய்த் தோன்றிய வள்ளுவரையும் பாரதிதாசனையும் படித்துப் படித்து,

அவர்கள் படைத்தவற்றின் உட்பொருள் கண்டு, உள்ளத்தில் களிமகிழ்வெய்தியவர். இருவரையும் ஒப்பிட்டு நோக்கிக் காய்தல் உவத்தலின்றி, நடுநிலை நின்று ஆய்ந்து இந்த நூலைப் படைத்தளித்திருக்கின்றார்.

இந்நூலின் தனித்தன்மைகளையும் சீர் பெறும் சிறப்புக்களையும் விரித்துக் கூற முயன்றால் அது ஒரு தனி நூலாக விரியும்; விளங்கும். இங்கு முதன்மையாக எண்ணிப் போற்றத்தக்கவற்றை மட்டும் சுட்டிக் காட்டலாம்.

நூலின் பகுப்பும் தொகுப்பும் ஒப்பீட்டு ஆய்வுக்குப் புதுமையைச் சேர்க்கின்றன. ஆறு அத்தியாயங்களில் வள்ளுவரையும் பாவேந்தரையும் அவர்களது படைப்புக்களின் உள்ளடக்கத்தையும் வள்ளுவம் பாவேந்தரிடம் ஏற்படுத்திய தாக்கத்தையும் நுட்பமாக வரையறுத்துக் கூறுகின்றார். பாவேந்தரிடம் மட்டுமின்றி, மற்றைய பெரும் புலவர்களிடமும் வள்ளுவத்தின் செல்வாக்கும் சொல்வாக்கும் ஊடுருவி நிற்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றபொழுது நாம் மெய்மறக்கின்றோம். இலக்கியத்தை எழுத்தெண்ணிப் பயின்ற பாங்கு பேராசிரியரின் ஆய்வுக் கதிர்வீச்சில் வெளிப்படுகின்றது.

பேராசிரியரின் சொல்லாட்சி எண்ணி மகிழத்தக்கது. தொட்ட இடமெல்லாம் தெவிட்டாத தமிழ்ச் சொற்களை ஆசிரியர் பொருள் விளக்கக் கையாண்டிருக்கின்றார். ஒவ்வொரு சொல்லும் உள்ளார்ந்த பொருளை வெளிக்கொணர உற்ற துணையாகின்றது. அவரது சொல்லோவியத்தின் கருத்து வண்ணத்தில் நாம் பல உண்மைகளைப் புரிந்து கொள்கின்றோம். மாணிக்கக் கற்கள் பதித்து அணிகலன்கள் செய்வதைப் போன்று, தேன்தமிழ்ச் சொற்களைப் பிணைத்து வாக்கியங்களாக்கு

கின்றார். ஆதலால் அவரது அழகுக்கு அழகு சேர்க்கும் அருமைத் தமிழ்நடை நூலுக்குப் பெருமை சேர்க்கின்றது.

நூலாசிரியர் கருத்து விளக்கமாகத் தந்திருக்கின்ற உட்தலைப்புக்கள் ஆழ்ந்த பொருள் கொண்டனவை. எடுத்துக்காட்டாக, வள்ளுவர் பற்றிய விளக்கமாக, *'மனித நல்முத்து'*, *'வரலாற்றிற்கு முற்பட்ட வளமையர்'*, *'இறவாப் பெருவாழ்வினர்'*, *'சமயச்சார்பிலாச்சால்பினர்'* என்று கூறும் சொற்றொடர்களைக் கூறலாம். இவை ஒவ்வொன்றும் *'கருத்துச் செறிவுடை மணிகளாக'* (Concepts) இலங்குவதுகுறிப்பிடத்தக்கது. உட்தலைப்புக்களைப் புரிந்து கொண்டாலே நூலின் ஊடு சரடாய் விளங்கும் கருத்தினை உணர்ந்து கொள்ளலாம்.

இந்நூலின் ஆய்வுமுறை ஒப்பீட்டாய்வாளர்களுக்கு வழிகாட்டக்கூடியது. கவி இமயங்களான வள்ளுவரையும் பாரதிதாசனையும் அவர்களது பல்வேறு பண்புகளையும் தனித்தனியாக விளக்கிப் பின் ஏற்ற வகையில் வள்ளுவர் பாவேந்தரிடம் ஏற்படுத்திய தாக்கத்தை முறையாகவும் நிறைவாகவும் பேராசிரியர் விளக்குகின்றார். இந்த இருபெருங் கவிஞர்களின் தனிச் சிறப்புக்களை இனங்காட்டுகின்ற முறையில் நூலாசிரியரின் புலமை ஒளிர்கின்றது.

பேராசிரியர் ஒவ்வொரு கருத்தையும் வரையறுத்துத் தெளிவாகத் துணிவாக, ஆணித்தரமாகக் கூறுகின்றார். ஆரியம் தமிழகத்தில் நச்சுக் கருத்துக்களைத் தூவி வளர்த்த வேளையில் வள்ளுவம் எப்படிப் பிறந்ததென்பதை வரலாற்றுச் சான்றுகளோடு விளக்குகின்றார். வள்ளுவர் தோன்றியிராவிட்டால் தமிழர்தம் அடையாளங்களை இழந்து தவிக்க நேரிடும் என்பதைத் தனது ஆய்வின் மூலம் ஆசிரியர் ஐயத்திற்கிடமின்றி வெளிக்காட்டுகின்றார்.

அதேபோன்று, வள்ளுவத்திற்குப் பாவேந்தர் வரைந்த உரை எப்படி மெய்யொளியை மறைத்த திரையை நீக்கித் தமிழர்களை வள்ளுவத்தின் மெய்ப்பொருள் காண வைத்ததென்பதை அகச்சான்றுகளோடு எடுத்துரைப்பது, இதுவரை யாரும் மேற்கொள்ளாத தனி இலக்கிய ஆய்வு. இதனைப் படிக்கின்றபொழுது பாவேந்தர் எல்லாக் குறட்பாக்களுக்கும் உரை எழுதவில்லையே என்ற ஏக்கம் பிறக்கின்றது. திருக்குறளுக்குச் சொல்லுக்குச் சொல் பொருளும் பொழிப்புரையும் எழுதியவர்கள் பலர். அவர்களின் உரைகளில் உயிர் இல்லை. ஏனெனில் அவர்கள் வள்ளுவரின் உள்ளம் அறியாது உரை செய்தனர். பாவேந்தரின் உரை வள்ளுவரின் உள்ளத்துடிப்பை உணர்த்துவது. இந்த உண்மையை நிலைநாட்ட ஆசிரியர் மேற்கொண்டிருக்கும் முயற்சி பாராட்டுக்குரியது.

''பாரதிதாசனின் பாக்களில் குறளாட்சி' என்ற பகுதி நூலின் மகுடமாக விளங்குகின்றது. இப்படி ஓர் ஆய்வினை எழுத, இரு பெரும் புலவர்களின் படைப்புக்களை எல்லாம் உய்த்துணர்ந்து படித்திருக்க வேண்டும். வாழ்வியலை வடித்துத் தருகின்ற வள்ளுவம் விரிக்கப் பெருகவல்லது. எக்காலத்திற்கும் மனித குலத்திற்கு வழிகாட்ட மலையென நிலைத்திருக்கும் உண்மைகளைக் குறட்பாக்கள் உள்ளடக்கமாய்க் கொண்டிருப்பதால் பல்வகை விளக்கங்களை வழங்கும் வளம் பெற்றிருக்கின்றன. அவற்றை எல்லாம் அறிதல் எளிதல்ல. அதேபோன்று, பரந்து விரிந்த எல்லையில் நின்று புதுமையும் புரட்சியும் செய்த பாரதிதாசன் ஓயாது எழுதிய அளவு ஏராளம். அவற்றை எல்லாம் ஒருவர் ஆய்வு நோக்கில் படித்து, அவற்றில் வள்ளுவம் தடம் பதித்திருக்கும் இடங்களைத் துல்லியமாய் அடையாளம் கண்டு கூறுவது மிகப் பெரிய சாதனை. அதனை எளிதாகப்

பேராசிரியர், ஒரு சித்து விளையாட்டுப் போலச் செய்து காட்டியிருக்கின்றார். இந்தப் பகுதியில் கூறியிருக்கின்ற கருத்துக்களை விரித்துரைத்தால், ஒரு தனி நூல் தோன்றும்.

பேராசிரியர் கருத்துக்களை எண்ணி, எண்ணச் சொல்வது கவனிக்கத்தக்கது. இலக்கிய நூலின் இறவா நிலைக்குரிய காரணங்கள் நாலென்றும் ஆரியத்திற்குப் பாவேந்தர் கூறும் அழுத்தமான மறுப்புக்கள் ஆறென்றும் எண்ணிச் சொல்வதைச் சான்றாகச் சுட்டிக்காட்டலாம்.

இந்நூலைப் படிக்கின்றவர்கள் தமிழ் இலக்கியத்தின் தனி மணத்தை நுகர்வார்கள். பழம்பெருங்காலத்தில் காலூன்றி வளர்ந்து, தற்காலத்தில் கிளைகள் பரப்பி, நற்கனிகள் தரும் எல்லையற்ற தமிழ் இலக்கியத்தின் வளமையை உணர்வார்கள். தமிழினத்தின் வரலாற்றுப் பெருமையை அறிவதால், 'தமிழன்' என்ற பெருமித உணர்வோடு தலை நிமிர்ந்து நிற்பார்கள். புதியதோர் உலகு செய்ய வள்ளுவரும் பாவேந்தரும் வழங்கிய கருத்துக்களைப் புரிந்து கொள்வதால், மனித குலம் மாண்புற்று வாழச் செயல்படுவார்கள்.

அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம் தேனீ போன்றவர். வண்ண வண்ண இலக்கியங்களை நாடித் தேடிச் சென்று துளித்துளியாக இருக்கும் கருத்துத்தேனைத் திரட்டி நமக்குக் குடம் குடமாக அருந்தக் கொடுக்கின்றார். அவர் செய்கின்ற இறவாத் தமிழ்ப்பணி அவருக்கு ஏற்றம் தரும். அவரை, அவர் பணியை வாழ்த்துவோம். இது போல், தமிழை வளப்படுத்த இன்னும் பல நூல்கள் எழுத அவருக்கு இறையருள் கிட்ட வேண்டுவோம்.

திண்டுக்கல்
11.12.2002

அன்புடன்
மா.பா. குருசாமி

அணிந்துரை

பேராசிரியர் இரா. மோகன்

தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர், தமிழியற்புலம்
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021.

காரைக்குடிக் 'கம்பன் கழகம்' என்றால், பெரியவர் சா.கணேசனின் நினைவு உடனே ஓடி வரும்; அதுபோல், கோயிற்பட்டித் 'திருவள்ளுவர் மன்றம்' என்றால் பேராசிரியர் அ.சங்கரவள்ளிநாயகத்தின் நினைவு மோனனையப் போல் முன்னே வந்து நிற்கும். 'தமிழால் உணர்வாள்வோம், குறளால் உலகாள்வோம்' என்னும் கொள்கை முழக்கத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு பல்லாண்டுக் காலமாகத் திருவள்ளுவர் மன்றத்தைக் கட்டிக் காத்து வருபவர் பேராசிரியர் அ.சங்கர வள்ளிநாயகம். இவர் 'செக்கிழுத்த செம்மல்' வ.உ.சிதம்பரனாரின் பனுவல்களை ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். 'திருக்குறள் வேள்', 'குறள்நெறி பரப்பும் குரிசில்', 'குறள் பரப்பும் செம்மல்', 'வ.உ.சி. விருதறிஞர்', 'குறள் உரைச் செம்மல்', 'தமிழ் இலக்கியச் சிந்தனையாளர்', 'தமிழ்ப்பணிச் செம்மல்' என்னும் சீரிய விருதுகளைத் தம் உயரிய பணிகளுக்காகப் பெற்றிருப்பவர். பொதுவாக, எழுத்திலே உள்ளவர்கள் பேச்சிலே முத்திரை பதிக்க மாட்டார்கள்; பேச்சிலே தடம் பதித்தவர்கள் எழுத்திலே வல்லவர்களாக விளங்க

மாட்டார்கள்; எழுதவும் பேசவும் தெரிந்தவர்கள் இலக்கிய அமைப்பிலே தலைமைப் பொறுப்பிலே வீற்றிருந்து முனைப்புடன் பணியாற்றமாட்டார்கள். இவற்றிற் கெல்லாம் விதி விலக்காக அமைந்து எழுத்து, பேச்சு, இலக்கிய அமைப்பு என்னும் மூன்று துறைகளிலும் முழு மனத்துடன் ஈடுபட்டு முத்திரை பதித்து வருபவர் பேராசிரியர் அ. சங்கரவள்ளிநாயகம். கலை வண்ணமும் கருத்து வனப்பும் கொண்ட அவரது ஆறு கட்டுரைகளின் தொகுப்பே இப்பொழுது நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் 'வள்ளுவப் பேரொளியர்' என்னும் இவ்வழகிய நூலாகும்.

''வான்புகழ் வள்ளுவம் தந்த வள்ளுவப் பெருமகனார் முற்காலத்தவராவார். எனினும் முக்காலத்திற்கும் அவர் உரியர் ஆவார். தேன்தமிழ்ப் பாக்களில் தேவையான புரட்சி செய்த பாரதிதாசன் இக்காலத்தவராவார். எனினும் எக்காலத்திற்கும் ஏற்புடையவராக அவர் இலங்குகின்றார்'' என்னும் முதற்கட்டுரையின் தொடக்க வரிகளே முத்தாய்ப்பாக அமைந்து, ஆசிரியரின் ஆய்வுலகிற்குள்ளே நம்மை ஆற்றுப்படுத்துகின்றன. சுருங்கக் கூறின், ''புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாரதிக்கு மட்டும் தாசனாகார். அவர் யாத்துள்ள பாடல்களில் குறள் தாசனாகவும் கொலு வீற்றிருக்கின்றார்'' என்னும் கருத்தின் விளக்கமாகவே இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது எனலாம்.

இலக்கியம் என்பது தனியுடைமையன்று; யாருடைய சொந்தச் சொத்தும் அன்று. இன்னும் குறிப்பாகவும் சிறப்பாகவும் சொல்ல வேண்டுமென்றால், இலக்கியம் என்பது கல்லூரி அல்லது பல்கலைக் கழக வகுப்புக் களுக்கு அப்பால்தான் மிகுதியாகச் செயல்பட வேண்டும். ''சங்க இலக்கியத்தில் வாழ்க்கைக்கு உதவும் பல இலக்கியச் செய்திகள் இருந்தும் அதைக் கல்லூரிக்குள்ளே

மறித்துப் போட்டு, இலக்கிய உலகம் சார்ந்த மக்கள் நாவில் வழங்காமல் இருக்கும்படிச் செய்துவிட்டார்கள். இத்தன்மையான கதி எந்த இலக்கியத்திற்கும் நேர்ந்து விடக் கூடாது எனக் கவலைப்படுபவர் க.நா.சுப்பிரமணியம் ஆவார். அவர்தம் கவலையைப் போக்கும் சிந்தனையே என்னை இந்நூல் எழுதத் தூண்டியது'' எனத் தம் உள்ளத்தை ஒளிவு மறைவு இல்லாமல் திறந்து காட்டியுள்ளார் பேராசிரியர் அ. சங்கரவள்ளிநாயகம்.

வான்புகழ் வள்ளுவர், பாவேந்தர் பாரதிதாசன் ஆகிய இருவரது கவிதைகள் குறித்துப் பேராசிரியர் சங்கரவள்ளிநாயகத்திற்குத் தெளிவான - திட்டவட்டமான கருத்து உள்ளது. பேராசிரியரின் பார்வையில், ''சமுதாயத்தைப் பற்றிப்பாழ் செய்யும் பிணிகளைத் தீர்க்கும் அருமருந்தாக, அமிழ்தாக வள்ளுவர், பாரதிதாசன் கவிதைகள் விளங்குகின்றன. அவ்விருவர் தம் கவிதைகள் வெறும் போதைப் பொருட்கள் அல்ல. ஒட்டி, உலர்ந்து, வதங்கி, வாடிப்போயுள்ள இற்றைச் சமூகம் எழுச்சி பெறத் துணை செய்யும் திறமான உரமாக அவர்தம் கவிதைகள் காணப் பெறுகின்றன.''

'இருபெரும் கவி இமயங்கள்' என்ற கட்டுரை, சிந்தனையைச் செழுமைப்படுத்தும் கவிதைகளை யாத்த செம்மாந்த புலவர்களான திருவள்ளுவரைப் பற்றியும் பாரதிதாசனைப் பற்றியும் அறியலாகும் செய்திகளை ஒருசேரத் தொகுத்துத் தருகின்றது. 'மனித இனம் என்ற சிப்பி ஈன்றெடுத்த விலைமிகுந்த நன்முத்து' என்பது பேராசிரியர் சங்கரவள்ளிநாயகம் திருவள்ளுவருக்குச் சூட்டும் புகழாரம் ஆகும். இதேபோல், 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியக் களத்தில் பாரதிக்குப் பின் புதுத்தடம் படைத்த குமுகாயப் புரட்சியாளர் என்பது பாரதிதாசனைப் பற்றிய மதிப்பீடாகும். பேராசிரியரே இந்நூலில்

இன்னோர் இடத்தில் குறிப்பிடுவது போல், ''பாட்டால் பரமனைத் தொழலாம்'' என்று இருந்த நிலையை மாற்றிப் 'பாட்டால் பாமரனின் இதயத்தையும் தொடலாம்' என்று ஆக்கிய பெருமை பாரதிதாசனுக்கு உண்டு.''

'வள்ளுவத்தில் காலூன்றிய கவிஞர்கள்' என்னும் நூலின் மூன்றாம் கட்டுரை, முப்பாலின் சொல்லையும் பொருளையும் தமிழ்ப் புலமை உலகம் பொன்னே போல் போற்றி வரும் பாங்கினைப் புலப்படுத்தி நிற்கின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், பிரபுலிங்க லீலை, திருவருட்பா, பாரதியார் பாடல் ஆகியவற்றில் குறள் மணம் கமழும் இடங்களை இக்கட்டுரை நன்கு எடுத்துக் காட்டியுள்ளது.

'உரைவழிப் புலனாகும் வள்ளுவ உள்ளம்' என்னும் நூலின் நான்காம் கட்டுரை, 'குயில்' இதழில் 'வள்ளுவர் உள்ளம்' என்னும் தலைப்பில் பாரதிதாசன் எழுதிய குறள் உரையின் அமைப்பினையும் அழகினையும் நயத்தினையும் நுட்பத்தினையும் விரிவாக எடுத்துரைத்துள்ளது. ''சமயச் சார்பற்ற முறையில் - வள்ளுவரின் உள்ளம் புலனாகும் வகையில் - சரியாக எழுதிச் செல்வது பாரதிதாசன் திருக்குறள் உரையில் காணலாகும் தனிப்பெரும் பண்பு'' என்பதே இக்கட்டுரையின் அடிநாதமாக விளங்கும் கருத்தாகும். பதச் சோறாக, முதல் அதிகாரத்தில் இறுதிக் குறளின் தொடக்கமாக வரும் 'பிறவிப் பெருங்கடல்' என்னும் தொடருக்குப் பாரதிதாசன் எழுதியிருக்கும் உரை விளக்கத்தை இங்கே சுட்டிக் காட்டலாம்:

''ஈண்டுப் பிறவி என்றது மாண்டு பிறப்பது அன்று. நொடிதோறும் மிகப்பலவாக வேறுபட்டு வரும் மனக்குறிப்பையே. இவ்வாறு புத்தரும் கூறுகின்றார்.'' ஆற்றல்மிக்க கவிஞராக மட்டுமல்லாமல், அரும்பொருள்

உரைக்கும் உரையாசிரியராகவும் பாரதிதாசன் விளங்கும் பான்மையினை இக்கட்டுரை அழுத்தம் திருத்தமாகவும் ஆணித்தரமாகவும் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளது.

'வள்ளுவம் போற்றிய தெள்ளுதமிழ்ப் புலவர்' என்னும் ஐந்தாம் கட்டுரை பாரதிதாசன் முப்பாலைத் தம் பாடலாகிய தமிழ்ப்பாலுடன் கலந்து ஊட்டிய பாங்கினை அலசி ஆராய்கின்றது. பாரதிதாசனின் நெஞ்சைத் திருக்குறள் அள்ளியது போல் வேறு எந்தத் தமிழ் நூலும் அவரது நெஞ்சைத் தொட்டதாகத் தெரியவில்லை என்றும் காப்பியங்களிலும் தனிப்பாடல்களிலும் எங்கெல்லாம் குறள் மணத்தைக் கமழச் செய்ய முடியுமோ அங்கெல்லாம் பாரதிதாசன் குறள் மணத்தைக் குறைவின்றிக் கமழச் செய்துள்ளார் என்றும் இக்கட்டுரையில் உரிய சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார் பேராசிரியர் சங்கரவள்ளிநாயகம்.

'பாரதிதாசனின் பாக்களில் குறளாட்சி' என்னும் நிறைவுக் கட்டுரை, பாரதிதாசன் தம் பாடல்களில் குறளைப் பல்வகையில், பல் வடிவில் பயன்படுத்திக் கொண்டுள்ள பாங்கினை விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்துள்ளது. மொத்தத்தில் குறள்பால் பாரதிதாசன் கொண்டிருந்த தோழமையையும் அவரது குறள் ஆளுமையையும் புலப்படுத்துவதில் இந்நூலின் வாயிலாகப் பேராசிரியர் சங்கரவள்ளிநாயகம் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற்றுள்ளார் என்பது நெற்றித் திலகம்.

''குறள் படித்தேன் குறள் படித்தேன்
குணமடைந்தேன் நான் - தூய
குருதி கொண்டேன் நான்!
உறுதி கொண்டேன் நான்!''

எனத் திருக்குறளைக் கற்றதனால் ஆய பயன்களாகப் பாரதிதாசன் பாடியுள்ள வைர வரிகளையே நாம் பேராசிரியர் அ.சங்கரவள்ளிநாயகத்திற்கும் சூட்டி மகிழ்வோம்!

மனக் கொழுமையும் உயிர்ச் செழுமையும் நல்கும் அவரது தமிழுக்குத் தலைவணக்கம் செலுத்துவோம்.

மதுரை - 625 021
24.11.2002.

இரா. மோகன்

என்னுரை

முச்சங்கங்கள் கண்டு, மூவேந்தர் மடி தவழ்ந்து, தென்பொதிகைத் தென்றல் தொட்டுக் குற்றால அருவி குளித்துப் பாண்டி முத்தணிந்து, சோழ நாட்டின் நெய்ச் சோறு வாய்மடுத்து, வீர மகளிர் மடியில் குதித்து, வையையாற்றங்கரையில் விளையாடிய வீறு பெற்றது தன்னேரில்லாத் தண்டமிழாகும். காலத்தால் மூத்தவளாயினும் இன்னும் இளமை எழில் பொங்கித் ததும்பும் தமிழ்த்தாய் மகவற்ற மலடியல்லள். செந்தமிழ்த் தாயின் செழுமைக் கருவறையில் கண்மூடிக் கால்களை அசைத்து நிலம் வந்த அவளின் தமிழ்ப்பிள்ளைகள் அறிவுச் சுடர்கள் ஆவர். அவர்கள் ஏற்றிய ஒளிச்சுடரில்தான் நம் சிந்தனை தெளிவுற வேண்டும். அதுவே நம் வேட்கையாகும். இவ்வேட்கை நிறைவுறவே இச்சுடர்களை ஏற்றுகிறோம்; போற்றுகிறோம்.

தமிழ்த்தாய் பெற்றெடுத்த அறிவுச் சுடர்கள் மிகப் பலவாயினும் இரு சுடர்கள் நம் நினைவில் நின்று ஒளிவிடற்கு உரியனவாகும். ஒன்று முற்பட்ட காலம் வழங்கிய ஞாலச் சுடராகும். மற்றொன்று அண்மைக்காலம் ஈன்றெடுத்த ஞானச் சுடராகும். ஞாலச்சுடர் வான்புகழ் வள்ளுவராவார். ஞானச்சுடர் பொறிபறக்கும் புரட்சிப் பாக்களைப் பாடிய பாவலர் பாரதிதாசனாவார். இருவரும் காலத்தால் கனிந்தவரே ஆயினும் காலத்தையே கனியச் செய்தவர்கள்

அவ்விருவராவர். இவ்விரு பெருங்கவிஞர்களும் என்றுமுள தென்தமிழ், சீரிளமைத் தமிழ், வண்டமிழ், வளர்தமிழ், செந்தமிழ், செழுந்தமிழ் என்றெல்லாம் அடைமொழிகளால் சிறப்பெய்தி, உய்திக்கு வழிகாட்டும் உயர்தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலமையர் ஆவர்.

சாதி, சமய, இனப் பாகுபாடுகள் இவ்விருவரையும் அண்டவோ, தீண்டவோ முடியவில்லை. மூடப் பழக்கங்களால் முடை நாற்றம் வீசிக் கொண்டிருந்த குமுகாயத்தின் தளர்வையும் உலர்வையும் போக்கி, மலர்ச்சியையும் வளர்ச்சியையும் குமுகாயத்தின் நன்கொடைகளாக்கிய நற்றமிழ்க் கவிஞராவர். வள்ளுவர் காலத்திலேயே அவர் யாத்த நூலிற்குக் கிடைத்த புகழ்ப் பூந்துணரால் ஆக்கப்பட்டதே திருவள்ளுவ மாலையாகும். குறளின் சீர்மையிலும் நேர்மையிலும் அமைப்பிலும் அழகிலும் ஈடுபடுத்திக் கொண்ட புலவர்கள் அனைவரும் தம் படைப்புக்களில் குறளை வாழ்விக்கச் செய்துள்ளனர். குறளைத் தொடாமையும் பயன்படுத்தாமையும் தம் படைப்புக்களில் இல்லாமையாகின்ற பொழுது, அவர்தம் படைப்புக்கள் இறவாச் சிறப்பினைப் பெற்றுப் பெருஞ் சிறப்புடன் விளங்குகின்றன. சிலப்பதிகாரக்கால அடிகள் தொடங்கி இன்று வரையிலுள்ள சிறப்பான தீந்தமிழ்க் கவிஞர்கள் குறளைத் தம் படைப்புக்களுக்கிடையே விரவச் செய்தமை பொன்மலரை நாற்றமுடையச் செய்த நற்செயலாகும்.

படைப்புக்களில் உடைப்பெருஞ் செல்வமான உயரிய குறளைக் குறைவின்றி நிறைவுறப் பயன்படுத்தியுள்ள பாவலர்கள் எண்ணற்றவராயினும் எடுத்து மொழியப்படும் ஏற்றத்தினைப் பெற்றவர் புரட்சிக் கவிஞராவார். தொடும் வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் குறளைத் தொட்டுத் தம் படைப்புக்களை அவர் துலங்கச் செய்துள்ளார்.

''சாதியில்லை தம்பி - மக்கள்
தாழ்வு யாவும் இல்லை
தீதகற்ற வந்த - நம்
திருக்குறளைப் பாராய்''

என்று 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனப் பிறப்பால் இன்று வளர்ந்துள்ள சாதிப் பாகுபாட்டினை அன்று சாடியுள்ள திருக்குறளைத் தம் உச்சிமேற் வைத்துப் பாரதிதாசன் மெச்சுகின்றார். வள்ளுவரின் நூலே நல்ல வழியளிக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையை அவர் கொண்டிருந்தார். எனவேதான் தீதகற்ற வந்த போதலர்க்கு ஒப்பான திருக்குறளைப் பயன்படுத்தப் பறைசாற்றப் பரப்பத் தம் கவிதைப் படைப்புக்களைப் பாரதிதாசன் கருவியாக்கிக் கொண்டார்.

இந்நூலில் அடங்கியுள்ள ஆறு கட்டுரைகளும் தமிழ் வாழ்வின் நல்லாற்றிற்கு ஆற்றுப்படுத்தும் தன்மையன வாகும். கலைத்தன்மை, கவிதைத் தன்மை இவற்றின் இலக்கணங்களைச் சுட்டி, வள்ளுவர், பாரதிதாசன் ஆகியோர் படைப்புக்கள் அவ்விலக்கணங்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் சிறப்பை முதற் கட்டுரை நம் முன் நிறுத்துகின்றது. வள்ளுவர், பாரதிதாசன் வாழ்க்கை வழிப் புலனாகும் செய்திகளையும் அவ்விருவர் தம் படைப்புக்களின் அருமை, பெருமையினையும் எடுத்தோதுவதாய் இரண்டாம் கட்டுரை அமைந்துள்ளது. வழிவழியாக வள்ளுவர் வழியைத் தம் படைப்புக்களின் வாயிலாகப் பின்பற்றியுள்ள கவிஞர் பெருமக்களை மூன்றாம் கட்டுரை முறையான அறிமுகத்தைச் செய்துள்ளது. நான்காம் கட்டுரை வள்ளுவர் உள்ளமாகிய அடித்தளத்தில் பாரதிதாசன் எழுப்பியுள்ள உரை மாளிகையை உயர்த்திக் காட்டுகின்றது. ஐந்தாம் கட்டுரை வள்ளுவம் எவ்வெவ் வழியிலெல்லாம் பாரதிதாசனை

ஈர்த்துள்ள இயல்பினைப் புலப்படுத்துகின்றது. பாரதிதாசன் குறளை எவ்வெவ் வடிவத்திலெல்லாம் எடுத்தாண்டுள்ளார் என்பதை ஆறாம் கட்டுரை சித்திரித்துள்ளது.

பல்வேறு பணிகளுக்கிடையேயும் அணிந்துரை நல்கி, நூலை நயப்படுத்திய அருவிப் பேச்சாளரும் ஆன்மீகச் சிந்தனையாளரும் அன்றைய புலமைப் பித்தன் வழிவில் இன்று வந்துற்ற தமிழாளியுமான நெல்லைத் திருமிகு. கண்ணன், தமிழ் உலகில் தமக்கெனத் தனிப் பாதையை அமைத்துக் கொண்டவரும் எழுத்து, பேச்சு ஆகியவற்றின் தக்க எடுத்துக்காட்டாய் இலங்குகின்றவரும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரும் ம.கா. பல்கலைத்தமிழ்த்துறைத் தலைவருமான அறிஞர் திருமிகு இரா. மோகன், காந்தியத்தை உளனில், உயிரில், உணர்வில் இரண்டறக்கலக்கச் செய்துள்ளவரும் குமரப்பாவகுத்துக் காட்டிய பொருளாதாரத் துறையின் மேதையும் வெள்ளுடையில் வேதாந்த, சித்தாந்தம் பேசுபவருமான அறிஞர் திருமிகு. மா.பா. குருசாமி ஆகியோர்க்கு ஆழமான நன்றியுணர்வைப் புலப்படுத்துவதில் புளகாங்கித முறுகின்றேன்.

படியெடுப்பதில் துடிப்பாய்த் துணைநின்ற இளவல் திருமிகு. உ. மங்களேசுவரன், நல்லாசிரியர் கவிஞர் திருமிகு. கி. சத்தியமூர்த்தி, எனதருமை மாணவச் செல்வி திருமிகு. செள. கீதாபிரியதர்சினி, கணேசன் கணிப்பொறி நிறுவன உரிமையாளர் ஆகியோர் எனது நன்றிக்கு உரியர் ஆவர். நூலைத் தரமாகவும் தகுதியாகவும் வெளியிட்டுப் பெருமை சேர்த்த தமிழகப் பதிப்பகங்களுள் தனி முத்திரை பதித்ததுவும் கங்கையைப் போல், காவிரியைப் போல் கவிதை ஊற்றினைப் பெருகச் செய்து, அண்மையில் தமிழக மக்களின் கண்ணீர் ஊற்றைத் திறக்கச் செய்த நிலையில்

இயற்கை எய்திய இறவாப் புகழுக்குரிய கவிஞர் மீராவின் மைந்தர் திருமிகு. இரா.கதிரால் பாங்காய் நடத்தப் பெறுவதுமான தஞ்சை, 'அன்னம்' பதிப்பகத்தை என்றும் மனத்தில் இருத்தி வாழ்த்துவேன்.

வள்ளுவன் மனிதனைத் தேடினான்; பாரதிதாசனும் தேடினார்; இன்று நாமும் தேடிக் கொண்டிருக்கின்றோம். இவ்வவல நிலை அகல இளைய தலைமுறை வீறுடன் எழவேண்டும். அங்ஙனம் இளைய தலைமுறையை எழச் செய்யுமானால் இந்நூல் எழுதப்படுவதற்குரிய குறிக்கோளை நிறைவு நிலையில் இந்நூல் எய்தியதாகக் கருதுவேன். இளைய தலைமுறையே! சோம்பலை முறித்துச் சுடர் முகத்துடன் எழுக! வள்ளுவப் பேரொளியில் கவிதை உலகில் பீடுநடை பயின்ற பாரதிதாசனின் குறள்தாக்கம் உங்களுக்கும் உரியதாகுக!

கோயிற்பட்டி
03.12.2002.

அ. சங்கரவள்ளிநாயகம்
தலைவர்
திருவள்ளுவர் மன்றம்.

இந்நூல்.....

நூலின் இத்தலைப்புப் பற்றி என்னைச் சிந்திக்கத் தூண்டியவரும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பாரதிதாசன் இருக்கையில் அமர்ந்து, தமிழுக்கு அணியாம் பல பணிகளை ஆற்றியவரும் நுண்மாண் நுழைபுலச் செம்மலுமானவரும் எனது நினைவில் என்றும் நீங்கா இடம் பெற்றவரும் அண்மையில் தமிழறிஞர் உலகைத் தாளாத் துயரில் ஆழ்த்தி இயற்கை எய்தியவருமான அறிஞர் தா. வே. வீராச்சாமி அவர்கட்குப் படைக்கப்பட்ட நினைவுப் பனடயலாகும்.

உள்ளடக்கம்

கலையும்
கவிஞனும் 25

இருபெரும் கவி
இமயங்கள் 38

வள்ளுவத்தில்
காலூன்றிய கவிஞர்கள் 56

உரைவழிப் புலனாகும்
வள்ளுவ உள்ளம் 65

வள்ளுவம் போற்றிய
தென்னுதமிழ்ப் புலவர் 95

பாரதிதாசன் பாக்களில்
குறளாட்சி 116

1

கலையும் கவிஞனும்

வான்புகழ் வள்ளுவம் தந்த வள்ளுவப் பெருமகனார் முற்காலத்தவர் ஆவார். எனினும் முக்காலத்திற்கும் அவர் உரியவர் ஆவார். தேன்தமிழ்ப்பாக்களில் தேவையான புரட்சி செய்த பாரதிதாசன் இக்காலத்தவராவார். எனினும் எக்காலத்திற்கும் ஏற்புடையவராக அவர் இலங்குகின்றார். செய்யுள் அமைப்பில் யாப்புப் புரட்சியை இருவருமே இணையற்ற முறையில் நிகழ்த்தியுள்ளனர். வள்ளுவர் அறத்தில் புரட்சியை ஆக்கிக்காட்டியவர். பாரதிதாசன் புரட்சியில் அறம் பேணியவராவார். புரட்சிக்கவிஞர் பாரதிக்கு மட்டும் தாசனாகார். அவர் யாத்துள்ள பாடல்களில் குறள்தாசனாகவும் கொலுவீற்றிருக்கின்றார். சங்க நூல்கள் அவருக்குத் தமிழ் வளநெறி காட்டின. வள்ளுவமோ அவருக்குத் தமிழ் வாழ்வு நெறி காட்டியது.

திருக்குறள் அறநெறிகள் நிறைந்ததொரு வாழ்வியல் நூல்; தமிழர்தம் தனிமறையாகவும் உலகப்பொதுமறையாகவும் திகழ்கிறது. பலர் திருக்குறளைப் பாராட்டியுள்ளனர். எனினும் பாரதிதாசன் பாடலில் எவரும் மறுப்புக்கூற இயலாத வண்ணம், இந்நூலுக்கு நிகர் இந்நூலே; பிற நூல் உலகிலே இல்லை என்ற அழுத்தமான பாராட்டு மேலோங்கி இருக்கின்றது. அவர் அளவிற்கு எவரும் பாடலில் பாராட்டுக் கூறியிருப்பதாகத் தெரியவில்லை.

உலகப் பழமையில் ஒளி செய்யும் திராவிட இனமே தமது இனம் என்றும் அது உலக வரலாறு என்னும் ஆலமரத்தின் சிறிய வித்தென்றும் பாரதிதாசன் குறிப்பிடு கின்றார். தமிழரின் அடிமை வாழ்விற்குக் காரணமான மனு முதலியவற்றை அழித்து எதிர்ப்பதே தமிழர் வாழ்விற்கு உதவும் அறச்செயல் என்பது அவரது கருத்தாகும். ஒருத்தியைப் பலர் மணந்துகொள்வது, பிச்சை எடுப்பதை உயர்வாகக் கருதுவது, பசியெடுத்தால் மானமிழப்பது, உயிர்களைக் கொன்று வேள்வி செய்வது, உருவ வணக்கம் செய்து கடவுளை வழிபடுவது, பெண்களை இழிவாக நடத்துவது, மக்களுக்குள் வேற்றுமை கற்பிப்பது, கொடுமை செய்தபின் அதற்குக் கழுவாய் உண்டு என ஒப்புவது, தலையெழுத்து எனும் விதியை ஏற்பது, பொய்ம்மையான நூல்களை மெய்யான நூல்கள் எனப் பிற நாட்டினரை நம்ப வைப்பது, தமிழ் நாட்டில் தமிழால் வாழ்ந்தும் தமிழ் அழியச் செயல்படுவது, காதல் மணம் தீதென்பது, முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகிய பிறவிக்கரடி விடுவது, நீதி எல்லார்க்கும் பொது என்றில்லாமல் ஒரு குலத்திற்கு ஒரு நீதி என்பது, பெண்களுக்குக் கற்பொழுக்கம் தேவையில்லாதது ஆகியவற்றை ஆரிய நாகரிகமாகக் குறியிட்டு, இவையில்லாத அரசும் நாடும் குறள்காலத்தன என்றும் மீண்டும் குறள்காலத்தரசையும் நாட்டையும் மலரச் செய்வதே தமிழரின் மாண்புடைச் செயலாகும் எனக் கருதியதால்தான் குறள்நெறிச் சிறப்பினை உணர்த்தும் வாயிலாகப் பாரதிதாசன் தம் பாடல்களைப் பயன்படுத்தி யுள்ளார். இனி விலைமதிக்க முடியாக்கலை, விவரிக்க இயலாச் சிறப்புடைய இலக்கியக் கலை, படிப்பாரை இன்பத்தில் நிலைகொள்ளச் செய்யும் கவிதைக் கலை, அத்தகைய கவிதைகளை யாத்துத்தந்துள்ள கவிஞர்களின் பேசமுடியாப்பெருமை ஆகியன பற்றிப் பொதுத்தன்மை நிலையில் சிந்திப்போம்.

எழில்மிகுகலை எதுவாகும்?

தான் துய்த்த ஓர் உணர்ச்சியை அப்படியே பிறரையும் துய்க்கும்படித்தூண்டும் மன வெளிப்பாடே கலையாகும். ஓவியனாக இருந்தாலும் சிற்பியாக இருந்தாலும் கவிஞனாக இருந்தாலும் அவர்களால் படைக்கப்படுவன அவர்தம் துய்ப்பில் இருந்து உருவானவையாகும். அல்லாததெல்லாம் வெறும்கற்களே; வெற்றுச்சொற்களே. கலைஞனின் கைவண்ணமோ கருத்துவண்ணமோ கலக்கும்போதுதான் வெற்றுக் கல்லும் கலைத்தன்மை பெற்று விளங்குகின்றது. வெற்றுச் சொல்லும் கற்றவர் பாராட்டும் கவிதையாகின்றது. அனைத்து நுண்கலை களுக்கும் அடிப்படையாக மூன்றை அறிஞர் அறவாணன் சுட்டுகின்றார்.

அவை:

1. கலைவழி வெளிப்படும் பொருள்
2. கலையின் நோக்கம்
3. கலை வெளிப்படும் முறை என்பனவாகும்.

கலை என்பதைப் புலவன் உள்ளத்திலே தோன்றி எழும் எழுச்சியாகக் காட்டுகின்றவர் பாரதிதாசன் ஆவார். அது புலன் வழியே பற்றி மனச்சுருள் நீக்கி, மனவளத்தை மலர்விப்பது எனக் குறிப்பிடுகின்றவர் சேக்கிழார் ஆவார். கலை உலகத்து நுகர்வுகளையெல்லாம் மீண்டும் படைத்துத் தருகின்றது. ஒரு மனிதனின் துய்த்தல் உணர்வை வார்த்தைகளின் வழியாக மூன்றாவது மனிதனுக்கு எடுத்துச் சொல்லப்படுவதே கலையாகும். கலை தனிமனிதனுக்காக வேண்டுமானால் இருக்கலாம்; ஒரு குறிப்பிட்ட குழுவினருக்காகவும் இருக்கலாம்; ஒரு சமுதாயத்திற்காக இருக்கலாம்; முடியுமானால் இக்காலத் திற்காகவும் இருக்கலாம். ஆனால் எக்கலையும் கலைக்

காக இருந்தல் இயலாது என்பது க.நா.சுப்பிரமணியத்தின் கருத்தாகும். வள்ளுவரும் பாரதிதாசனும் தத்தம் துய்ப்பிலிருந்தே தமது படைப்புக்களை வழங்கியுள்ளனர். அவர்தம் கருத்து வண்ணமும் கைவண்ணமும் அவர்களின் படைப்புக்களைக் கலைத்தன்மையைப் பெறச் செய்துள்ளன.

இலக்குடைய இலக்கியக்கலை:

மனிதனின் மொழியுடன் தொடர்புடையதாய் மனிதனின் சிந்தைக்கோ, உணர்விற்கோ, கற்பனைக்கோ விருந்தாய் அமைவதாய், ஒரு குறிப்பிட்ட வடிவம் கொண்டதாய் உள்ளது எதுவோ அதுவே இலக்கியமாகும் என வரையறுத்துக் காட்டுகின்றவர் அறிஞர் பாலச்சந்திரனாவார். இலக்கியம் என்பது எழுத்து வடிவில் வெளிப்படும் கலையாகும். கற்பனையுடன் தொடர்புடையதாய் உள்ளதையும் ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்களின் பண்பாட்டுக் கருவூலத்தைத் தாங்கி வருவதையும் இலக்கியம் என்கிறோம். இலக்கியம் என்பது ஒரு படைப்புக்கலையாகும். கலைஞர் அல்லது கவிஞர்தம் உள்ளத்தை அசைத்து, உணர்வை மிகுதியாக்கிக் கலையுணர்வைத் தட்டி எழுப்பும் ஒன்றனுக்கு நல்வடிவம் நல்கிக் கற்பவர் உள்ளம் மகிழ்வு கொள்ளுமாறு அல்லது பயில்வார்க்கு ஆர்வத்தை உண்டாக்கும் வண்ணம் இலக்கியத்தைப் படைக்கின்றனர்.

கலைஞர்களின் (அல்லது) கவிஞர்களின் கலையுணர்வைத் தட்டி எழுப்பும் ஒன்றிற்குரிய மூல ஊற்று மனித வாழ்க்கையில் மனிதனைச் சுற்றியுள்ள இயற்கையில் அமைந்திருக்கலாம். மனிதவாழ்க்கையை இயற்கையுடன் பொருந்த வைப்பதற்குக் கருவியாக

இருப்பது இலக்கியமே ஆகும். இலக்கியத்தை இயற்கை யின் வாழ்க்கை பற்றியும் மனித சமுதாய வாழ்க்கை பற்றியும் எழும் ஒரு கலையாகக் கொள்ளலாம். வாழ்க்கையிலிருந்து இலக்கியம் உருவாகின்றது. உருவானபின் பயில்வார் உள்ளத்தே சில புதிய உணர்வுகளைத் தோற்றுவிக்கின்றது; எதிர்கால இலக்கியப் பண்பாட்டிற்குரிய சில புதிய சிந்தனைகளுக்கும் உணர் விற்கும் வித்திடுகின்றது. பழைய இலக்கியங்கள் ஒருபுறம் வாழப் பழமையின் அடிப்படையில் சில புதிய இலக்கியங்களும் தோன்றுகின்றன. ஒருகாலத்தே, ஓர் இடத்தே பிறந்த இலக்கியம் மற்றவர்தம் வாழ்க்கையைப் பயன்படுத்தவும் உயர்த்தவும் காலம் கடந்தும் இடம் கடந்தும் பயன்படுகின்றது என அறிஞர் பாலச்சந்திரன் சுட்டுகின்றார். இக்கூற்று வள்ளுவர், பாரதிதாசன் ஆகிய இருவரின் படைப்புக்களுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

பேராசிரியர்கள் இலக்கியத்தைத் தங்கள் சொந்தச்சொத்தாக நினைக்கிறார்கள். இலக்கியத்தைப் பற்றிப் பேசித்தானே பொருளீட்ட வேண்டிதாக உள்ளது என்று அறிஞர் கைலாசபதி கூறுகின்றார். இலக்கியம் வகுப்புக்களுக்கு அப்பால்தான் மிகுதியாகச் செயல்பட வேண்டும் என்பது அறிஞர் க.நா.சுப்பிரமணியத்தின் கருத்தாகும். சங்க இலக்கியத்தில் வாழ்க்கைக்கு உதவும் பல இலக்கியச் செய்திகள் இருந்தும் அதைக் கல்லூரிகளுக் குள்ளே மறித்துப் போட்டு, இலக்கிய உலகம் சார்ந்த மக்கள் நாவில் வழங்காமல் இருக்கும்படிச் செய்துவிட்டார்கள். இத்தன்மையான கதி எந்த இலக்கியத்திற்கும் நேர்ந்து விடக்கூடாது எனக் கவலைப்படுபவர் க.நா. சுப்பிர மணியம் ஆவார். அவர்தம் கவலையைப் போக்கும் சிந்தனையே என்னை இந்நூல் எழுதத் தூண்டியது.

இலக்கியமரபு:

தமிழ் இலக்கிய மரபு என்று சொல்லுகின்றதோமே தவிர, தமிழ் இலக்கிய மரபுகள் என்று சொல்லுவதில்லை. இதற்குரிய காரணம் என்ன என்று சிந்திப்பது இன்றியமை யாததாகும். மரபு காலத்திற்குக் காலம் முழுமையாக மாறும் சிறப்புள்ளது எனத் தெரிகின்றது. அது வளர்ந்து தன்னுடன் புதுப்புதுச் செய்திகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டே இருக்கின்றது. மரபைக் கரணைகளை ஒன்றாக்கிக் கோர்த்த ஒரு நீளச்சங்கிலி என்று உருவகப் படுத்தலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு கரணை புதிதாகச் சங்கிலியில் சேர்க்கப்படுகின்றது. மரபை மீறக் கூடாது என்று எண்ணினால், புதுமை இலக்கியம் செய்யவே முடியாது. ஒவ்வொரு நூலுக்கும் தக்க புதுமொழியை உருவாக்கிக் கொள்கின்றனர். இது பழைய மரபாகவும் இருக்கின்றது. புதுமரபுக் கரணைக்கு வழியாகவும் இருக்கின்றது என்பதை இலக்கியத்தின் சிறப்பாகக் காட்டும் க.நா.சுப்பிரமணித்தின் கருத்திற்கேற்ப, வள்ளுவர், பாரதிதாசன் ஆகியோரின் படைப்புக்கள் அமைந்துள்ளன.

கவினுறு கவிதைக்கலை:

கவிதைக் கலையே தாய்க்கலையாகும். ஒருகாலத்தில் இசைக்கலையைச் சார்ந்தே பிறந்தது கவிதைக்கலையாகும். ஆனால் காலப்போக்கில் கவிதைக்கலையே பிறகலை களைப் பெற்றெடுத்து வளர்க்கும் தாயாக டலர்ந்தது. வாழ்க்கையின் செய்திகள், நுகர்வுகள், சிக்கல்கள் ஆகியவற்றை உணர்ச்சியும் கற்பனையும் மேலோங்கி நிற்கும் வண்ணம் படைப்பது கவிதைப் பண்பு வாய்ந்த வாழ்க்கை விளக்கமாகும். வாழ்க்கையில் எப்பொரு ளைப்பற்றிக் கவிதை பாடினாலும் அது நம் உணர்வுடன்

உறவுடையதாகிறது. அதே சமயத்தில் வாழ்க்கையின் நடைமுறை உண்மைகள்தம் கற்பனை ஆற்றலால் அதைச் சிறப்புச் செய்கின்றது. கவிதையின் அடிப்படை வாழ்க்கையின் திறனாய்வே ஆகும். என்றும் நிலைக்கும் உண்மையும் ஆழமும் மிகுதியாகப் பெற்றுத் திகழ்வதே சிறந்த கவிதையாகும்.

சமுதாயத்தைப் பிணித்துள்ள பல்வேறு நோய்களை அகற்றும் மருந்தாகக் கவிதைகள் விளங்க வேண்டும். கவிதைகள் வெறும் போதைப் பொருளாக மாறாமல் சமூகத்திற்கு உரமும் திறமும் தேடித்தரும் வழியில் உருப்பெறவேண்டும். அப்போதுதான் சமுதாயம் பிணியற்றுப் பீடுபெறும். கரடு முரடான ஒருமரத்தின் இளந்தளிர் போலவும் மனித உடலின் மிக மென்மையான உறுப்புக்களில் ஒன்றாகிய இதயம் போலவும் நீண்டகாலம் பண்பட்டு வளர்ந்த இசைமரபின் வண்ணம் போலவும் இலக்கியக் கலையின் மிகப்பண்பட்ட ஒரு வடிவமாகக் கவிதை விளங்குகிறது என விளக்குகின்றவர் அறிஞர் பாலச்சந்திரன் ஆவார்.

சிந்தனையிலும் சொற்களிலும் உணர்வு பொங்கித் ததும்புவது அன்றி, வேறு எது கவிதையாகும் என வினவுகின்றவர் மில் எனும் மேனாட்டு அறிஞர் ஆவார். ஓவியக் கலைஞன் ஒருவன் வண்ணங்களின் துணைக் கொண்டு எதை வடிக்கிறானோ, அதைச் சொற்களின் துணைக்கொண்டு வடிக்கும் கலையே கவிதை ஆகும் என்பது மெக்காலேயின் கருத்தாகும். கவிதையாவது உணர்ச்சி, கற்பனை, ஆகியவற்றின் மொழியாகச் சுட்டுகின்றவர் ஆஸ்லிட் என்னும் அறிஞர் ஆவார். கவிதை என்பது அறிவியலின் மறுதலையாகும். அதன் உடனடியான நோக்கம் உண்மையைக் காட்டுவதன்று; இன்பம் வழங்குவதேயாகும் என்று கோல்ரிட்ஜ்

கூறுகின்றார். அனைத்து அறிவினும் உயர்வாக வழங்குவதும் பண்பட்டு இருப்பதுமான ஒரு பகுதி என்றும் அடக்கிவைக்க முடியாதபடி வெளியாகும் வெளியீடு என்று கவிதையை வேர்ட்ஸ்வொர்த் குறிப்பிடுகின்றார். உயர்ந்த உணர்வுகளுக்குரிய விழுமிய நிலைக்களங்களைக் கற்பனையின் துணைக்கொண்டு கவிதை அறிவுறுத்தும் என இரஸ்கின் அறிவிக்கின்றார்.

ஞானி மூலம், ஆற்றின் மூலம் இவற்றை ஆராயக் கூடாது என்பது மரபு. அதேபோலக் கவி மூலத்தையும் ஆராயக் கூடாது என்றுதான் சொல்லவேண்டும். கவிதையைத் துய்க்கலாமேதவிர, அலசி ஆராயக்கூடாது. பூவைப் பிய்த்துப்பார்த்து அதன் அழகின் மருமத்தைக் கண்டுவிட முடியாது. அதேபோலக் கவிதையைப் பிய்த்துப்பார்த்து ஆன்மாவைக்கண்டுகொள்ளுதல்என்பது முடியாதது ஆகும். சமுதாயத்தைப்பற்றிப் பாழ்செய்யும் பிணிகளைத் தீர்க்கும் அருமருந்தாக, அமிழ்தாக வள்ளுவர், பாரதிதாசன் கவிதைகள் விளங்குகின்றன. அவ்விருவர்தம் கவிதைகள் வெறும் போதைப் பொருட்கள் அல்ல. ஓட்டி, உலர்ந்து, வதங்கி, வாடிப் போயுள்ள இற்றைச்சமூகம் எழுச்சி பெறத்துணைசெய்யும் திறமான உரமாக அவர்தம் கவிதைகள் காணப்பெறுகின்றன.

கவிதைக்கலையின் சீரும் சிறப்பும்:

பார்வையற்ற ஒருவன் ஓவிய அழகையோ, சிற்ப அழகையோ பார்த்துத் துய்க்க முடியாது. ஆனால் விழியற்றவனும் தம் மொழியில் எழுந்த கவிதையைத் துய்க்கமுடியும். செவிப்புலன் அற்றான் ஒருவன் இசைக்கலையைத்துய்க்கமுடியாது. ஆனால்செவிடனும் அருமையாகக்கவிதைகளைத்துய்க்கமுடியும். ஊமையன் இசைக்கலைஞனாகவிளங்கமுடியாது; ஆனால்கவிதைக்

கலைஞனாக விளங்கமுடியும். கவிதை நீங்கலான ஏனைய கலைகள் பரம்பரையாக வருவனவாகும். கவிதைக்கலை அப்படிப்பட்டது ஆகாது. கவிஞன் மகன் கவிஞனாக இருத்தல்வேண்டும் என்ற கட்டாயமில்லை; அவ்வாறு இருப்பதும் இல்லை. கடவுள் படைத்த மனிதன் மடிந்து விடுகிறான். ஆனால் மனிதன் படைத்த கவிதைக்கு அழிவு என்பதே இல்லை. சிலை, ஓவியம், நாட்டியம், இசை ஆகியவற்றைத் துய்க்க மொழி ஒரு தடையாக நிற்பதில்லை. கவிதைக்கலை அத்தகையது ஆகாது. அந்தந்த மொழியைப் பயின்றிருந்தால்தான் கவிதைக் கலையைத்துய்க்கமுடியும். தமிழ்மொழிதந்ததகவுடைக் கவிஞர்களே வள்ளுவரும் பாரதிதாசனும் ஆவர். அவ்விருவராலும் தமிழ்மொழி தக்கதான கவிதை வளம் பெற்றுச்செழித்தது.

கவிஞனின் பார்வை:

வானுலக வீதியிலே சுற்றித் தேவர்தம் வடிவழகைக் கண்டு கூறி வருபவரே கவிஞர்; அஃதே கலை என்றிருந்த நிலை மாறிக் கவிஞர் நம்முடனே இருப்பார்; நமது உலகில் தான் உலவுவார்; நாம் காண்பனவற்றையே காண்பார். ஆனால் அவைகளைப்பற்றி இயலாமையால் நாம் கூறத் தயங்குவோம். அறிவுத் தெளிவால், கலைத்திறனால் அவர் கூறுவார். இப்புரட்சியைச் செய்தவர்களே வள்ளுவரும் பாரதிதாசனும் ஆவர். ஆற்றல் வாய்ந்த இவ்விரு பெரும் கவிஞர்களும் தமக்கு முன்னிருந்தோரின் சிந்தனைகளையும் உணர்வுகளையும் பற்றுக்கோடாய்க் கொண்ட அதே பொழுதில், அவற்றை மாற்றியும் புதுக்கியும் ஒருவித இலக்கிய இரசவாதம் செய்துள்ளனர்; தமது காலத்துச் சமுதாயத் தேவைகளுக்கு ஏற்பவும் அறிவு நிலைக்கு இயையவும் பழைய கற்பனைக்கு உருமாற்றம் செய்துள்ளனர். வள்ளுவரும் பாரதிதாசனும் காற்றுப்

போல் கடுகிய மனநிலை உள்ளவராகவும் நீரைப்போல் நெகிழ்ச்சியும் பரந்துபட்டொழுகும் தன்மையும் உள்ளவராகவும் நெருப்பை ஒத்துப் பொதுநோக்கு உடையவராகவும் விளங்குகின்றனர்.

கவிஞரின் பேரும் பெருமையும்:

சாகாவரம்பெற்றுப் பாகாய் இனிக்கும் கவிதைகளைப் படைக்கும் கவிஞர்களின் பேரும் பெருமையும் வார்த்தைகளில் அடங்காதவையாகும். சொந்த மண்ணில் மக்களுடன் உயிர் உறவு பூண்டு, வாழும் நாட்டிடத்துப் பெரும்காதற்கொண்டு, உலக அரங்கில் தன்நாட்டிற்காகப் பெருங்குரலெடுத்து முழங்குபவனே முதன்மைக் கவிஞன் ஆவான். நாட்டு மக்கள் நலம்பெற்று வாழ்தலையும் நானிலத்தோர் மேனிலை கொள்ளலையும் தம் குறிக் கோளாகக் கொண்டு, நடைமுறை வாழ்க்கையைப் பாடுகின்றவர்களே பண்பட்ட கவிஞர் ஆவார்கள் என்ற கருத்து வள்ளுவருக்கும் பாரதிதாசனுக்கும் திருத்தமுறப் பொருந்துகிறது. காலச்சூழலைக் கருத்தில் கொண்டு கயமைகளையும் கசடுகளையும் கொடுமைகளையும் சாடுகின்ற நெஞ்சுரம் வாய்ந்தவனே உயர்ந்த கவிஞன் ஆவான் என்பதற்கேற்ப வள்ளுவனும் பாரதிதாசனும் புத்துலகை, புதியதொரு சமுதாயத்தைப் படைப்பதில் புகழ் ஒளிபரப்பினர். காலத்தின் தன்மையை, கொள்கையை அக்காலத்தில் தோன்றும் கவிஞனே வெளிப் படுத்திக் காட்டுவான். அவன் வாழும் காலத்தில் எந்தச் சக்தி சமுதாயத்தை ஆட்கொண்டிருக்கிறதோ, அந்தச் சக்தி கவிஞனையும் ஆட்கொண்டே தீரும் என்ற கூற்றிற்கு வள்ளுவரும் பாரதிதாசனும் விதிவிலக்காகார்.

கவிஞனின் நோக்கம்:

கவிஞன் உள்ளும் புறமும் துருவி, முத்துக்குளிப்பது போன்று உண்மையை, அழகை வெளிக்கொணர்பவன்-

ஆவான். கவிஞனின் நோக்கம் ஒன்றை அறிவிப்பது ஆகாது. ஒன்றை உணர வைப்பதே கவிஞனின் தொழிலாகும் எனக் கைலாசபதி குறிப்பிடுகின்றார். உண்மையான கவிஞன் மனித வாழ்விலே ஊன்றிநின்று, வாழ்வின் பெருமையையும் சிறுமையையும் தன் கவிதைக்குப் பாடுபொருளாகக் கொள்வான் என்ற கருத்துக்கு முரண் படாதவாறு வாழ்வின் பெருமை சிறுமைகளையே வள்ளுவரும் பாரதிதாசனும் தம் கவிதைக்குப் பாடுபொருளாக் கொண்டனர். உண்மையைத் தழுவிச் செயல்படுகின்ற கவிதையே மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நம்மையும் மீறி ஓர் உண்மையைச் சுட்டி, அதை நாம் ஏற்கும்படிச் செய்துள்ள வள்ளுவரையும் பாரதிதாசனையும் இலக்கிய உலகம் மிகுதியாக மதிக்கின்றது.

பாலைவனத்தில் பசுமையையும் கெடுதியில் உள்ள நல்லதையும் மௌனத்தில் ஒளியையும் நேற்றில் உள்ள இன்றையும் காணமுடிகின்றவனே மனிதர் போற்றும் கவிஞன் ஆவான். ஆணில் பெண்ணையும் பெண்ணில் ஆணையும் அவனால் காண இயலும். மனிதனில் கடவுளையும் கடவுளில் மனிதனையும் அவன் கண்டு சொல்கின்றான். அத்துடன் மனிதனில் மனிதன் இல்லாமையையும் மனிதன் இருப்பதையும் கண்டு அவன் உணர்த்துகிறான். நம்பிக்கை, வறட்சி, ஏமாற்றம், வெறுப்பு ஆகியவற்றுள் எது பற்றிச் சொன்னாலும் அதில் வாழ்க்கையைத் தொடர ஒரு பொறி இருப்பதைக் கவியால் காணமுடிகிறது. கவிஞன் மனித இனத்தின் போக்குக் கேடு பயப்பதாக இருந்தாலும் கானல் நீர்போல் ஏமாற்றம் தருவதாக இருந்தாலும் நம்பிக்கை தருவதாக இருப்பதைக் கண்டுபிடித்துச் சொல்வதால்தான் நமக்கு வாழ்க்கையைத் தொடர்வது என்பது இயலும் தன்மைத்ததாய் உள்ளது என்ற கூற்றிற்கு அரண்சேர்க்கும்

வகையில் வள்ளுவர், பாரதிதாசன் ஆகியோரின் கவிதைகளும் காலம் வென்று வாழ்கின்றன.

கவிஞனின் தகுதிப்பாடுகள்:

கவிஞனின் நோக்கு எதனையும் ஊடுருவிப்பார்க்கும் கூர்த்த நோக்கினதாக இருத்தல் வேண்டும். இயற்கை ஈடுபாடு அவனிடம் மிகுதியும் இடம்பெற்றிருத்தல் வேண்டும். சோர்விலாச் சொல்வன்மையை அவன் பெற்றிருக்க வேண்டும். பாத்திறனுடன் யாப்பறிவையும் மொழியறிவையும் அவன் கொண்டிருத்தல் வேண்டும். கற்பனையாற்றல், மனவியல், நடுநிலைமை, துணிவு ஆகியன அவனின் உடைமைகளாக வேண்டும். இங்ஙனம் குறிப்பிடப்படும் உயர்ந்த உண்மைக் கவிஞனுக்குரிய தகுதிகள் அனைத்தையும் வள்ளுவரும் பாரதிதாசனும் பெற்றுப் பெருமையுடன் பிறங்கினர்.

இலக்கிய நூலின் இறவாநிலை:

இலக்கிய நூலொன்றின் இறவாநிலைக்குரிய காரணங்களாக நான்கைச் சுட்டலாம் அவை:

1. படைத்தவன் பேராற்றலால் இலக்கியத்திற்கும் ஒரு பேராற்றல் உருவாகின்றது. தட்பவெப்பம், ஆட்சிநிலை, மொழி முதலியவற்றில் ஏற்பட்ட எத்தனையோ மாறுதல்கள் நூலின் புகழை மங்கச்செய்யும் ஆற்றல் அற்றனவாகும்.

2. மானுடம் முழுவதற்கும் பொருந்தக்கூடிய சில கூறுகள் அடங்கியுள்ள ஓர் இலக்கியம் நிலை நிற்கும். மானிடவாழ்வின் நுண்மைகளை எந்தவோர் இலக்கியம் தன்னகத்தே கொண்டிருக்கின்றதோ, அந்த இலக்கியம் இறவாப் பெரும்புகழை எய்துகின்றது.

3. மனித வாழ்கையினின்று மலர்ந்ததும் அம்மனித வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் ஆழ நோக்கி அறிவிப்பதும் ஆற்றலோடு எடுத்துக் காட்டுவதுமான

இயல்புகள் ஓர் இலக்கியத்திற்கு இறவாத்தன்மையை அளிக்கின்றன.

4. இலக்கியம் தோன்றிய சூழலுக்கு ஏற்பவும் தேவைக்கு ஏற்பவும் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களுக்குச் சுவை பயப்பதோடு எவ்வெக்காலத்து மக்களுக்கும் சுவை பயப்பதாய் இருக்குமாயின், அவ்விலக்கியமும் நிலைத்து வாழ முடியும்.

இலக்கிய நூலின் நிரந்தர வாழ்விற்குத் துணைசெய்யும் இக்காரணங்களின் அடிப்படையில் குறளையும் பாரதிதாசன் பாக்களையும் சிந்திப்போமாயின், அவ்விரண்டின் நிலைபேற்றினை உய்த்துணர முடியும். குறளைப் படைத்த வள்ளுவரும் பாக்கள் புனைந்த பாரதிதாசனும் பேராற்றல் பெற்றவர்கள். எனவே அவர்கள் படைப்பிற்கும் ஒரு பேராற்றல் உருவாகியுள்ளது. தட்பவெப்பம், ஆட்சிநிலை, சமயம், மொழி ஆகியவற்றால் ஏற்பட்ட எத்தனையே மாறுதல்கள் அவர்தம் படைப்புக்களின் புகழை மங்கச்செய்ய முடியவில்லை. இருவர்தம் படைப்புக்களும் மானுடம் முழுவதிற்கும் பொருந்தக் கூடிய சில கூறுகளைப் பெற்றதாய் உள்ளன. மானிட வாழ்வின் நுண்மைகளை இவை பெற்றிருப்பதால் இறவாப் பெரும்புகழை எய்தியுள்ளன. குறளும் பாரதிதாசனின்பைந்தமிழ்ப்பாக்களும் மனித வாழ்க்கையினின்று மலர்ந்திருப்பதுடன் அம்மனித வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் ஆழ நோக்கி அறிவிப்பதும் ஆற்றலோடு எடுத்துக்காட்டுவதுமான இயல்புகள் இவற்றிற்கு இறவாத்தன்மையை அளிக்கின்றன. இவ்விருவர்தம் படைப்புக்களும் அவைதோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களுக்குச் சுவை பயப்பதுடன் எல்லாக்காலத்து மக்களுக்கும் சுவைபயப்பதால் நிலைத்து வாழ்கின்றன.

□

2

இருபெரும் கவி இமயங்கள்

ஞானி மூலத்தையும் ஆற்றின் மூலத்தையும் ஆராயக்கூடாததுபோல் கவிமூலத்தையும் ஆராய்தல் கூடாது என்பது ஏற்புடைத்ததே. எனினும் கற்கண்டினும் இனிக்கும் கவிதைகளை வழங்கும் கவிஞர்களின் மூலத்தை ஆராய்ந்து கூற இலக்கியத் திறனாய்வாளனுக்கு முற்றுரிமை உண்டு. இவ்வடிப்படையில் சிந்தனையைச் செழுமைப்படுத்தும் கவிதைகளை யாத்த செம்மாந்த புலவர்களான வள்ளுவர் பற்றியும் பாரதிதாசனைப் பற்றியும் அறியலாகும் செய்திகளை ஒரு சேரத் தொகுத்துக் காண்போம்.

வள்ளுவர் பற்றிப் புலனாகும் செய்திகள்:

மனித நன்முத்து:

தமிழகத்தின் மண்ணில் மாண்புமிக்க பெரியார்கள் வாழ்ந்து இருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் மணிமுடியாகத் திகழ்கின்றவர் திருவள்ளுவராவார். மனித இனம் என்ற சிப்பி ஈன்றெடுத்த விலை மிகுந்த நன்முத்து அவராவார். அவர் கலைகளுக்கெல்லாம் தலைமையாக விளங்கும் வாழ்க்கைக்கலை பற்றி அரும்பெரும் ஆராய்ச்சி

கள் செய்தவர். மனித இன நல்வாழ்விற்காக நல்லதொரு வாழ்க்கை முறையினை உலகத்திற்கே நல்கியவர் அவராவார். பல்கலை அறிவும் உருண்டு திரண்டு ஓர் உருவாய் அமைந்தவர் வள்ளுவராவார். வள்ளுவருக்கு முன்பும் உலகில் பல அறிஞர்கள் வாழ்ந்திருக்கலாம். அவருக்குப் பின்பும் பல அறிஞர்கள் பிறந்திருக்கலாம். இவ்வறிஞர்கள் அனைவருக்கும் தலைவர் என்று சொல்லத்தக்கவர் திருவள்ளுவராவார்.

வரலாற்றிற்கு முற்பட்ட வளமையர்:

திருவள்ளுவர் எங்கு, எப்போது தோன்றினார்? அவரைப் பெற்றெடுத்த பெருமைமிக்க பெற்றோர் யாவர்? அவரது கருத்தில் இனித்த காதலி யார்? மழலை மொழி பேசி மட்டற்ற மகிழ்வைத் தந்த அவரது குழந்தைகள் யாவை? என்பன போன்றவற்றைப் பற்றிய உண்மைகள் எவையும் இதுவரை புலனாகவில்லை. தமிழன்னை தமிழ்நாட்டவருக்கு மட்டுமா திருவள்ளுவரை ஈன்றெடுத்து இன்புற்றுள்ளாள்? தமிழ் நாட்டவருக்கு மட்டுமா அவர் அறிவுரை வழங்கியுள்ளார்? ஆகவே மக்கள் இனம் முழுவதற்கும் அவர் உரிமைப்பட்டவர் ஆவார். திருவள்ளுவர் வாழ்ந்துபோன காலம்பற்றி இன்று ஆராய்ச்சியாளர்களிடையே ஒரு பெரும் போர் நிகழ்ந்து வருகின்றது. இது வேண்டாததாகும். வள்ளுவர் எப்போது பிறந்தார் என்பது தேவையற்றதாகும். அவர் எங்குப் பிறந்தார் என்பதையே கருதிப் பார்க்க வேண்டும். வள்ளுவர் பிறந்தது இத்தமிழ்நாட்டில்தான். பேரறிஞர் வள்ளுவரைக் கண்டு மகிழவேண்டுமா? அப்படியானால் அவரது குறட்பாக்களைப் பயிலுதல் வேண்டும். திருவள்ளுவர் தம்மையே தமது நூலில் அமைத்துக் கொண்டுவிட்டார்.

இறவாப் பெருவாழ்வினர்:

குறளாசிரியரான வள்ளுவர் ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கு இயல்பானதை விடுத்து, யாவருக்கும் பொதுவாக உள்ள எண்ணங்களை அறிமுகப்படுத்தி, மனு முதலிய வடமொழி நூல்களில் காணப்படும் தேவையற்ற, மறுக்கத்தகுந்த வரலாறுகளையும் செயல்களையும் விடுத்து, அனைவருக்கும் பொதுவான ஒருசிறந்த முறையைக் கையாண்டு தமது நூலை யாத்துள்ளார். வள்ளுவர் அறிவிலும் புலமையிலும் இணையற்று விளங்கினார். அவை அவரது அழியாப் புகழுக்கு அடித்தளங்கள் ஆயின. ஒரு சிலரின் பெயர்கள் இவ்வுலகில் நின்று நிலைத்துவிட்டதுபோல் அவர் யாத்த அழிவற்ற பாக்கள் அவருக்கு இறவாப் பெருவாழ்வைப் பெற்றுத்தந்துள்ளன. ஒவ்வொருவரும் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நிலையிலும் அவர் தந்துள்ள குறட்பாக்களை மேற்கோள்காட்டும்போது அவரது புகழ் வளர்ந்து கொண்டே செல்கிறது.

சமயச்சார்பிலாச் சால்பினர்:

குறளாசிரியர் வகுப்புக்களையும் மக்கட்பிரிவுகளையும் நம்பிக்கைகளையும் பொருட்படுத்தாமல் மனித இனத்திற்கே உரியவகையில் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்லியுள்ளார். பௌத்தர்களும் சமணர்களும் வைணவர்களும் சைவர்களும் வள்ளுவரைத் ததம சமயத்தைச் சார்ந்தவர் என உரிமை பாராட்டுகின்றனர். ஆனால் அவர் அவைகளில் எந்தச் சமயத்தினுள்ளும் சிக்காதவர் ஆவார். எனினும் எல்லாவற்றிற்கும் அவர் ஒருங்கே உரியவர் என்றே கூறலாம். சாதி, வகுப்பு, சமயம் போன்ற அனைத்தையும் அவர் கடந்து நிற்கின்றார். அவரது அறிவுரைகளோ மனித இனத்திற்கே பொதுவானவை ஆகும்.

பாரதிதாசன் வாழ்க்கைவழி உணரலாகும் செய்திகள்:

குமுகாயப் புரட்சியாளர்:

தற்காலத் தமிழ்க் கவிதை வரலாற்றில் தன்னிகரற்ற சிறப்பினைப் பெற்ற அறிஞர் புரட்சிக்கவி பாரதிதாசன் ஆவார். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியக் களத்தில் பாரதிக்குப்பின் புதுத்தடம் அவர் படைத்தார். அவர் குமுகாயப் புரட்சியாளர் ஆவார். புரட்சிக் கருத்துக்களைப் பாடுவதில் அவருக்கு உவமை யாரும் ஆகார். ஆழமான, அருத்தமுள்ள, பொருள் பொதிந்த பாடல்களுக்குச் சொந்தக்காரரான பாரதிதாசன் விரிந்த பார்வையினையும் தொலைநோக்குச் சிந்தனையும் கொண்டவராய் விளங்கினார். அவரது பாக்கள் காலத்தை வென்று என்றும் அழியாத நிலைபேற்றினைப் பெற்று விளங்கின. குமுகாயத்தில் அடக்கப்பட்ட, முடக்கப் பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்களையும் துன்பங் களையும் தம்பாடல்களில் அவர் எதிரொலிக்கச் செய்தார். மன அமைதியும் மண்வளமும் பொங்கி வழியும் புதியதோர் வீர உலகம் பற்றிய கனவினை நாளும் அவர் கண்டு வந்தார். தற்காலக் கவிதை பற்றி எழுதப்படும் வரலாற்றில் பாரதிதாசனைப் பற்றியும் அவர் பாடிய பாக்களைப் பற்றியும் செய்திகள் இடம் பெறவில்லை யானால் அவ்வரலாறு முழுத்தன்மை பெற்ற சிறப்பிற்குரிய தாகாது.

கருவில் திருவுடையார்:

பாரதிதாசன் கருவிலே திருவுடையார் ஆவார். ஆதலால் மிக இளமைப்பருவத்திலேயே படைப் பாற்றலால் அவர் உந்தப்பட்டார். புதுவையை ஆண்ட அந்நியர்களை எதிர்த்தெழுந்த அரசியல் போராட்டங்களில்

பாரதிதாசன் மிக ஈடுபாடு கொண்டதால் அன்றைய அரசின் அல்லலுக்கு அவர் ஆளானார். பாரதிக்கு நேசனாக மட்டுமில்லாமல் அவருக்குத் தம்மைத் தாசனாகவும் ஆக்கிக் கொண்டாலும் கவிதை உலகில் பெரிய தடங்களை வகுத்துத்தந்தவர் பாரதிதாசன் ஆவார். தன்மான இயக்கத்தின் மூலவரான பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட பாரதிதாசன் சமுதாயச் சீர்திருத்தப் பணியில் சிந்தனையைச் சிறக்கச் செய்தார்.

புகழ்பெற்ற பொற்காலங்கள்:

பாரதிதாசனின் பாடல்களின் முதல் தொகுதி 1938 இல் வெளியானது. முதல் தொகுதிப் பாடல்களே முதன்மைக் கவிஞராக நாட்டவருக்கு அவரை அறிமுகப்படுத்தின. முதல் தொகுதிப் பாடல்களில் அமைந்துள்ள யாப்பு வடிவமும் அதில் அடங்கியுள்ள சிந்தனைச் செறிவான பாடல்களும் பாரதிதாசனைப் பெருங்கவிஞராக்கிக் காட்டின. கவிதைப் புலத்தினைக் கற்றுத் துறைபோய அவரின் கவிதை வித்தகத்தை அவரின் பாடல்கள் விளக்கம் செய்தன. அவரது கவிதை நெஞ்சிலிருந்து பீறிட்டுக் கிளம்பிய உணர்ச்சி வெள்ளத்தில் ஒவ்வொரு பாடலும் ஆழ்ந்து கிடப்பதை அறியலாம்.

இத்தொகுதியினைத் தொடர்ந்து குடும்பவிளக்கு (1942), பாண்டியன் பரிசு (1943), அழகின் சிரிப்பு எனும் கவிதைகள் தமிழ் உலகில் தவழ்ந்தன. கவிதைப் பொருளிலும் கற்பனைத் திறத்திலும் நாடகப் பாங்கிலும் இக்கவிதைகள் தலைநிமிர்ந்து நிற்கின்றன. 1935 இல் இருந்து 1945 வரையிலான பத்தாண்டுகள் பாரதி தாசனுக்குப் புகழ்சேர்ந்த பொற்காலங்களாகும். நாட்டின் மூலைமுடுக்குகள், சந்துபொந்துகள் ஆகியவற்றில் எல்லாம் அவர் பெயர் ஒலித்தது. அவர் பெயர் இலக்கியச்

சிந்தனையாளர்களுக்குத் தாரகமந்திரமாய் ஆனது. ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்ற பொழுதிலும் ஓய்வில்லாத இலக்கியப்பணியில் பாரதிதாசன் தம்மை இணைத்துக் கொண்டார். 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்துவதில் அவரது வாழ்நாள் பயனுடையதாய்க் கழிந்தது. குயில் வழியாகக் கவிதை உலகுக்கு அறிமுக மான இளம் கவிஞர்கள் அனைவரும் பாரதிதாசனின் பரம்பரையினராகத் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

இடைவிடா எழுத்துவேள்வியர்:

பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் தமிழ்க்குமுகாயத்தில் அவ்வப்போது நிகழ்ந்த குமுகாய, அரசியல் மாற்றங்கள் அவரது கவனத்தையும் கருத்தையும் கவர்ந்தன. தமிழ்க் குமுகாயத்தில் நிலைபெற்று இருந்த தீமைகளைக் காணாக் கண்ணினராகவும் செவிமடுக்காச் செவியினராகவும் பேசா வாயினராகவும் இராமல், அவற்றை விரட்ட வெகுண்டு எழுந்து, புரட்சிப்போரையே நிகழ்த்தினார். அரசியல் ஈடுபாடும் அவரை அரவணைத்துக் கொண்டது. வாழ்நாள் முடியும் வரையிலும் எழுத்துவேள்வியை நிறுத்தாத தமிழ் நெஞ்சினர் அவராவார். பொதுவாக உடல் உறுதி உடையவராகப் பாரதிதாசன் தோற்றமளித்தாலும் இருதய வலி அடிக்கடி அல்லலுக்குள்ளாக்கியது. 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19 இல் சென்னைப் பொதுமருத்துவ மனையில் இருதயவலியிலிருந்து விடுவிப்பதற்காகச் சேர்க்கப்பட்ட பாரதிதாசன் அவ்வாண்டு அத்திங்கள் 21 ஆம் நாளில் உலகினைவிட்டே விடுதலை பெற்றார். இறப்பும் அவர்தம் கவிதைச் சுவையைக் கொள்ளையிட விரும்பியதால் தன் உடைமையாக அவரை ஆக்கிக் கொண்டது. அவர் இறக்கலாம். ஆனால் தேனினிமையை

வெல்லும் அவர்தம் தீங்கவிதைகள் மக்கள் தம் நினைவை விட்டு இறக்காமல் இறவாவரம் பெற்றனவாய் இன்றும் தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. படைப்பாளிகளைப் பற்றிய செய்திகளைக் கண்ணுற்ற நாம் அவர்தம் படைப்புக்களின் செம்மை பற்றியும் அச் செம்மைப் படைப்புக்கள் அவர்கட்கு ஈட்டித் தந்த ஈடில்லாச் சிறப்புப் பற்றியும் சிந்திப்போம்.

வள்ளுவத்தின் வான்புகழ்ச் சிறப்பு:

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் அன்னைத் தமிழ் நாட்டில் ஆற்றலுடைய புலவர்கள் தோன்றி இணையற்ற பாக்களை இசைத்துத்தந்துள்ளனர். இவற்றுள் கால வெள்ளத்தால் மறைந்ததுபோக, எஞ்சியவைகளின் தொகுப்பே சங்க இலக்கியங்கள் ஆகும். இச்சங்க இலக்கியங்களில் ஒன்றே திருக்குறள் ஆகும். திருக்குறள் மிகச்சிறந்த அறநெறிகளைக் குறித்தெழுந்ததொரு செய்யுள் நூலாகும். வாழ்க்கையின் முப்பெரும் இலக்குகளான அறம், பொருள், இன்பம் என்ற மூன்றினையும் குறித்து ஆக்கப்பட்ட ஆயிரத்தி முன்னூற்றி முப்பது அருஞ்சொற் றொடர்களைக் கொண்ட திருவள்ளுவரின் திருக்குறள் உலக இலக்கியங்களிலேயே பொறுக்கி எடுத்த மணிகளுள் ஒன்றாகும்.

அறிவுக் கருவூலம்:

திருக்குறள் இந்திய இலக்கியங்களில் மட்டுமின்றி, உலக இலக்கியங்களிலேயே தலைசிறந்தது எனக் கருதப் படுகின்றது. இக்கருத்து முற்றிலும் சரியானது. ஏனெனில் திருக்குறளின் கலையழகு ஈடு இணையற்றது. அதைவிட முதன்மையானது அதில் ஒளிரும் உயர்ந்த மனிதப் பண்பு பற்றிய கருத்துக்கள் ஆகும். அவை எந்நாட்டவருக்கும்

எக்காலத்தவருக்கும் எல்லா மக்களுக்கும் விலை மதிக்க முடியாத அறிவுக் கருவூலமாகத் திகழ்வனவாகும். ஒப்பிலாநூலான திருக்குறள் மனித இனம் அனைத்திற்கும் ஒளிவிளக்காக அமைந்துள்ளது. அது மொழியின் எல்லை கடந்து உலகெங்கும் ஒளி நல்குகின்றது. சாதி, சமயம் போன்ற குறுகிய எல்லைகளைக் கடந்து குவலயத்திற்கே அறிவுரை புகலுவதில் இணையற்று விளங்குகின்றது. அது மனித இனத்தின் வழிகாட்டும் இன்குரலாக நேற்று மட்டுமல்ல, இன்றும் நாளை மட்டுமல்ல, என்றும் நின்று நிலவும் நூலாகும்.

திராவிடப் பெருஞ்செல்வம்:

ஆரியர் அல்லாத இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடிப் பெருமக்களான திராவிடர்கள் அனைவருக்கும் வள்ளுவர் அருளிய குறள் ஒரு பெருஞ்செல்வமாகும். நமது பெருமைக்கும் நெறிக்கும் நாகரிகத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் எடுத்துக்காட்டாக அதில் பல செய்திகளை நாம் அறியலாம். திருக்குறளின் பெயரால் திராவிட மக்களின் பெருமையைத் திராவிடரல்லாத மக்களுக்கு உணரச் செய்யமுடிகிறது. நமது வரலாற்றிற்கும் நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காப்பியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியுமாயினும் அவை மிகுதியும் பண்டிதர்களுக்குத்தான் புரியும்; அவர்களுக்குத் தான் பயன்படும். ஆனால் குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பேரறிவாளியும் ஏற்கும் தன்மைக்குரிய தக்க ஆதாரமாய் அமைந்திருக் கின்றதெனத் தந்தை பெரியார் குறிப்பிடுவது உள்ளுவதற்குரியதாகும்.

குறட்பட்டம் பெறுக:

இராமாயணத்தில் நூறுபாட்டும் பெரியபுராணத்தில் இருநூறு பாட்டும் பாரதத்தில் நூறுபாட்டும் பாகவதத்தில் இருநூறுபாட்டும் படிப்பதைக் காட்டிலும் குறளைப் படிப்பது மிக மேன்மையானதாகும். காலத்தை வீணாக்கிப் பொருளை விரயமாக்கிப் பட்டங்களைப் பெறுவதைக் காட்டிலும் குறளை முற்றும் உணர்ந்து பட்டம் பெறுவது மிகு சிறப்பிற்குரியதாகும். பணம் செலுத்திப் பெறும் பட்டங்கள் வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய அறிவை வழங்குவதில்லை. ஆனால் குறளின் ஒவ்வொரு கருத்தும் ஒருவன் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படக் கூடியதாய் அமைந்துள்ளது. வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையும் ஒவ்வொரு துறையும் அதில் விளக்கப்பட்டுள்ளன.

குறளும் ஹைக்கூவும்:

ஹைக்கூவில் ஓர் உலகம் முழுமையும் உள்ளடக்கிச் சப்பானியக் கவிகள் காட்டுகிறார்கள். அதேபோல் ஒரு குறளில் வள்ளுவர் உலகம் முழுமையும் அடக்கிக் காட்டுகிறார். குறள் ஒன்றில், ஹைக்கூ ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளுக்கு அப்பாலும் உலகம் இருக்கத்தான் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால் அந்த ஹைக்கூவை, அந்தக் குறளை மனத்தில் இருத்தும்போது படிப்பாளிக்கு வேறொன்று இதற்கு அப்பாலில்லை என்று தோன்றச் செய்கின்றது. உரைநடையிலும் சரி, கவிதையிலும் சரி, வார்த்தைச் செட்டு என்பது மிகவும் இன்றியமையாத இலக்கியக் கூறு என்று சொல்வது மிகையாகாது. பண்டைக்கவிதையில் வார்த்தைச் செட்டு மிகத் தெளிவாக உள்ளது. இடைக்காலக் கவிதையில் அதை அரிதாகவே சந்திக்க முடிகிறது. வார்த்தைச் செட்டுக் கவிதைக்கு

எடுத்துக்காட்டாக வள்ளுவரின் குறளையும் சங்க இலக்கியக் கவிதைகளில் சிறப்பானவற்றையும் சொல்லலாம்.

வள்ளுவ வித்தகம்:

திருவள்ளுவர் தோன்றி மறைந்து எவ்வளவோ காலம் ஆகிவிட்டது. அவர் இந்நாட்டில் உலாவிக் குறள் எழுதி உலகுக்கு ஈந்து மறைந்தபின் உலகிலே எத்தனை எத்தனையோ மாறுதல்கள், புரட்சிகள் நிகழ்ந்துவிட்டன என்றாலும் குறள் தன் வல்லமையை இழக்கவில்லை. அன்றுபோல் இன்றும் அது மானிட வாழ்க்கையை விளக்கம் செய்தவதாகவே அமைந்துகிடக்கின்றது. இந்த வித்தகத்தை வள்ளுவர் எங்ஙனம் சாதித்தார்? பிற இலக்கியங்களைப் படைத்தவருக்கும் இவருக்கும் உள்ள வேறுபாடே அதுதான். தாம் காண்கின்ற அல்லது தமக்கு விளங்குகின்ற நிகழ்ச்சிகளையே தளமாக அமைத்துக் காவிய மாளிகைகளைப் பிற புலவர்கள் எழுப்பினார்கள். அவர் காட்டிய காட்சிகள் எவ்வளவுதான் உயர்ந்தன வாகியும் அவை அழியாத் தன்மையாய் எல்லோருக்கும் விளங்குவன என்று கூறிவிட முடியாது. எடுத்துக்காட்டாக 'வெறியாடல்' என்ற ஒரு நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்கவேண்டும். இன்றைய தமிழகத்திலே அந்த வழக்கம் அற்றுவிட்டது. எனவே இளங்கோவடிகளும் அல்லது அவருக்கு முன்னும் பின்னும் இருந்த புலவர்களும் வெறியாடல் அமைத்துப் பாடியவற்றைச் சுவைக்க வேண்டுமானால் முதலில் வெறியாடல் பற்றிய விளக்கம் வேண்டும். இந்நுட்பமான குறையைக் கண்டு களைந்தவர் வள்ளுவர். நிகழ்ச்சிகளைத் தளமாகப் பிறர் அமைத்தனர். வள்ளுவரோ நிகழ்ச்சிகளின் அடிப்படை யிலே இலங்குகின்ற தத்துவங்களையே மிகுதியும் தளமாக அமைத்தார்.

என்றும் புலராது:

மாறுகின்ற வடிவும் முறையும் கொண்ட நிகழ்ச்சிகளைக் கூறும் நூல்கள் சில காலம் புகழைப் பெறும்; சில காலம் விளங்கும்; பின்பு விளக்கம் நீடிக்க வில்லையெனில் தேயும்; மங்கும்; இறுதியில் மறையும். மாறா இயல்பினதான தத்துவங்களை, உண்மைகளைத் தளமாகக் கொண்டெழுந்த நூல்களோ என்றென்றும் அழியமாட்டா; எக்காலத்தும் ஒளிரும் விளக்காய், வாடாமலராய் உலவ வல்லன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வள்ளுவருடைய நூல் என்றும் புலராத யாணர் நாட்செல்லுகினும் நின்றலர்ந்து, தேன் பிலிற்றும் நீர்மையதாய்க் குன்றாத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலரான வகை இதுதான். நிலைபெற்ற தத்துவத்தை, எக்காலத்தவர்க்கும் விளங்குகின்ற உண்மைகளை வள்ளுவரின் நூல் கூறுகின்றது. எனவேதான் இளங்கோவிலிருந்து இற்றைக் காலப் புலவர்கள் வரையிலும் தம் நூல்களில் குறளைப் பயன்படுத்தாதவர் எவருமிலர்.

புரட்சிக் கவிஞரின் புகழ் பூத்த பாக்கள்:

இந்நூற்றாண்டில் வாழும் எந்தக்கவிஞனும் பாரதிதாசனின் பாடல்களால் பாதிக்கப்படவில்லை யென்றோ அல்லது அவரின் பாடல்களால் ஈர்க்கப்பட்டுத் தம் பாட்டுத் திறத்தை வளப்படுத்திக் கொள்ளவில்லை யென்றோ கூறுவார்களேயானால் அவர்கள் பரிதாபத்திற் குரியவர்கள் என்பதைவிடக் கண்டனத்திற்குரியவர்கள் ஆவர். 'பொய்யில் புலவன்' என்று வள்ளுவரைத் தமிழ் உலகம் போற்றுவது போலப் பாரதிதாசனைப் 'பொய்யில் புலவன்' என்று கவிஞர் பெருஞ்சித்திரனார் போற்றுகின்றார். தமிழின உணர்வைச் செழுமையுறச்

செய்து, தமிழர் பண்பாட்டின் நிலைக்களங்களாகிய காதல், வீரம், அறம், மானம் ஆகியவற்றை மீண்டும் புதுக்கிக் குமுகாய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து, மொழி உணர்வைப் பேணி வளர்த்துப் பல்வழியிலும் தமிழை வளப்படுத்தித் தமிழரை விழிப்படையச் செய்யும் பணியில் முனைப்புடன் இருந்ததால் முன்னணிப் பாவலராக அவர் திகழ்கின்றார்.

தமிழின் தவலருஞ் செல்வர்:

'பாட்டால் பரமனைத் தொழலாம்' என்று இருந்த நிலையை மாற்றிப் 'பாட்டால் பாமரனின் இதயத்தையும் தொடலாம்' என்று ஆக்கிய பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. பாவேந்தரின் கவிதைகள் சாகாவரம் பெற்ற கவிதைகள் என்றால் அது மிகையாகாது. அவருடைய பாடல்களிலே எது ஒன்றைக் கண்ணாலும் காதாலும் கருத்தாலும் தொட்டுவிட்டாலும் அங்கே ஓர் இன்சுவை மின்சாரம் எழுந்து படரும். அவர் படைப்புக்களில் புதுமைக் கருத்துக்களையும் புரட்சிப்போக்கினையும் காண்கின்றோம். அவருடைய பாக்களில் பொதிந்துள்ள எழில்நலம் எக்காலத்து மக்களையும் ஈர்ப்பதுடன் சமுதாய மாற்று அமைப்பையும் செம்மையையும் காண விழைவார்க்கு அவருடைய கவிதைகள் என்றும் வழிகாட்டுகின்றன; எழுச்சியூட்டுகின்றன. பாரதியாரின் புரட்சிமனம் அரசியலில் நுழைந்து, குமுகாயத்தின்-பிற துறைகளில் கிளைத்துச் செழித்தது. பாரதியாரின் தோழமையில் தங்கி வளரும் பேறுபெற்ற பாரதிதாசனின் புரட்சிமனம் தமிழில் நுழைந்து, குமுகாயத்தின் பிற துறைகளில் வேரோடியது.

> ''தம்மை நினையான்; தமிழ் நினைத்திருந்தான்
> தம்மக்கள் பேணான்; தமிழைப் பேணின்னான்

தம்பொருள் காவான்; தமிழ் காத்திருந்தான்
தம்நலம் விழையான்; தமிழ் நலம் விழைந்தான்''

எனப் பாரதிதாசனுக்குப் புகழ்ப் பூந்துணர் சூட்டுகின்றவர் கவிஞர் பெருஞ்சித்திரனார் ஆவார்.

குமுகாய நலக் கவிதைகள்:

முன்னைப் பழமையைப் போற்றிப் பின்னைப் புதுமையை வரவேற்கும் இயல்பு கவிஞர்களுக்குக் கைவரப்பெற்ற ஒன்றாகும். குமுகாயச் சிந்தனைகளைக் கருவாகக் கொண்ட பாரதிதாசனின் கவிதைகள் அனைத்து நிலையிலும் அவ்வுணர்வுகளைத் தமிழ் மக்களிடையே தூண்டி வளர்க்கும் திறத்தினவாக உள்ளன. குமுகாய நலம் குறித்தெழுந்த அவர்தம் கவிதைகள் பண்டிதர், பாமரர் என்ற வேறுபாடின்றி, யாவரிடத்தும் புதியதோர் மறுமலர்ச்சிக் குமுகாயத்தை மலரச்செய்யும் ஆர்வத்தைச் சுட்டும் ஆற்றலுடன் திகழ்கின்றன. எழுச்சிமிக்க புதிய குமுகாய வாழ்விற்கு மாறான உணர்வும் செயலும் காணும் இடமெங்கும் அவற்றைச் சீறும் எரிமலையாய்ச் சினந்து தாக்குவதும் அத்தகு நல்வாழ்வின் ஆக்கமாக அமைந்தனவற்றை ஊக்குவதும் அவர்தம் கவிதைக் கோட்பாடுகளாக அமைந்துள்ளன.

உலகளாவிய சிந்தனை:

பாரதிதாசன் பழைய மரபுகளைத் தவிர்த்துப் புதிய மரபுகளைப் பாட்டு வடிவத்தில் கொணர்வதில் பெரும் வெற்றி பெற்றார். புதிய புரட்சிக் கருத்துக்கள் அவர்தம் பாடல்களில் கருவாயின. அவர் காலத்தில் அமைந்திருந்த குமுகாயத் தலைகீழ் மாற்றத்தைத் தலைகீழாகப்

புரட்டவேண்டும் என்பதில் அவருக்கிருந்த புரட்சிப் பார்வை, மனிதநேயச் சிந்தனை ஆகியன அவரது பாடல்களுக்கு மக்கள் செல்வாக்கையும் படிப்பார் மனத்தில் என்றும் நிலைத்து நிற்கும் பேற்றினையும் பெற்றுத்தந்தன. பாரதிதாசனின் கவிதைப் பார்வை தமிழ், தமிழர், தமிழ்நாடு எனக் குறுகிய வட்டத்தையே சுற்றியது என்று குறை கூறுவாரும் உளர். தமிழை, தமிழினத்தை, தமிழ்நாட்டைப் பாடிய தமிழ்க்கவிஞரான பாரதி தாசனிடத்தில் உலகளாவிய சிந்தனை இடம்பெற்றிருந்தது என்பதை மறுக்க இயலாது. அவரிடம் குடிகொண்டிருந்த உலகம் தழுவிய சிந்தனை அவர் இயற்றியுள்ள 'உலகம் உன்னுடையது' என்னும் பாடலில் பளிச்சிடுகின்றது.

மனிதனை மனிதன் பாடிய காலம் வள்ளுவர் காலம். மனிதன் இறைவனைப் பாடிய காலம் இடைக்காலம். வள்ளுவர் காலத்தைப் போல் மனிதனை மனிதன் மீண்டும் பாடிய காலம் பாரதி காலமாகும். பாரதிதாசனும் பாரதியின் அடியொற்றித் தம் கவிதையில் மனிதனை முதன்மைப்படுத்தினார். தன்னாற்றலை உணராத மனிதனுக்கு அவனது ஆற்றலை அவர் விளக்கினார். 'மானிட சக்தி' என்ற பாடல் மனித இனத்தின் மீது அவர் கொண்டிருந்த அழுத்தமான பற்றினை வெளிப்படுத்து கின்றது.

பின்புல நன்புலங்கள்:

வள்ளுவர் யாத்த குறளும் பாரதிதாசன் இயற்றிய பாக்களும் எழுந்த பின்புலங்களை ஆய்தல் அவ்விரண்டின் உள்ளடக்கத்தைத் தெளிவுபடுத்துவதாய் அமையும். முதற்கண் குறள் எழுத்தாண்டிய பின்புலத்தைத் துலக்க முற்படுவோம்:

ஒழுக்கம் போற்றும் விழுமிய நூல்:

சங்ககால மக்களும் மன்னரும் நாள்தோறும் போரில் ஈடுபட்டு விழுப்புண் பெற்றார்கள்; புலாலை உண்டு உவகை உற்றனர்; மதுவைப் பருகி மகிழ்வில் திளைத்தனர்; அளவிறந்த ஊன் உணவும் மயக்கம் தரும் மது வகையும் பெண்வெறியை ஊட்டின. சேரிப்பரத்தை, காமப்பரத்தை எனப் பரத்தையர் பட்டியல் நீள்கின்றது. சங்ககாலத்தில் நிலவிய போர்த்தீவிரமும் மோகத்தீவிரமுமே வாழ்க்கை நிலையாமையையும் பெண்வேட்கை நிலையாமை யையும் பேசும் மற்று தீவிரத்திற்குத் திரும்பின. தமிழ்க் குமுகாயத்தில் பரவிக்கிடந்த பரத்தமை, புலால் உண்ணுதல், கள் குடித்தல் ஆகிய தீய பழக்கங்களிலிருந்த தமிழரை விடுவிக்க வேண்டிய தேவை இருந்தது. கவிதையைக் குமுகாய நலனுக்குப் பயன்படுத்த விரும்பிய வள்ளுவர் போன்றவர்கள் தம் கவிதையில் அறத்திற்கு முதன்மை தந்தது வியப்பில்லை.

ஆரிய மறுப்பு நூல்:

மேற்சுட்டப்பட்டுள்ள பின்புலம் தலைமை அறநூலான குறளுக்குப் பொருந்துமாயினும் மற்ற அறநூல்களுக்கு இல்லாத மற்றுமொரு பின்புலம் குறளுக்கு உண்டு. திருக்குறள் ஆரிய தருமத்தை அடியோடு கண்டிப்பதற் காகவே எழுந்தது. மக்கள் நல்வாழ்க்கைக்குக் கேடாக வந்து சேர்ந்த ஆரிய அதருமத்தை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டு ஒரு மறுப்பு நூலாகவே குறள் எழுதப்பட்டது. ஆரிய தருமத்தை மறுக்க வந்த கண்டன நூல் என்பது மட்டுமல்லாமல் ஒரு மாபெரும் பகுத்தறிவு நூல் என்றும் அதனைக் கருதவேண்டியுள்ளது. பல மதவாதிகளின் கற்பனைகளை அதாவது பகுத்தறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் நிற்காததும் நம்பியே ஆகவேண்டும்

என்கிற கட்டாயத்தினால் மட்டுமே நிற்பதுமாகிய பல மூடநம்பிக்கைகளை ஒழித்து, மக்களுக்கு இயற்கைத் தன்மை விளங்கும்படிச் செய்வதாகிய பகுத்தறிவு நூல் குறளாகும். அடுத்துப் பாரதிதாசனின் புரட்சிக்கவிதைகள் பிறந்த பின்புலத்தைக் கண்ணுறுவோம்.

தமிழ் நேசக் கவிதைகள்

இருபதாம் நூற்றாண்டில் விடுதலை இயக்கம் வீறிட்டெழுந்தது. ஒரு தீவிரம் உருவாகின்றபோது இன்னொரு தீவிரமே கிளைப்பது இயல்பு. தமிழ்நாட்டில் வடமொழித் தீவிரம் தமிழ்த் தீவிரத்திற்கு வித்திட்டது எனல் வேண்டும். 1937 இல் பிறிதொரு புதியதீவிரம் தமிழ்நாட்டில் நுழைந்தது. இவ்வாண்டில் இந்திமொழி தமிழர்க்குக் கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாகப் பாரதி உண்டாக்கிவைத்திருந்த இருமொழிப் போற்றுதல் உருக்குலைந்தது. தமிழே தலையாயது என்பது பாரதிக்குப் பின் வந்த பாரதிதாசன் உட்பட அனைத்துக் கவிஞர்களின் உயிர்ப்பொருளானது. பாரதியைப் பின்பற்றிய பாரதிதாசனே பாரதியின் இருமொழிக் கொள்கையினை உதறித் தள்ளிவிட்டார். தமிழையே போற்றும் கொள்கைக்கு வள்ளுவர்க்குப் பின் அவரேதந்தையானார். அவர் பாடல்களில் தமிழ் நேசமும் தமிழ்நெறியும் தலைமை கொண்டன என்று சொல்லுதல் வேண்டும்.

ஆரிய திராவிடப் போராட்டம்:

குறள் எழுந்த காலத்தில் நிகழ்ந்ததுபோல் பாரதிதாசன் காலத்திலும் ஆரியமறுப்புத் திராவிட இயக்கம் அலை மோதியது. இனப் போராட்டம், மொழிப்போராட்டம் என்ற பண்பாட்டுப் பேராட்டம் கிளர்ந்தெழுந்தது.

தன்மரியாதை இயக்கம், பகுத்தறிவுச் சிந்தனை, வர்க்கப்போராட்டம் எல்லாம் எழுந்தன. விடுதலை இயக்கம் பாரதியைத் தந்தது; பாரதி பரம்பரையை உருவாக்கியது. திராவிட இயக்கம் பாரதிதாசனைத் தோற்றுவித்தது; பாரதிதாசன் பரம்பரையை உருவாக்கியது. பாரதிதாசன் உள்ளிட்ட மறுமலர்ச்சிக் கவிஞர்களின் சிந்தனைப் பொருள்களாக நாட்டின் அடிமைத் தன்மையும் தமிழ்மொழியின் வீழ்ச்சியும் குமுகாயக்கொடுமையும் ஆயின. சாதி, சமயப் பிணக்குகள் தலைவிரித்தாடின. மக்களிடத்தில் வேற்றுமைகள் கற்பிக்கப்பட்டு, ஆண்டான் - அடிமை உணர்வுகள் வளர்க்கப்பட்டன. அடித்தள மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன. மக்கள் கடவுளர்களையும் ஊழ்வினையையும் நம்பினர். மூடநம்பிக்கைகள் மிகுதியாயின. இத்தகைய நிலையில் அழுந்திக்கிடந்த மக்களைத் தட்டி எழுப்பக் கூடிய ஆற்றல் அக்காலகட்டக் கவிஞர்கள் அனைவருக்கும் அமைந்திருந்தது எனினும் பாரதிதாசனின் பாடல்களுக்கு மட்டுமே அவ்வாற்றல் முதன்முறையாக வாய்த்தது.

வருணாசிரமத் தரும வீழ்ச்சி:

தமிழ்ச் சமுதாயம் பண்டைக்காலத்தில் சாதி வேற்றுமையற்றும் மக்களுடைய வாழ்க்கையில் பிறப்பு அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளுக்கு இடம் கொடுக்காமலும் இருந்தது. காலப்போக்கில் இந்நிலை மாற்றமுற்றது. தமிழ்ச் சமுதாயத்தின் மாற்றத்திற்கு அயலவர் ஆட்சியும் அவ்வாட்சி முறைகளால் விளைந்த பிற பண்பாட்டுத் தாக்கங்களும் காரணமாயின. வேற்றவர் ஆட்சியில் தமிழர்கள் தன்மானம் குன்றிக் கிடந்தனர். எல்லா மக்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைக்காத

காரணத்தால் சிந்தனை வளர்ச்சிக்கு வழியில்லாமல் போய்விட்டது.

வருணாசிரமத் தருமத்தைப் போற்றும் வைதிக சமய வளர்ச்சியினால் தீண்டாமை உணர்வு ஆழமாக வேரூன்றி விட்டது. மக்கள் அனைவரும் சமமாகக் கருதப்படாதது போலவே, பொருளாதாரத் துறையிலும் ஆண்டான்-அடிமைமுறை ஆழமாக வேரூன்றிவிட்டது. கடவுளாலும் மதத்தாலும் மக்களிடம் வேற்றுமையுணர்வு தோன்றியது. மேல், கீழ்ச்சாதி அமைப்புக்கள் கால்கொண்டன. வேதம், மனுநூல் முதலானவை வருணாசிரமத் தருமத்தைச் சமுதாயத்தில் பரப்பிய காரணத்தால் திருக்குறள் முதலான செந்தமிழ் இலக்கியங்கள் செல்வாக்கு இழந்தன.

அங்ஙனம் செல்வாக்கிழந்த திருக்குறளை மக்களிடையே செல்லும் வாக்காக நிலைபெறச்செய்வதற்காகவே பாரதிதாசன் தம்பாடல்களில் வள்ளுவத்தை அடிநாதமாக-ஆதாரசுருதியாக அமைத்துக் கொண்டாரெனலாம். □

3

வள்ளுவத்தில் காலூன்றிய கவிஞர்கள்

தமிழ்நாட்டின் பண்பாட்டை உருப்படுத்திய இலக்கியங்களுள் தலைமை சான்றது திருக்குறள் ஆகும். முப்பாலாக விளங்கும் அந்நூலை எப்பாலரும் ஏற்றுப் போற்றுவர். தொன்று தொட்டு அதன் சொல்லையும் பொருளையும் தமிழ்ப் புலமை உலகம் பொன்னைப்போல் போற்றி வருகின்றது.

சிலம்பில் வள்ளுவம்:

சிலம்புச் செல்வத்தை வழங்கிய செஞ்சொற்கவிஞர் இளங்கோவடிகள் ஆவார். வள்ளுவர் வழங்கிய குறளைப் பொன்னைப்போல் அவர் போற்றினார்.

''அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''

என்றார் வள்ளுவர். கணவனுக்கு நேர்ந்த கொடுமையை அறிந்த கண்ணகி ஆவி துடித்தாள்; அழுதாள்; விரித்த கூந்தலினளாக அரண்மனை நோக்கி நடந்தாள். அவள் கோலத்தைக் கண்டு மதுரை மாநகரம் குலுங்கிற்று.

''அல்லலுற்று ஆற்றாது அழுவாளைக் கண்டோங்கி
மல்லல் மதுரையார் எல்லாரும் தாம்மயங்கிக்

களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது''

என்று வள்ளுவர் காட்டியதை அடியொற்றி மதுரையார் வருந்தியதாகச் சிலம்பு பாடிற்று.

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளை
தெய்வம் தொழும்தகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாந்தருக்கு அணியாய கண்ணகி
விண்ணக மாந்தருக்கு விருந்து''

என்று இளங்கோவடிகள் கற்பின் செல்வியைத்

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

என்ற வள்ளுவர் வாய்மொழியை நினைந்து பாராட்டுகிறார்.

மேகலையில் குறள்:

அடிகளைப் போலவே சாத்தனாரும் திருக்குறளில் ஈடுபாடு உடையவராவார். குறளாசிரியரைப் 'பொய்யில் புலவன்' என்றும் வள்ளுவர் வாய்மொழியைப் 'பொருளுரை' என்றும் சாத்தனார் போற்றுகின்றார்.

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்''

என்று மேகலை அறிவுறுத்துகின்றது.

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்ற குறள் கருத்தைப்

''பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்''

என்று சாதுவன் வழி மணிமேகலை உணர்த்துகின்றது.

சிந்தாமணியில் குறள்:

சிந்தாமணி ஆசிரியரான திருத்தக்கதேவரும் குறளை மிகுதியாகக் கையாண்டு தம் நூலுக்கு ஏற்றம் சேர்த்துள்ளார்.

''ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்'',

''பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது''

என்ற குறளுக்கு விளக்கம் தருவதாய்க் கீழ்வரும் சிந்தாமணி வரிகள் அமைந்துள்ளன:

''இடத்தொடு பொழுதும் நாடி
எவ்வினைக் கண்ணும் அஞ்சார்
மடப்பட லின்றிச் சூழும்
மதிவல்லார்க் கரிய துண்டோ?
கடற்றிடைக் காக்கை ஒன்றை
ஆயிரம் கோடி கூகை
இடற்றிடை அழுந்தச் சென்றாங்
குன்னுயிர் செகுத்த தன்றே''.

''தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்''

என்று வள்ளுவர் வினவுகிறார். இக்கருத்தின் எதிரொலியாகவே,

''தன்னுயிர் தான்பரிந்து ஓம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க்கு இறைவனாய் இன்ப மூர்த்தியாய்
பொன்னுயி ராய்ப்பிறந்து உயர்ந்து போகுமே''

என்ற சிந்தாமணிப்பாடல் அமைந்துள்ளது.

இராமாயணத்தில் குறள்:

''அறிகொன்று அறிவான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்''

என்ற குறளின் அடிப்படையில்,

''தம்முயிர்க்கு உறுதி எண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாது நின்று உரைக்கும்வீரர்
செம்மையின் திறம்பல் செல்லாத்
தேற்றத்தாற் தெரியும் காலம்
மும்மையிற் உணர வல்லார்
ஒருமையே மொழியும் நீரார்''

என்று கம்பர் அமைச்சர்களின் பண்பினைப் பாராட்டுகின்றார்.

''இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்?''

என்பது வள்ளுவர் வாய்மொழியாகும்.

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்''

என்று வள்ளுவர் அழுத்தமாகக் கூறியுள்ளார். இக்குறட்பாக்களின் தாக்கத்தைக்

''கடிக்கும்வல் லரவும் கேட்கும்
மந்திரம் களிக்கின் றோயை
அடுக்கும்ஈ தடாதென்று ஆன்ற
ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர் இல்லை; உள்ளார்
எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது
முடிவின்றி முடிவ துண்டோ?''

என்ற கம்பன் வரிகள் பெற்றுள்ளன.

சிவப்பிரகாசரும் சீர் பெறும் குறளும்:

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றிய பெரியாரான சிவப்பிரகாசர் நூல்களில் திருக்குறள் பெறுகின்ற இடம் எத்தகையது என்பதை ஓரிரு மேற்கோள்களால் ஈண்டுக் காணலாம்.

''குழலும் யாழும் இனியவெனக்
கூறா வண்ணம் மென்கனிவாய்
மழலை பொழிந்தும் உடற்கின்பம்
மருவி ஓடிமேல் விழுந்தும்
விழையும் அமிழ்தின் மிகவினிமை
அனைய நுகரும் சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்தும்
செய்தாள் மோகம் ஈன்றாள்''

என்ற பிரபுலிங்கச் செய்யுளில்,

''அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்'',

''மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'',

''குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்''

என்ற மூன்று குறட்பாக்கள் நிறைந்து நின்று அணி செய்கின்றன.

கொலைகள வழுக்கா றவாவொடு வெகுளி
கொடுஞ்சொல் பொய்ப்பயனில கூறல்
நிலையழீஇ ஒருவன் செய்ந்நன்றி மறத்தல்
நிந்தனை வஞ்சனை பிறர்தம்
சிலைநுதல் மடவார்க் கருதலென் றினைய
தீமைகள்.....''

என்ற பிரபுலிங்கப் பாடலில் வள்ளுவரின் வான் மறைக்கண் தகாதனவென ஒதுக்கிய தீமைகள் யாவும் நினைவில் எழுகின்றன. குறளின் கருத்தொடு கூடிய தொடர்களை எடுத்தாண்டு அணிசெய்வது ஒருபுறமிருக்க, அந்நூலின் தொடர்களை மட்டும் சிவப்பிரகாசர் எடுத்தாளும் இடங்கள் மிகப்பலவாகும்.

''கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம்.....''

என்ற இடத்தில் வருகின்ற தொடர் அமைப்பு,

''கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை''

என்ற குறளை நம் மனத்தே எழுப்புகின்றது. ஆனால் ஒன்று குறளின் வான்சிறப்புக் கூறுமிடம்; மற்றது மனப் பண்பு கூறும் பாடலாகும். திருவள்ளுவரைக் ''கற்றுணர்பழை யோர், புலவர், தெய்வப்புலமைத் திருவள்ளுவனார், ஆற்றற்பெரியோர், இணையில் திருவள்ளுவப் பெயர் கொள் எம்மான்'' என்றும் திருக்குறளை ''நவத்தமிழ்

வேதம்'' என்றும் பலபடப் பாராட்டிப் போற்றுகின்றவர் சிவப்பிரகாசர் ஆவார்.

திருவருட்பாவில் குறள்:

திருக்குறளின் ஒளி தமிழ் இலக்கியம் முழுவதிலும் ஊடுருவிச் செல்கின்றது. காலந் தோறும் தோன்றும் கவிஞர்கள் குறளை எடுத்தாண்டுள்ளனர். அங்ஙனம் எடுதாண்டவர்களுள் ஒருவரே வள்ளலார் ஆவார். தம் நெஞ்சை விளித்துக்

> ''கூத்தாட்டவைசேர் குழாம்விளிந்தாற் போலுமென்ற
> சீர்த்தாட் குறண்மொழியும் தேர்ந்திலையோ''

என வள்ளலார் பாடுகின்றார். இப்பாட்டில் குறளைச் 'சீர்த்தாட் குறள்' என்கிறார் வள்ளலார்.

'சீர்த்தாள்' என்பது சீரடி எனப் பொருள்படும். சிறந்த அடிகளுடைய குறள் என்பது பொருளாகும்.

> ''கூத்தாட்டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
> போக்கும் அதுவிளிந் தற்று''

என்ற குறளின் கருத்தும் இப்பாடல் வரிகளில் ஊடுருவி உள்ளதை உணரலாம். வெகுளாமை என்னும் அதிகாரத் தில் இடம்பெற்றுள்ள இரு குறளைப் பயன்படுத்தும் வள்ளலார் அதற்கு மறுதலையான பொறையுடைமை என்னும் அதிகாரக் குறள் ஒன்றையும் இணைத்து, ஓரிடத்து மும்மணிகளைப் பதித்ததுபோல் பதித்துள்ளார்.

> ''செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
> இல்லதனிற் றீயதன்ற தெண்ணிலையே - மல்லல்பெறத்
> தன்னைத்தான் காக்கின் சினங்காக்க என்றதனைப்
> பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே -துன்னி
> அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னும்
> திகழ்வாய் மையுநீ தெளியாய்''.

இப்பாட்டில் குறள் 'திகழ் வாய்மையாக' வள்ளலாரால் காட்டப்பட்டுள்ளது.

பாரதி பாட்டில் குறள்:

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளித்தவர் பாரதியார் ஆவார். தமிழ்நாட்டின் அருந்தவச் செல்வராகிய திருவள்ளுவரை அவர் வாயாரப் புகழ்ந்து வாழ்த்தியுள்ளார்.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்று வள்ளுவரை உலகத்தார்க்கு உரிமைப்படுத்து கின்றார். வையத்தார்க்கெல்லாம் ஒளிநெறி காட்டிய வள்ளுவப் பெருமானைத் 'தெய்வவள்ளுவன்' என்று பாராட்டிப் பரவுகின்றார். மாந்தரனைவரும் ஓரினம் என்பது குறளின் மூலக்கருத்துக்களுள் ஒன்றாகும். இளம்பிள்ளைகளின் உள்ளத்தில் வள்ளுவரின் வாய்மொழி நிலைபெறும் வண்ணம்,

''சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்''

என்று சின்னஞ்சிறு பெண்ணிற்கு அறிவூட்டுகின்றார். ''அறத்தால் வருவதே இன்பம்'' என்று வகுத்துரைத்த வள்ளுவன் உண்மையை நன்கறிந்த கவிபாரதி,

''அறம்ஒன் றேதரும் மெய்யின்பம் என்றநல்
லறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்
பிறவி ரும்பி உலகினில் யான்பட்ட
பீழை யெத்தனை கோடி! நினைக்கவும்
திறன ழிந்தென் மனமுடை வெய்துமால்
தேசத் துள்ள இளைஞர் அறிமினோ!

அறம் ஒன் றேதரும் மெய்யின்பம்; ஆதலால்
அறனை யேதுணை யென்றுகொண் டுய்திரால்''

என்று பாடினார்.

''பொருளி லார்க்கிலை இவ்வுலகு என்றநம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்
பொருளி லார்க்கின மில்லை; துணையிலை
பொழுதெ லாமிடர் வெள்ளம்வந் தெற்றுமால்''

என்று வறுமையின் சிறுமையை எடுத்துரைத்துப் பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன் என்று அறிவுறுத்துகின்றார்.

''தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்''

என்றார் வள்ளுவர். இக்கருத்தை மனத்திற் கொண்ட பாரதியார்,

''சினங்கொள்வார் தம்மைத்தாமே தீயாற் சுட்டுச்
செத்திடுவார் ஒப்பாவார்''

என்று பாடியுள்ளார். பைந்தமிழ்ப் பாரதிக்குப் பின்னும் வள்ளுவத்தைத் தம் படைப்புக்களில் இடையிடையே இடம்பெறச் செய்ததன் வாயிலாகக் குறளுக்குக் குன்றா ஏற்றம் தந்து சிறப்பித்த எண்ணற்ற கவிஞர்களுள் தலைமையாய் எண்ணிப் பார்க்கத் தகுந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாவார்.

□

4

உரைவழிப் புலனாகும் வள்ளுவ உள்ளம்

பரிமேலழகரும் பைந்தமிழ்க் குறளும்

குறளுக்கு உரைவகுத்த பதின்மரில் பரிமேலழகர் சமயச் சார்புடையவர் ஆவார். எனவே, மதமிலார் நூற்கு மதமுளார் உரை செயின் பொருந்தாது என்று பாரதிதாசன் வாதிடுகிறார். மேலும் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர். அவருக்குப்பின் ஆயிரத்து எழுநூறு ஆண்டுகள் கழித்துத் தோன்றிய பரிமேலழகர் வள்ளுவரின் காலத்தைக் கணக்கிடாமல் நூலுக்கு உரை எழுதியது பொருந்தாது என்று சுட்டுகின்றார்.

''பரிமே லழகர் உரையோ வள்ளுவர்
திருவுள் ளத்தின் திரையே ஆனது!
நிறவேறு பாட்டை அறவே ஒதுக்கிய
தமிழ்த்திரு வள்ளுவர் அமிழ்தக் கொள்கையை
நஞ்சென்று நாட்டினார் பரிமே லழகர்''

என்று அவர் குற்றம் சாட்டுகிறார். மேலும் பாரதிதாசன்,

''பழந்தமிழ் நாட்டின் பண்பே பண்பென
அன்னார் ஆய்ந்த அறமே அறமென
ஒழுக்கமே ஒழுக்க விலக்கணம் ஆமென

வள்ளுவர் நாட்டினர், தெள்ளு தமிழர்
கீர்த்தியைத் திறம்பட எடுத்துக் காட்டினார்.
பரிமே லழகர் செய்த உரையில்
தமிழரைக் காணுமா றில்லை தமிழரின்
எதிர்புறத் துள்ள இனத்தார் மேன்மையின்
செருகலே கண்டோம்! செருகலே கண்டோம்!''

என்று பரிமேலழகர் தம்முடைய திருக்குறள் உரையில் வடநூற் கருத்துக்களை வலிந்து புகுத்தியிருப்பதால் திருக்குறள் வடநூலின் தழுவலோ என்றும் எண்ணம் ஏற்படும்படிப் பிழை செய்து விட்டாரென்றும் உணர்த்தியுள்ளார்.

'ஒழுக்கமுடைமை, குடிமை' என்னும் அதிகாரங் களுக்குப் பரிமேலழகர் எழுதிய விளக்கங்களை அதற்குச் சாலும் கரியாக்கிக் காட்டியுள்ளார்:

'ஒழுக்கமுடைமை' அதிகாரம் குறித்துத் ''தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏதப்பட்ட ஒழுக்கத்தினை உடையாராதல்'' என்னும் பரிமேலழகர் உரையைப் பாரதிதாசன் மறுப்பதுடன், ''உரையாயிது?'' என்று அதைப் பழிக்கிறார். அதற்கு மாறாக, ''ஒழுக்கமுடைமை உயர்தமிழ்க் குடிகளின் தன்மை உடையராதல்'' என்று உரைவகுப்பது பொருத்தமுடைத்ததாகும் என்கின்றார்.

'குடிமை' என்னும் அதிகாரம் பற்றிப் பரிமேலழகர், ''அஃதாவது உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்திற்கும் இன்றியமையாததாகலின் அச்சிறப்புப் பற்றி இது முன்வைக்கப்பட்டது'' என்று விளக்குகின்றார். பாரதி தாசன் பரிமேலழகரின் கருத்தை ஏற்காது, ''குடிமை என்பது குடிகளின் தன்மையே'' என்று குறிப்பிடுகின்றார். அதற்கு,

''வழக்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று''

என்னும் திருக்குறளில் உள்ள 'பழங்குடி' என்னும் சொல்லை எடுத்துக்காட்டாகக் காட்டுகின்றார். இவ்வாறு பரிமேலழகர் உரையில் மாறுபாடு கண்டதன் விளைவாகப் பாரதிதாசன் திருக்குறள் உரை எழுதினார் எனலாம்.

பாரதிதாசன் குறள் உரை:

'குயில்' கிழமை இதழில் 1-12-59 முதல் 27-12-60 வரை பாரதிதாசன் 'வள்ளுவர் உள்ளம்' என்னும் தலைப்பில் குறளுக்கு வளமான உரையை எழுத்து வடிவில் தந்தார். அவ்விதழில் வெளிவந்த பாரதிதாசன் உரைபெற்ற குறள்கள் பின்வருவனவாகும்.

அறத்துப்பால்

பாயிரம்

1.	உலகின் தோற்றம் (கடவுள் வாழ்த்து)	10
2.	வான்சிறப்பு	10
3.	நீத்தார் பெருமை	10
4.	அறன் வலியுறுத்தல்	10
5.	இல்வாழ்க்கை	10
6.	வாழ்க்கைத் துணைநலம்	10
7.	மக்கட்பேறு (புதல்வரைப் பெறுதல்)	10
8.	அன்புடைமை	10
9.	விருந்தோம்பல்	3
		83
பொருட்பால் - கொடுங்கோன்மை		2
		85

அறத்துப்பாலில் எண்பத்து மூன்று குறள்களுக்கும் பொருட்பாலில் இரண்டு குறள்களுக்கும் ஆக எண்பத்தைந்து குறள்களுக்கும் பாரதிதாசன் உரைவிளக்கம் தந்துள்ளார்.

குறள் உரை அமைப்பு:

பாரதிதாசன் குறள் உரை அமைப்புப் பல்வேறு சிறப்புக் கூறுகளைக் கொண்டு விளங்குகின்றது. அறத்துப்பால் குறித்து உரைப்பாயிரத்தில் விளக்கி எழுதியுள்ளார். ஒவ்வொரு அதிகாரத்திற்கும் முன்னுரை எழுதியுள்ளார். ஒவ்வொரு குறளுக்கும் பொருள், கருத்து, இலக்கணக்குறிப்பு, மேற்கோள் விளக்கங்கள் ஆகியவற்றை இடம்பெறச் செய்துள்ளார். ஆத்திகர், நாத்திகர் வினாக்களும் உரையாசிரியர் விடையும் உரையாடல் வடிவில் அமைந்துள்ளன. சொற்பிரித்தலைப் 'பி' என்றும் அதனோடு மொழிமாற்றைப் 'பி.மா' என்றும் குறுக்க விளக்கமாகக் குறித்துள்ளார்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, நன்னூல், பிங்கலந்தை, நீதிநெறி விளக்கம், திருவாசகம், திருவாய்மொழி, நாலடியார், பகவத்கீதை போன்ற நூல்கள் மேற்கோள் காட்டப் பயன் படுத்தப்பட்டுள்ளன. தாயுமானவர், அருணகிரியார், பட்டினத்தார், சிவஞானபோத உரையாசிரியர் போன்றோரின் பாடல்களும் கருத்துக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. வள்ளுவரின் கடவுள் கொள்கையையும் இம்மை, மறுமை, எழுமை, வினைப்பயன் முதலியவை பற்றிய கோட்பாடுகளையும் பாரதிதாசன் புதிய நோக்கில் அணுகியுள்ளார்.

திருவள்ளுவர் பாயிரம் எழுதவில்லை என்று வ.உ.சி. கூறுவதைப் பாரதிதாசன் ஏற்கவில்லை. பரிமேலழகர்,

'இடும்பை' என்பதற்குப் 'பிறவித்துன்பம்' என்றும் 'இருமை' என்பதற்குப் 'பிறப்பு, வீடு' என்றும் பொருள் கொள்வதைப் பாரதிதாசன் மறுக்கின்றார். 'அறவாழி அந்தணன்' எனத்தொடங்கும் குறள்சமணச்சார்பு உடையது என்பதைப் பாரதிதாசன் ஒத்துக்கொள்ளவில்லை. 'எண் குணத்தான்' என்பதற்கு 'எட்டுக்குணத்தான்' என்றுசைவர் பொருள்கொள்வதையும் அவர் ஏற்க மறுக்கின்றார். அறம் பொருள், இன்பம், வீடு என்பவை வடநூல் கொள்கை என்ற கருத்திற்கு உடன்பட அவர் மறுக்கின்றார்.

உரைவழிப் புலப்படுத்தும் வள்ளுவ உள்ளம்:

வள்ளுவர் எந்தவோர் இடத்திலும் 'கடவுள்' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை என்றும் 'கடவுள் வாழ்த்து' இடையில் ஏற்பட்ட வேலையென்றும் புரட்சிக் கவிஞர் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

''கடவுள்'' - கடந்தது; அறிவுக்கு எட்டாதது என்னும் அதன் பொருளையும் நோக்குக. எட்டாத ஒன்றுக்கும் பெயர் எப்படி இருக்கும்? இவைகளைக் கருதியன்றோ வள்ளுவர் தம் நூலில் கடவுள் என்ற பெயரையே எடுதாளாது விட்டார்'' என்று புரட்சிக்கவிஞர் புதுமை யான விளக்கம் வழங்கியுள்ளார். எனவேதான் முதல் அதிகாரத்திற்குக் 'கடவுள் வாழ்த்து' எனப் பெயரிடாமல் 'உலகின் தோற்றம்' என அவர் அவ்வதிகாரத்திற்குப் பெயரிட்டுள்ளார். தாம் உரைவகுத்துள்ள எண்பத்தைந்து குறள்களுள் வள்ளுவர் உள்ளத்தை வழுவாத நிலையில் வெளிப்படுத்திக் காட்டும் தன்மையில் குறள் தொடர்கள் சிலவற்றிற்கு அவர் தந்துள்ள விளக்கம் நுட்பமும் திட்பமும் பெற்றதாகும். இனி, அவ்விளக்கத்தை விரிவாகக் காண்பதன் வாயிலாகத் தமிழ் நெறிப்பட்ட வள்ளுவர் உள்ளத்தின் உயர்வினையும் உணர்வோமாக:

ஆதிபகவன்:

குறளின் முதல் அதிகாரத்தில் முதற் குறளிற்குப் பாரதிதாசன் தந்துள்ள விளக்கம் எண்ணத் தகுந்ததாகும்:

''அகரத்தை முதலாவதாக உடைய எழுத்துக்களும் அவ்வெழுத்துக்களால் ஆகிய சொற்களும் அச்சொற்களால் பெறப்படும் பொருள்களுமாகிய எல்லாம் முதன்மை யினின்று தோன்றியவை.''

மக்கள் பகவனை முதல்வனாகக் கொள்ளத்தக்கவர் என்று பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்கள் பொருள் கொண்டதற்கு மாறுபடப் பொருள் உரைத்துள்ளார். 'ஆதிபகவன்' என்ற தொடரையும் தக்க காட்டுக்களுடன் விளக்கம் செய்துள்ளார்.

''ஆதியாவது எல்லாப் பொருளும் தோன்றுதற்கிட மாவது.'' இதை உறுதிப்படுத்தும் நிலையில்,

''தனையறி வரிதாய்த் தாமுக் குணமாய்
மனநிகழ் வின்றி மாண்பமைப் பொருளாய்
எல்லாப் பொருளும் தோன்றுதற் கிடமெனச்
சொல்லுதல் மூலப் பகுதி''

என்ற மணிமேகலைச் செய்யுளையும் மேற்கோளாக்கி யுள்ளார்.

''பகவன் வடசொல் அன்று; பகல் எனப் பொருள்படும் பகவு ஆண்பால் இறுதிநிலை பெற்றது. பகல் - அறிவு, ஆகுபெயர், உணர்வு எனலும் அமைந்து. பகவு ஆண்பாலாற் சொல்லப்படினும், பகவு அமைதாவது உணர்வு என்றே கொள்க.''

''அறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி
அப்பொருள் எல்லாம் அறிந்திடற் குணர்வாய்

ஒன்றாய் எங்கும் பரந்து நித்தியமாய்
நின்றுள உணர்வாய் நிகழ்தரும் புருடன்''

எனப் பகவன் இலக்கணத்தை மேகலைச் செய்யுள் வழி உணர்த்தி ஆதிபகவனுக்கு அரும்பொருள் உணர்த்தி யுள்ளார்.

கற்றலும் நற்றாளும:

''வாலறிவை வாலறிவன் என்பதற்கேற்பத் தத்துவத்தை நற்றாள் என்றார். நற்றாள் தொழுதலாவது தத்துவ உணர்வு பெறுவதாகும். மெய்யுணர்வை உண்டாக்காத கல்வியால் பயனில்லை'' என்று முதல் அதிகாரத்தில் இரண்டாவது குறளுக்கு உரை வகுத்துள்ள பாரதிதாசன் மெய்யுணர்வை உண்டாக்கும் நூல்கள் யாவை என்பதனையும் உண்டாக்காதன யாவை என்பதனையும் சுட்டியுள்ளார். ஆரிய நூல்கள், பாரதம், இராமாயணம், புராணங்கள் தமிழர்களால் கற்கத்தகாதவை; பொய்கள் நிறைந்தவை; பகுத்தறிவிற்கு ஒவ்வாதவை; தமிழரின் செயலுக்கு ஒத்துவராதவை எனக் கற்கக்கூடாத நூல்களைக் காட்டிய பாரதிதாசன், தமிழ் நூல்களையும் ஆரியர் நூல்களொழிந்த பிறமொழி நூல்களையும் கடைப்பிடிக்குமாறு வேண்டுகிறார்.

மலர் மிசையும் நிலமிசையும்:

முதலதிகார மூன்றாவது குறளின் தொடக்கமான 'மலர்மிசை' என்னும் தொடருக்கு மற்ற உரையாசிரியர்கள் போல் பொருள்கொள்ளாமல் 'உயிர்கள் மாட்டு' எனப் புதுமுறையில் பொருள் கொள்ளும் பாரதிதாசன், ''அன்பருள்ளமாகிய மலரில் இருப்பவன்'' என்று அதற்குப் பொருள் கொள்ளுதல் வழுவாகும் எனக் கருதுகின்றார். 'நிலமிசை நீடுவாழ்வார்' என்பதற்கு ''வீட்டுலகில் நீணாள் வாழ்த்தலும் ஐந்தாறு நாள் வாழ்ந்து மீளுதலும்'' என

இரண்டில்லாமையைக் காரணமாகவும் காட்டியுள்ளார். அன்றியும் நிலமிசை என்பது வீட்டுலகில் எனப் பொருள் படாது என்றுரைக்கும் பாரதிதாசன், 'மன்னுக பெரும நீ நிலமிசையானே' என்ற புறநானூற்று வரியையும் அதற்கு ஆதாரமாக்கியுள்ளார்.

வேண்டுதல் வேண்டாமை:

முதலதிகாரத்தில் 'வேண்டுதல் வேண்டாமை' என்று தொடங்கும் குறளுக்குப் பாரதிதாசன் பகர்ந்துள்ள உரை உன்னுதற்குரியதாகும்:

''மெய்யுணர்வு பெற்றோர்க்கு யாண்டும் துன்பம் ஏற்படுவதில்லை. இக்குறட்பாவால் உருவ வணக்கத்தை யும் அவ்வுருவங்கட்குக் கோயில் கட்டுவது, உணவு, உடை, இழை தருவது முதலிய (மடமை) வழக்கத்தையும் வள்ளுவர் எதிர்த்துள்ளார்'' எனப் பாரதிதாசன் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஐந்தவித்தலும் நீடு வாழ்தலும்:

முதலதிகாரத்தில் 'பொறிவாயில்' என்பதைத் தொடக்கமாகக் கொண்ட குறளில் பயிலும் 'ஐந்தவித்தான்' என்பதனை விளக்க முற்பட்ட பாரதிதாசன், ''பற்றறுத்தல் என்றதொரு பண்பாடு துறவிக்கு மட்டுமே நலம் செய்யும் என்று வள்ளுவர் கூறினாரல்லர்'' எனக் குறிக்கும் பாரதிதாசன், ''இல்லறத்தானுக்கும் அது தேவை என்பது மட்டுமல்லாமல் இருந்தே தீரவேண்டும்'' என்று வலியுறுத்தியுள்ளார். இதே குறளில் காணப்படும் 'நீடுவாழ்தல்' என்ற தொடரை, ''அருள் மிகுதியால் தன்னலம் நீக்கி மக்கட்குச் செய்யும் தொண்டு நிறைவுறு மட்டும் துன்பின்றி வாழ்ந்திருத்தலாகும்'' எனப் புதுப்பொருள் தந்து விளக்கியுள்ளார்.

தனக்குவமையில்லான்:

முதலதிகாரத்தில் ஏழாவது குறளின் தொடக்கமான 'தனக்குவமையில்லான்' என்ற தொடரைச் சிறப்பாகவே பாரதிதாசன் விளக்கியுள்ளார்.

''மாந்தர் பெறத்தக்கது மெய்யுணர்வு''. அதாவது அறிவு என்று வள்ளுவர் கூறுகின்றார். இதில் கடவுள் பற்றிய செய்தியே எழவில்லை. மாந்தர் பெறத்தக்கது மெய்யுணர்வே. அந்த மெய்யுணர்வைத்தான் தனக்குவமையில்லாதான் என்பது போன்ற வகையில் சொல்லப் பாடல் பழக்கம் செய்தார். தனக்குவமை யில்லாதான் ஒருவனின் உருவம் ஒன்று இருக்கவே முடியாது. எப்போது ஒன்று உருவம் பெற்றதோ அப்போதே அது உவமை சொல்லப்படும் பொருளாகி விடும். மெய்யுணர்விற்கு அப்படியில்லை. உவமை சொல்ல முடியாதது அது'' எனத் தனக்குவமையில்லாதான் பற்றிப் பாரதிதாசன் தக்க விளக்கம் தந்துள்ளார்.

அறவாழி அந்தணன்:

முதலதிகாரத்தின் எட்டாவது குறளின் தொடக்கத் தொடரான 'அறவாழி அந்தணன்' என்பதைப் பாரதிதாசன் நுட்பமாக விளக்கியுள்ளார். ''அந்தணன் - அம், தண்மை என்ற சொற்றொடர் அன் இறுதி பெற்றது. அம், தண்மை என்பது அழகிய தட்பம் எனப்பொருள் தந்து, அருளைக் குறித்தது. அந்தணன் என்பதற்கு மறையின் அந்தத்தை அணவுவோன் எனத் தம் கலகக் கொள்கைக்கு ஏற்றவாறு பொருள் கூறிப் பொய்ப்பர். அத்தன்மையோர் அந்தண் கூடல், அந்தண் பாதிரி, அந்தண் காவிரி, என வருவன கண்டு அடங்கவேண்டும்'' என அந்தணன் என்பதற்குரிய பொருள் உரைத்துள்ளார்.

எண்குணமும் வணங்காத்தலையும்:

முதலதிகாரத்தில் 'கோளிற் பொறியிலவே' என்பதைத் தொடக்கமாகக் கொண்ட குறளில் இடம்பெற்றுள்ள 'எண்குணத்தான், தாளை வணங்காத் தலை' என்ற தொடர்களுக்குப் பொருத்தமுறப் பாரதிதாசன் பொருள் உரைத்துள்ளார். ''எண்குணம் என்பது வினைத்தொகை நிலைத்தொடர். எண்ணும், எண்ணிய, எண்ணுகின்ற என முக்காலத்தும் விரிவது. எண் என்பது எட்டுக்குணமன்று. வணங்காத்தலை என்பதற்கு வணங்காததாகிய தலை என்று பொருள் கொள்வாரும் உளர். அவர் அறியார். மெய்யும் வாயும் கண்ணும் மூக்கும் காதும் பயனற்றுப் போகையில் தலைமட்டும் வாழுமோ?'' என வினவும் பாரதிதாசன் 'வணங்காவிடத்து' என்று அதற்குப் பொருள் உரைத்துள்ளார்.

பிறவிப் பெருங்கடல்:

முதலதிகாரத்தில், இறுதிக் குறளின் தொடக்கமாகப் 'பிறவிப் பெருங்கடல்' என்பதை, ''ஈண்டுப் பிறவி என்றது மாண்டு பிறப்பது அன்று. நொடிதோறும் மிகப்பலவாக வேறுபட்டு வரும் மனக் குறிப்பையே. இவ்வாறு புத்தரும் கூறுகின்றார். அதைக் கணிகக் கணக்கு என்பர். முற்பிறப்பும் மறுபிறப்பும் கூறுவோர் சில சமயக் கணக்கர் தாமேயன்றி, எல்லாச் சமயத்தார்க்கும் எல்லா அறிஞர்கட்கும் அது ஒப்ப முடிந்ததன்று. வள்ளுவர் எம்மதத்தையும் சார்ந்தவரல்லர் என்பதை மறத்தல் கூடாது'' எனச் சமயச்சார்பற்ற முறையில் சரியாக விளக்கி யுள்ளார். இனி, இரண்டாவது அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள சில தொடர்களின் அரிய விளக்கம் பற்றிச் சிந்திப்போம்:

அமிழ்தம்:

முதற்குறளிடைக்காணப்படும் 'அமிழ்தம்' என்பதற்குத் தமிழ்தழுவிய விளக்கம் தந்துள்ளார். ''அமிழ்தமே மழை என்றிருக்கவும் அதை வற்புறுத்திக் கூறுவானேனெனில் 'அம்ருதம்' என்ற வடசொல்லாற் சொல்லப்படுவது அமிழ்தம் என்றும் அதுவே சாவா மருந்தென்றும் மக்களிடைப் பரப்பப்பட்டுள்ள புராணக் கொள்கையை மாற்றி, உண்மையை நாட்டலே என்க. இனி மழையே அமிழ்தாயின் ஈண்டு அமிழ்தெனும் சொல்லாற் குறிப்பிடுவதில் சிறப்பென்னவெனில், வெப்பமானது முகக்கும் அந்நீர் முகிலென்றும் அம்முகில் நீரைக்கொண்டு நின்ற நிலையில் அந்நீர் கொண்டல் என்றும் அக்கொண்டல் மேற்சென்ற நிலையில் அந்நீர் வான் என்றும் அவ்வான் கருமையுற்ற நிலையில் அந்நீர் மழை யென்றும் அம்மழைதான் வாழ்வார்க்கு அமிழும் உணவாக அமிழ்ந்து வரும் நிலையில் அமிழ்தென்றும் அவ்வமிழ்து நிலத்தை மருவும் நிலையில் மாரி என்றும் மற்றும் பற்பல நிலைகளில் அந்நீர் பற்பல பெயர் பெறினும் அவற்றில் அமிழ்து என்று கூறப்படும் நிலையே சிறப்பாதல் அறிக'' எனத் தமிழ் அமுதத்திற்கும் வட அமிருதத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கிக்காட்டி, அமிழ்தத்தின் உண்மைப்பொருளை உரைத்துள்ளார்.

உண்ணின்று:

மூன்றாவது குறளில் 'உண்ணின்று' என்ற தொடரை உண்+நின்று எனப் பிரியாது உண்+இன்று எனப் பிரித்துப்பொருள் உரைக்கின்றார். அதற்குரிய காரணத்தையும் கீழ்வருமாறு காட்டியுள்ளார்.

''பசி என்பது வயிற்றின் நிலை வேறுபாடு. அப்படியிருக்கப் பசி வயிற்றுக்குள் ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டு தொல்லைப்படுத்துவதென்பது எப்படி? அதைவிட மழை இல்லா தொழியுமானால் உணவு இல்லாது ஒழியும்; பசித்துன்பம் உண்டாகும் என்று கூறும் பொருள் நன்றாக இல்லையா?'' எனப் பாரதிதாசன் பொருந்தாப் பொருள் உரைத்தாரிடம் வினவுகிறார்.

சிறப்பொடு பூசனை:

எட்டாவது குறளின் தொடக்கத் தொடர்களான 'சிறப்பொடு பூசனையை' இலக்கியச் சான்றுகளின் துணைக்கொண்டு பாரதிதாசன் நுணுகி ஆராய்ந்துரைத்த பொருள் பாராட்டத்தக்கதாயுள்ளது 'வானோர்க்கும்' என்பதை வானோர்களுக்கும் எனக் கொள்ளாமல் வான்+ஓர்க்கும் எனப் பிரித்து, மேல் நோக்கி (மழையை) ஆராயும் எனப்பொருள் கொண்ட பாரதிதாசன் சிறப்பொடு பூசனையின் உண்மைப் பொருளை உணர்த்தியுள்ளளார். சிறப்பொடு பூசனை என ஆசிரியர் சொன்னது என்ன என வினவி,

> ''வன்கண் மறமன்னர் வாண்மலைந்து மேம்பட்ட
> புன்தலை ஒள்வாள் புதல்வன்கண்டு - அன்புற்றுக்
> கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
> வான்கெழு நாடு வர''

என்றும்

> ''காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
> பூப்பலி பெய்து புகைகொளீஇ - மீப்படர்ந்த
> காளை நடுகற் சிறப்பயர்ந்து கால்கொண்மின்
> நாளை வரக்கடவ நாள்''

என்றும்

''அன்றுகொள் ஆபெயர்த் தாரமரில் வீழ்ந்தோற்கு
இன்றுகொள் பல்லான் இனமெல்லாம் - குன்றாமல்
செய்ம்மினோ சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்
வைம்மினோ பீடம் வகுத்து''

என்றும் தொல்காப்பியப் புறத்திணையியல் ஐந்தாவது சூத்திரத்தின் மேற்கோள் செய்யுள்களைக்காட்டி, வள்ளுவர் குறித்துள்ள சிறப்பொடு பூசனை என்பது மன்னன் மைந்தன் முடிசூட்டும் பொழுது எடுக்கப்பட்ட விழாவையும் நடுகல்லிற்கு நிகழ்த்தப்பட்ட விழாவையும் ஆநிரைகவர்ந்து மீண்டோர் மேற்கொண்ட விழாவினை யுமே குறிக்கும் எனக் குறித்துள்ள பாரதிதாசன், இதை மறைக்கும் எண்ணத்தோடு கல்லிலும் செம்பிலும் கடவுளைக் காட்டும் பொல்லாநெறி குறித்ததாகப் புகல்வார் உரையைத்துகளுரையாகக் கருதி விடுக்குமாறு வேண்டுகிறார். காரணம் உருவ வணக்கத்தை வள்ளுவர் ஏற்பவர் அல்லர் என்பதாலாகும்.

தானம், தவம்:

ஒன்பதாவது குறளில், தொடக்கத் தொடர்களான 'தானம், தவம்' என்பவற்றில் தவத்திற்கு வள்ளுவ உள்ளக் கருத்திற்கு ஏற்பப்பொருள் உரைத்துள்ளார்.

''தவம் என்பது மிகுதிப்பொருள் தருவதோர் உரிச் சொல்லாகும். அது பிறர்பால் எழும் அருள் மிகுதியைக் குறிப்பதாகும். 'தவ' என்பது இழி வழக்காக மகர இறுதிபெற்றது. எதுபோலஎனில் 'சட்ட' என்ற செம்மைப் பொருட்டாவதோர் அகர ஈற்று இடைச்சொல் இழி வழக்காக மகர ஈறு பெற்றமைபோல். இவ்வாறு சிவஞானபோத உரையாசிரியரும் கூறினார். இதைத் 'தவஸ்' என்ற வடசொல்லின் சிகைவு என்று அறியாது கூறுவாரும் உளர்.

''உறுதவ நனியென வருஉம் மூன்று
மிகுதி செய்யும் பொருள் என்ப''

என்ற தொல்காப்பியம் உரியியல் சூத்திரப்பொருளை அறியாதாரே அங்ஙனம் தவறாகப் பொருள்கொள்வர்'' என்றுசுட்டுகின்றார்.

அடுத்து மூன்றாம் அதிகாரத்தின்விழுமிய தொடர்களின் சிறப்புக்கெழுமிய உரை வளத்தை உணர்த்த முற்படு வோம்:

நீத்தார்:

முதற்குறள் குறிக்கும் 'நீத்தார் என்பதற்குப் பொருள் கூறவந்த பாரதிதாசன் இல்லம் துறந்த தமிழ்ச் சான்றோர்களையே நீத்தார் எனச் சுட்டுகிறார். மனை, மக்களின் நலத்தையும் தன்னலத்தையும் துறந்து, மக்கள்பால் அருளுள்ளம் துறவாத நிலையென்று இல்லத்துறவு இன்னதாகும் என விளக்கியுள்ளார். மற்ற உள்ளத்துறவு உலகிற்குப் பயன்படாது என்றும் அவர் அறப்பனுவல் ஆக்க அருகதையற்றவர் என்றும் இல்லம் துறந்த தூயவரே வள்ளுவர் கருத்தில் நின்றவர் எனவும் குறித்துள்ளார்.

இருமை:

மூன்றாவது குறளில் வள்ளுவர் கையாண்டுள்ள 'இருமை' என்பதற்குப் பரிமேலழகர் உரைத்த பொருளைத் தக்க காரணத்துடன் கீழ்வருமாறு பாரதிதாசன் மறுத்துள்ளார்: ''பரிமேலழகர் பிறப்பு, வீடு என்று பொருள் கொண்டது பொருந்தாது. பிறப்பு, வீடு என எண்ணுங்கால் நடுவில் இருப்பு (வாழ்க்கை) என்பதும் எழுவதால் அறம், பாவம் எனப் பொருள் கொள்ளும்போது இடையில் எதுவும்விடப்படவில்லை. முற்பிறப்புக்கேள்வி எழுப்பப்

படத் தேவையில்லை. பிறந்துள்ளவன் இதற்கு முன் பிறந்தான் என்பது பற்றியும் இனியும் பிறப்பான் என்பது பற்றியும் திருவள்ளுவர் ஒன்றுமே சொன்னதில்லை. இதை மேலே விளக்கப்படும் முற்பிறப்பும் பிற்பிறப்பும் பற்றித் திருவள்ளுவர் கூறியுள்ளதுபோல் பரிமேலழகர் உரையில் தோன்றுகின்றது என்றால் அது பரிமேலழகர் வேலைப்பாடு என்க'' எனக் கூறுவதன் வாயிலாக இருமை என்பதற்கு அறம், பாவம் எனப்பொருள் கொள்ளுதலே வள்ளுவர் உள்ளத்திற்குப் பொருந்துவதாய் அமையும் என அவர் கருதுகிறார்.

வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து:

நான்காவது குறளின் ஈற்றடியான 'வரனென்னும் வைப்பிற்கோர் வித்து' என்பதற்கு, ''எல்லா நிலத்திலும் மிக்கது என்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்து ஆம்'' எனப் பரிமேலழகர் உரை கூறியிருக்க, அவ்வுரையை மறுத்து 'ஓர் வித்து' என்ற இரு தொடரையும் 'ஓர்வித்து' என்று ஒரே சொல்லாக்கி, 'வைப்பு' என்பதற்கு 'உலகினர்' எனப் பொருள் கொண்டு, ''இல்லத்துறவியானவர் தாம் கண்டவாறு உண்மையைப் பிறரும் உணரும்படிச் செய்து உலகினருக்கு இதுவே பெறத்தக்க இன்பப்பேறு என்று அருளிச் செய்து வலியுறுத்துவார்'' எனப் புதிய நோக்கில் பாரதிதாசன் பொருளுரைத்துள்ளார்.

ஐந்தவித்தானும் இந்திரனும்:

'ஐந்தவித்தான்' எனத் தொடங்கும் குறள் தமிழறிஞர் பலரின் திறனாய்விற்கு உட்பட்டதாகும். பாரதிதாசனும் இக்குறளைத் திறனாய்வு செய்துள்ளார். 'ஐந்தவித்தான் ஆற்றலை' இல்லத்துறவி யாத்த அறப்பனுவல் எனச் சுட்டியுள்ளார். 'இந்திரனை' இந்திரனாற் செய்யப்பெற்ற 'ஐந்திற நூலாகப்' பொருள் கொண்டுள்ளார். இங்ஙனம்

பொருளுரைப்பதற்கு இலக்கணத்தைத் துணைக் கொண்டுள்ளார். ''ஆற்றல் என்றால் ஆற்றலால் விளைந்த அறப்பனுவலை. இவ்வாறு ஆனது தொழிலாகு பெயர். இந்திரன் என்பது இந்திரனாற் செய்யப்பெற்றதாய் உரைக்கும் ஐந்திறம் என்னும் நூலை. இவ்வாறு ஆனது ஆக்கியோன் ஆகுபெயர் ஆகும். இவ்வாறு 'அகல் விசும்புளார் கோமான்' என்று அடை கொடுத்தார் எனில், இந்திரன் ஒருவன் இருந்தான் என்பதனையும் வள்ளுவர் ஒப்பினார் என்றும் அவ்வாறு ஒப்பவே ஐந்திறன் நூல் தமிழ் நூல்களில் முதல் நூலாகும் தகுதியையும் ஒப்பத்தான் நேரும் என்றும் பலவாறு எண்ணி இழுக்கடைய வேண்டாம். வண்தமிழ்நாட்டின்கண் வந்தேறிகள் தம்மை உயர்த்திக்காட்டப் பொய்ம்மையான நூல்கள் பல புனைந்தனர். அவ்வாறு புனைந்த பொய்யான நூற் கருத்துக்களை மெய்யெனப் பரப்பி வந்தனர். அவற்றைத் தமிழர் நம்பித் தம் ஒழுக்கத்திற் பிறழலாகாதன்றோ? என வினவுகின்றார். அது பற்றியே திருவள்ளுவர் இந்நூலில் மிகுதியான இடங்களில் தமிழர்க்கு விழிப்பை ஆக்கி மீட்கத் திருவுளங்கொண்டார் என்பதை மறத்தல் கூடாது'' என நெடிய விளக்கம் தந்துள்ள பாரதிதாசன் சிந்தனைத் தடத்தில் தமது உரையைப் பதித்துள்ளார்.

அரியதும் எளியதும்:

ஆறாவது குறள்சுட்டும் 'செயற்கரிய செயல்' என்பதற்கு ''இமயம், நியமம் முதலாய எல்லா யோக உறுப்புக்கள்'' என்றும் 'செயற்கு எளிய செயல்' என்பதற்கு ''மனத்தைப் பொறி வழிகளால் கட்டுப்பாடின்றிச் செலுத்துதல், வெஃகல், வெகுள்தல் முதலாயின'' என்றும் பரிமேலழகர் விளக்கியிருக்கப் ''பிறர்நலம் கருதி இல்லம் துறத்தலையும்

மக்களின் மேன்மைக்கும் ஒழுக்கத்திற்கும் உழைத்தலை யும் செயற்கரிய செயல்களாகவும் மதத்தையும் சாதியையும் வற்புறுத்தலைச் செயற்கெளிய செயல்'' என்றும் பாரதிதாசன் விளக்கிப் பரிமேலழகரின் உரைப்பொருளை மறுத்துள்ளார்.

நிறைமொழியும் மறைமொழியும்:

''நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை இவ்வுலகத்தின்கண் அவர் ஆணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டிவிடும். நிறைமொழி என்பது அருளக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தே விடும் மொழி'' என எட்டாவது குறளுக்குப் பரிமேலழகர் வகுத்துள்ள உரையைப் பாரதிதாசன் மறுப்பதுடன் தம் புதிய உரைப் பொருளையும் அறிமுகம் செய்துள்ளார்:

''இதில் அருளிக் கூறுவதும் வெகுண்டு கூறுவதும் துறவிகளுக்கு என்று காட்டினார். துறவிகள் அருளிக் கூறுவது எப்போது? வெகுண்டு கூறுவது எப்போது? தமக்குப் பயன்பட நடந்துகொள்ளும்போது அருளிக் கூறவாரென்றால் பயனை எதிர்பார்ப்பதும் அதற்குக் கைம்மாறு என்பதும் துறவிகட்கு அடுக்குமா? பிறர் தமக்குத் தீமையுற நடந்து கொள்ளும்போது வெகுண்டு கூறுவாரென்றால் சிறியார் செய்த சிறுபிழைக்கு வெகுள்வதும் அதற்காக அதனை ஒறுத்தலும் துறவிகட்கு அடுக்குமா? நீத்தார் என்பதற்கு முற்றுந் துறந்தார் என்று பொருள் கூறிய பரிமேலழகர் இவ்வாறு பொருள் கூறலாமா? ''எனப் பரிமேலழகரின் உரையை மறுத்து, ''பொய்ந்நூலுடைய பிறமொழிகளே மெய்ந்நூல் அருளிய தமிழ்ச் சான்றோரது பெருமையைக்காட்டிவிடும்'' எனத் தாம் வகுத்துள்ள புத்துரையை வழங்கி அதை மேலும் விரிவாக விளக்கியுள்ளார்:

''ஒருமொழி (பாடை) நிலைத்து வாழ வேண்டுமானால் அம்மொழியில் உண்மை நூல்கள் அமைய வேண்டும். அவ்வுண்மை நூல்களையும் மெய்யுணர்வுடையாரா லேயே செய்யமுடியும். அதற்கு நூலாசிரியர் பெருமையைப் பொய்ம்மை நிறைந்திருந்த காரணத்தால் நூல்களும் ஒழிய, அந்நூல்களினுடைய மொழியும் ஒழிந்து போனதென்று எடுத்துக்காட்டிவிடும் எனக் கருதிய வள்ளுவர் இவ்வாறு கூறினார்.'' இங்ஙனம் நிறைமொழி என்பதற்கும் மறைமொழி என்பதற்கும் முறையே உண்மை நிறைந்த மொழி எனவும் மறைந்து போன மொழி எனவும் பொருள் உரைத்ததன் விளைவுதான் மேற்காட்டியுள்ள புத்துரையாக எழுந்துள்ளது.

இனி நான்காம் அதிகாரத்தின் நயம் பெற்ற தொடர்களை நவிலுவோம்:

சிறப்பும் செல்வமும்:

முதற்குறளில் வள்ளுவர் காட்டியுள்ள 'சிறப்பு, செல்வம்' என்னும் தொடர்களுக்கு ''வீடுபேறு, துறக்கம் முதலிய செல்வம்'' என பொருளுரையைப் பரிமேலழகர் தந்திருக்க, அதனை ஏற்காத பாரதிதாசன் அத்தொடர் களுக்கு முறையே ''மெய்யுணர்வு, கல்விச்செல்வம், பொருட்செல்வம் முதலிய செல்வம்'' எனப் புதுப் பொருளுரையை வழங்கியுள்ளார்.

பொன்றாத்துணை:

வள்ளுவர் பயன்படுத்தியுள்ள 'பொன்றுங்கால் பொன்றாத்துணை' என்பதற்கு, ''உடம்பை விட்டு உயிர் போகும்போது அறம் அவ்வுயிருக்குத் துணையாகச் செல்லும்'' என்று பரிமேலழகர் பொருள்கொண்டுள்ளதை ஒப்பாத பாரதிதாசன், ''அறமானது உடல் அழியும்

நேரத்தில் மற்றோரழியா உடம்புமாகும்'' எனப் பொருளுரைத்துச் 'சாதலின் இன்னாதது இல்லை' என்றார் இவ்வாசிரியர் (திருவள்ளுவர்). அச்சாக்காட்டுத் துன்பம் ஏற்படும்போது அதை நீக்குவது மருத்துவனாலும் ஆகாது. ஆயின் அவன் தேடியுள்ள புகழே நீக்க வல்லது. அஃதேயுமன்றி அப்புகழ் அத்துன்பத்தை இன்பமாக்கி விடும். இவ்வுடம்பு செல்லினும் செல்லுக. இதோ, நிலைபெறுகின்றது புகழுடம்பு என்றெண்ணி அமைதி அடைவான் என வள்ளுவர் உளமறிந்து உரை விளக்கம் செய்துள்ளார்.

சிவிகை ஊர்தலும் சுமத்தலும்:

பரிமேலழகர் உரையை மறுத்தெழுந்த குறள்களுள் 'அறத்தாறு இதுவென வேண்டா' என்று தொடங்கும் குறளும் ஒன்றாகும். ''பல்லக்கில் ஏறியிருப்போன் அறம் ஆற்றியிருப்பான் என்றும் அதைச் சுமந்து செல்வோன் பாவம் செய்திருப்பவன்'' என்றும் குறித்துள்ள பரிமேலழகர் உரையை ஏற்றுக்கொள்ளாத பாரதிதாசன் ''செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை'' என அக்குறளுக்குப் புத்துரை கண்டார். மேலும், ''ஏறிச்செல்வோர் உயர்ந்தார் ஆதலும் இல்லை. சுமந்து செல்வான் தாழ்ந்தான் ஆனதும் இல்லை. அஃதேயுமன்றி ஏறிச்செல்லும் நிலை உயர்ந்ததுமில்லை. சுமந்து செல்லும் நிலை தாழ்ந்ததுமில்லை. முயற்சி மிகுதியாலும் குறைவாலும் வேறுபடும் அன்றைய நிலைவேறுபாடு அது. முயற்சி திருவினையாக்குமன்றோ! இவற்றை எல்லாம் கருதாது சில சமயத்தவர் கூறுவதை மேற்கொண்டு மயங்குதல் விரும்பத்தக்கதாமோ?'' என்று தாம் நிலைநாட்டியுள்ள கருத்தை அவர் விளக்கம் பெறச்செய்துள்ளார்.

இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள பொருள் நயமுடைய தொடர்களைப் புகலுவோம்:

இயல்புடைய மூவர்:

'முதற்குறள் சுட்டும் இயல்புடைய மூவர்' என்பதை உரையாசிரியர்கள் அம்மூவர் யாவரெனத் தத்தம் கருத்துப் போக்கில் விளக்கியுள்ளனர். பாரதிதாசன் அன்னை, தந்தை, ஆசிரியர் ஆகியோரை இயல்புடைய மூவராகக் காட்டியுள்ளார். மூவர் என்பவர் வடவர் கூறும் பிரம்மசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி ஆவர் எனக்காட்டும் பரிமேலழகர் உரையைத் தக்க காரணங்களுடன் அவர் ஏற்க மறுக்கிறார்.

''வருணமுறையை எதிர்க்கும் திருவள்ளுவர் பிரம்மசாரி முதலிய மூவரை உட்கொண்டு செய்யுள் செய்வாரா?'' என வினவும் அவர் பரிமேலழகர் தம் மதம் நோக்கித் தமிழரை வலிந்து இழுக்க முயல்வதையும் வெளிப்படுத்தியுள்ளார். அன்னை, தந்தை, ஆசிரியர் எனப்படும் மூவர்க்கும் இல்வாழ்வான் துணையாய் எங்ஙனம் இருக்கவேண்டும் என்பதையும் கீழ்வருமாறு அறிவுறுத்துகின்றார்.

''இல்வாழ்வார் அன்னைக்குத் துணையாவது என்பது பிணி, மூப்பு, சாக்காடு நேராமல் உணவு, உடை, உறையுள் உதவுவதோடு தாம் நன்னெறி பற்றி ஒழுகுதலாகும். தந்தைக்குத் துணையாவது என்பது உண்டி முதலிய உதவுவதோடு, 'இவன் தந்தை எந்நோற்றான் கொல்' என்னும் சொல்லையும் ஏற்படுத்துதலாகும். ஆசிரியருக்குத் துணையாவதென்பது, 'தயையாக வித்தையைச் சாற்றினோன் ஒரு பிதா' (குமரேசசதகம்) ஆதலின் அவனையும் தந்தை என எண்ணி, அவனுக்கு உண்டி முதலியவற்றில் குறைபாடின்றித் துணை

செய்வதும் அவர்பால் என்றும் நன்றியுடையனாதலும்'' என இயல்புடைய மூவருக்கும் இல்லறத்தான் ஆற்ற வேண்டிய கடமைகள்ளச் சுட்டியுள்ளார்.

இறந்தார்க்கு இயற்றும் கடன்:

இரண்டாவது குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் ''நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்துதலே இறந்தார்க்கு இல்வாழ்வான் துணைசெய்தலாகும்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துடன் முரண்பட்ட பாரதிதாசன், ''வையம் உய்ய அவர் வகுத்த முறைகளை அவர் இறந்தபின் இவ்வுலகிற் பரப்புதலும் இயற்றிய நன்னூல்களை அவர் இறந்தபின் முடித்துப்பயன் படுத்துதலும் பிறநலம் கருதித் தொடங்கிய பெருஞ்செயல், அரும்பொருட்களை அவர் இறந்தபின் நிறைவு செய்து உலகுக்குப் பயன்படுத்துதலும்'' என்று கூறும் புதுமைக்கருத்து பாராட்டிற்குரியதாகும்.

தென்புலத்தாரும் தெய்வமும்:

மூன்றாவது குறளின் தொடக்கத் தொடர்களான 'தென்புலத்தார், தெய்வம்' என்பவற்றிற்கு முறையே 'பிதிரர், தேவர்' எனப் பரிமேலழகர் பொருள்கொள்ளக் காரணம் வள்ளுவர் உள்ளத்தை நன்கு அறியாததாலாகும் எனப் பாரதிதாசன் கருதுகிறார். தென்புலத்தாரைக் கடல்கோட்பட்ட குமரிநாட்டிலிருந்து புகலென வந்தோராகப் பாரதிதாசன் சுட்டுகின்றார். அங்ஙனம் வந்தாரையும் தமிழ்நாட்டார் எனக்கருதி அவர் வாழ்விற்கான வழிவகை செய்தலை இல்லறத்தானின் கடமையாகவும் அவர்காட்டியுள்ளார்.

ஆ போன்றவைகளை நன்கு காத்தலும் அரசன் போன்றோரை வாழ்த்தி, அவர் கட்டளைக்குக் கட்டுப்படுதலும் அவரைப் போற்றுவதும் நிலம், தீ, நீர்,

வளி, விசும்பு போன்றவைகளின் பயனறிதலும் போற்றுதலுமே இல்லறத்தார் தெய்வத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளாக அறிவுறுத்தியுள்ளார். இங்ஙனம் கருதுதலே வள்ளுவர் உள்ளத்தை உணர்ந்தமையாகும் என்பது அவரின்துணிந்த முடிவாகும்.

அறத்தாறும் புறத்தாறும்:

புறத்தாறு என்பது துறவற நெறியென்று கருதினார் பரிமேலழகர். ஆறாவது குறளுக்கு அங்ஙனம் பரிமேலழகர் கருதியதை மறுத்த பாரதிதாசன், 'பிறநெறி' எனப் புறத்தாற்றிற்குப் பொருளுரைத்து, அப்பிறநெறி யாதென்பதை வருமாறு வரைந்துள்ளார்:

''பிறநெறியென்றது ஈண்டு வந்தேறிகள் மக்கள்பால் விதைத்துள்ள மடமை நெறிகளை. கொலை வேள்வி செய்வதால் வானுலகு பெறலாம், உருவங்களை நோக்கி நோற்றால் எல்லாம் பெறலாம் என்பன போன்றவற்றில் உள்ள தீ நெறிகளால் துன்பமே உண்டாகும் எனக்கருதும் வள்ளுவர் இவ்வாறு கூறினார் என்க''.

தெய்வத்துள் வைக்கப்படும்:

இறுதிக்குறளில் காணப்படும் 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற தொடருக்குப் பாரதிதாசன் ஆழமாகவே பொருளாய்வினை நிகழ்த்தியுள்ளார் ''வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும் என்பது பிறர்தம்மதமேற் கொண்டது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் என்றது அவ்வாறு மேற்கொண்ட அப்பிறர் மதத்தைக் களைந்தது. தெய்வத்துள் வைக்கப்படுவதற்குச் சமயக்கணக்கர் மேற்கொள்ளப் பணித்த முறைகள் வேறுவேறு. அவற்றையெல்லாம் தேவையற்றவை என ஒதுக்கி வாழும் முறைப்படி

வாழ்வதே வள்ளுவர் உள்ளக் கருத்திற்கு ஏற்புடையது ஆகும்'' எனப் பாரதிதாசன் எடுத்துக்காட்டியுள்ளார். இனி, ஆறாம் அதிகாரத்திற்கு உரை வகுத்துள்ள பாரதிதாசனின் கைவண்ணம் பட்டுப் புதுப்பொருள் பெற்றுக் காணப்படும் தொடர்களை எடுத்துக்காட்டுவோம்.

கற்பென்னும் திண்மை:

மூன்றாவது குறளில் 'கற்பென்னும் திண்மை' என்ற தொடரில் காணப்படும் 'கற்பிற்கு' ஆன்றகழ்ந்த ஆய்வுரையைப் பாரதிதாசன் மேற்கொண்டுள்ளார். கற்பு என்பது அவர் கருத்துப்படிப் பொருள் ஊட்டமுள்ள ஒரு தமிழ்ச்சொல்லாகும். அது 'கல்' என்ற முதனிலையும் 'பு' என்ற பண்புப்பெயர் இறுதிநிலையும் உடையது. கல்லின் தன்மை என்பது அதன் நேர்பொருள். கல்லின் தன்மை எத்தகையது என்பதையும் வருமாறு விளக்கியுள்ளார்:

''உலகம் வியக்குமாறு போரில் திறம்காட்டி மறவர் பெயர் பொறித்தும் உலகினுக்கு நன்னெறி காட்டிச்சென்ற தமிழ்ச்சான்றோர் பெயர் பொறித்தும் தன் வாழ்க்கைத் துணைவனோடு ஒன்றிய உள்ளமானது அசையாத்தன்மை பெற்று அரிது செய்த மகளிர் பெயர் பொறித்தும் கல் நடுவார்களன்றோ! அக்கல் அருஞ்செயல்களுக்கு அடிப்படையான பெரும்பண்புகளை நினைவுபடுத்து மன்றோ? கல்லின் தன்மை இதனால் அறியப்படும்''. எனவே, தக்காரின் பெரும்பண்பே கற்பு எனக் கற்பின் பொருளைக் கூர்மை நோக்குக் கொண்டு அவர் விளக்கியுள்ளார்.

பெய்யெனப் பெய்யும் மழை:

ஐந்தாவது குறளுக்குப் பரிமேலழகர் வள்ளுவர் உள்ளத்திற்கு இயைய உரை வகுக்கவில்லை என்பது பாரதிதாசன்கருத்தாகும். ''தெய்வம்தொழாமல்கணவரை

மட்டுமே தொழுது எழும் பெண்டிர் பெய்யெனக் கூறினால் மழை பெய்யும்'' என்பது பரிமேலழகர் உரையாகும். இவ்வுரையை ஏற்றுக்கொள்வது என்பது வள்ளுவர் உள்ளத்தை ஏற்றுக்கொள்ளாமையின் விளைவேயாகும். வள்ளுவர் உள்ளத்தைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்ட பாரதிதாசன், ''ஞாலம் விரும்பிய வண்ணம் பெய்யும் மழை போல் காதலன் விரும்பிய பொழுது அவன் பெறும் அளவு இன்பம் அளிப்பவள்'' என்று அனைவருக்கும் பொருந்துமாறு உரை செய்துள்ளார். தாம் வகுத்துள்ள உரையைத் தக்க சான்றுகாட்டியும் அவர் நிறுவியுள்ளார். ''மழையை நோக்கிப் பெய்யென வேண்டுவாள் எனின், எத்தெய்வத்தையும் வணங்காதவள் எனப்பட்டவள் மழைத் தெய்வத்தை வணங்கியவள் ஆவாளன்றோ! இதுகிடக்க. பன்னாட்கள் விண் நின்று பொய்ப்பதும் உண்டு. அந்நாட்களிலெல்லாம் கற்புடைப் பெண்டிர் என்பது இல்லாதொழிந்தார் என்பதா? உலகப் பெண்கள் அனைவரும் கற்பில்லாதவர் எனக்கொள்ளும் மனுவின் கொள்கையுடையார் அவ்வாறு கருதுவது பொருத்த மேயாகும். கற்புடை மகளிராலேயே இவ்வுலகு நிலைபெறுகின்றது எனக்காணும் தமிழர் அவ்வாறு கருதார். ஆதலால், வள்ளுவர் உள்ளம் அதுவன்று. மழை இயற்கையின் கொடை. அது மக்கட்குக்கட்டுப்பட்ட தன்று ''என மொழியும் பாரதிதாசன்,

''உறற்பால நீக்கல் உறுவார்க்கும் ஆகா
பெறற்பா லனையவும் அன்னவாம் மாரி
வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்
சிறப்பின் தணிப்பாரும் இல்''

என்ற நாலடியார் செய்யுளையும் தம் கருத்திற்கு அரண் செய்யும் ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

ஏழாம் அதிகாரத்தில் பாரதிதாசனால் புதுப்பொருள் ஊட்டப்பட்ட குறள்தொடர்களை எண்ணிப் பார்ப்போம்.

எழுபிறப்பு:

ஏழாம் அதிகாரத்திற்குப் ''புதழ்வரைப் பெறுதல்'' என்னும் தலைப்பைப் பரிமேலழகர் இட்டிருக்க, மணக்குடவர் வழிநின்று அவ்வதிகாரதிற்கு ''மக்கட்பேறு'' என்னும் தலைப்பைப் பாரதிதாசன் தந்துள்ளார்.

அவ்வதிகாரத்தின் இரண்டாவது குறளின் தொடக்கமான ''எழுபிறப்பு'' என்பது பாரதிதாசன் ஆய்வுக் குட்படுத்தப் பட்டுள்ளது. அதனடிப்படையில் பொருளை வகுத்துக் காட்டும் பாரதிதாசன் எழுபிறப்பு என்பதற்கு 'ஏழ்தலைமுறை' எனப்பொருள் உரைத்துள்ளார். பரிமேலழகர் உரைத்த பொருள் வள்ளுவர் உள்ளத்திற்குப் பொருந்திவராத தன்மையைத் தக்கவாறு காட்டியுள்ளார்.

''பரிமேலழகர் வினைக்கீடாக மக்களாய், விலங்காய், பறவையாய், ஊர்வனவாய், நீர்வாழ்வனவாய், மரம், செடி, கொடிகளாய், தேவராய்ப் பிறப்பானாம் எனக் கூறுகின்றார். அவன் நன் மக்களைப் பெற்றுவிட்டு இறந்து, பின் மக்களாகவோ விலங்காகவோ பிறந்தால், எந்தத்தீமையும் அந்த மக்களோ அந்த விலங்கோ பிறவோ அடைவதில்லையாம். ஏன்? அதுகிடக்கட்டும். நன்மக்களைப் பெற்ற ஒருவன் அடுத்த பிறப்பாகக் கீரைத் தண்டாகப் பிறந்தாலும் அந்தக் கீரைத்தண்டும் தீமை அடைவதில்லையெனின் கீரைத் தண்டாய்ப் பிறப்பதே தீமை அடைந்தவாறு தானே! அவன் புலியாய்ப் பிறக்கின்றான் எனின் புலியாய்ப் பிறப்பதே தீமை அடைந்தவாறுதானே! நன்மக்களை அடைந்ததால் பயன்

என்ன!'' என வினவி எழுவகைப் பிறப்பு எனப்பொருள் கொண்டது பொருந்தாது என்றும் அவ்வுரையை விடுக்குமாறும் பாரதிதாசன் வேண்டுகிறார். இனி எழு பிறப்பு எனின் ஏழு தலைமுறை எனப் பொருள் கொண்டமையை நிலைநாட்ட,

''கேசவன்றமர் கீழ்மேல் எமரே ழெழு பிறப்பும்'' என்ற திருவாய்மொழிப் பாட்டையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அடுத்து, அன்புடைமை என்னும் அதிகாரத்தின் முதற்குறள் பெற்றுள்ள பாரதிதாசனின் உரை நயத்தை அறிவோம்.

புன்கணீர் பூசல்தரும்:

''தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பங்கண்டுழி அன்புடைமையார் கண்பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லோரும் அறியத் தூற்றும்'' என்பது பரிமேலழகர் உரைத்த பொருளாகும். இப்பொருளை உடன்பட மறுத்துள்ள பாரதிதாசன், ''பிறர் துன்பங்கண்ட இடத்தில் மட்டும் கண்ணீர் வரும் என்பது பொருந்தாது. பிறர் இன்புறுதல் கண்டு இன்புறுதலும் துன்புறுதல் கண்டு துன்புறுதலும் அன்பு என அறிய வேண்டும். அவர் (பரிமேலழகர்) அன்பு என்பது தொடர்பு என்ற உண்மைப் பொருளை அறியாமையால் இவ்வாறு கூறினார் என்க. மற்றொன்றும் நினைவு கொள்ள வேண்டும். ''இன்புறக்கண்டு இன்புறும் போதும் கண்ணீர் வரும்'' எனப் 'புன்கணீர் பூசல் தரும்' என்ற தொடருக்குச் சிறப்பான பொருள் உரைத்துள்ளார்.

பொருட்பாலில் கொடுங்கோன்மை அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இரு குறள்களுக்குப் பாரதிதாசன் வழங்கியுள்ள புத்துரையைக் காட்டி நிறைவு செய்வோம்.

உறைகோடியும் வான்பெயலும்:

> ''முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
> ஒல்லாது வானம் பெயல்''

எனும் குறளுக்குப் பரிமேலழகர், ''மன்னவன் தான் செய்யும் பொருளை முறைதப்பச் செய்யுமாயின், அவன் நாட்டுப்பருவமழை இன்றாம் வகை மேகம் பொழிதலைச் செய்யாது'' என்று பொருள் கூறுகின்றார். அஃதாவது அரசன் முறை தவறி நடந்தால் மழை பெய்யாது என்கிறார். பரிமேலழகரின் இவ்வுரை விளக்கம் பொருத்த மற்றது என்பதை வருமாறு மெய்ப்பித்துள்ளார்:

''வேள்விக்கு மழை கட்டுப்படுவது'' என்று கூறி, மக்களை ஏய்க்கும் ஓர் இனத்தாரின் கொள்கையை வலியுறுத்தவே இவ்வாறு பரிமேலழகர் பொருந்தாப் பொருள் புகன்றார். அரசன் செய்யத்தக்க செயல்களை முறைதவறாகச் செய்வானாயின், உறைகோடி (ஏரி, குளம் முதலிய) நீர்த் தேக்கங்கள் சீர்கேடு அடைதலாலே வானம் பெய்தலைத் தேக்குதல் செய்யமாட்டா என்று பாரதிதாசன் இக்குறளுக்குப் பொருள் உரைக்கின்றார்.

ஏரி, குளங்களை மண்ணெடுத்து ஆழப்படுத்துவது நீர் ஊற்றுக்கருதி மட்டுமன்று, பெய்யும் மழையைத் தேக்கி வைக்கவேண்டும் என்பதைப் பெரும் நோக்கமாகக் கொண்டே அவ்வாறு செய்வர். இந்நாளில் தொண்டை நாட்டின் கேணியையும் கிணற்றையும் 'உறை' என்றே சொல்வது கருதத்தக்கது என்று சொல்லாட்சி வழியாகவும் தம் கருத்தை நிறுவும் பாரதிதாசன் குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கிப் பாடிய பாடலைத் (புறம் - 18) தம் கருத்திற்கேற்றதொரு எடுத்துக் காட்டாகவும் காட்டியுள்ளார்.

இங்ஙனம் 'உறைகோடி' என்பதற்கு 'நீர்த் தேக்கங்கள் சீர்கேடடைதல்' எனப் புதுமையாகப் பொருள் உரைத்துள்ளார்.

ஆபயனும் அறுதொழிலும்:

''ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்
காவலன் காவான் எனின்''

எனும் திருக்குறளுக்குப் பரிமேலழகர், ''காத்தற்குரிய அரசன் உயிர்களைக்காவானாயின் அறன் இல்லாத அவன் நாட்டுப் பசுக்களும் பால் குன்றும். அந்தணரும் நூல் மறந்து விடுவர்'' என்று விளக்கம் தருகின்றார். பாரதிதாசன் பரிமேலழகர் விளக்கத்தை மறுத்துத்தரும் விளக்கங்கள் வருமாறு:

''ஆபயன் என்பதற்குப் பசுவின் பயன் (பால்) குறையும் என்று கொண்டார் அவர் (பரிமேலழகர்). ஆபயன் என்றதை ஆவினது பயன் என ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டார். அவ்வாறு கொண்டால் 'ஆப்பயன்' என ஒற்று மிகல் வேண்டும். எனவே ஆபயன் என்பது வினைத்தொகை நிலைத்தொடர் என்க. ஆபயன் என்பது ஆனபயன், ஆகின்ற பயன், ஆகும் பயன் என முக்காலத்திற்கு விரியும். இங்கு ஆனபயன் என்று இறந்த காலத்திற்கு விரிக்க. ஆபயன் (ஆனபயன்) என்றால் அரசன் நல்லபடி ஆண்டு வந்தபோது ஆனபயன் என்பது பொருள். அவையாவன:

பகையரசன் அஞ்சிக் கப்பம் கட்டுதல், வரி, வரவு, முதலியன'' என ஆபயனுக்கு .அழமான பொருளை இலக்கணத்துணையுடன் இயம்பியுள்ளார்.

''இனி, அறுதொழிலோர் என்பது உழவு தொழில், வாணிகம், கல்வி, தச்சு, வரைவு ஆகிய ஆறு

தொழிலுக்குரியோர். அவர்தாம் ஆறு அமைச்சர். தம் கொள்கையை அவ்வலுவலர் கைவிடுவர். மேலும் பரிமேலழகர், 'அறுதொழில் என்பது ஆரிய மறை ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், அறிவுதரல், பிச்சைபுகல் ஆகிய அறுதொழில்' என்றார். பொருந்துமா? ஆரியர் தீயொழுக்கம் தமிழர்பால் தலை நீட்டத் தொடங்கக் கண்டறியவற்றுள் அவற்றை மறுத்துத் தமிழரைத் தமிழர் நெறியில் நிறுத்த அருளிய திருக்குறளில் ஆரியர் அறுதொழில் இந்நாட்டில் நடவாது ஒழிந்துவிடுமோ என்றா அழுவார்?'' என அறுதொழில் என்பதற்குப் பொருளுரைக்கும் பாரதிதாசன் பரிமேலழகர் கண்ட பொருள் பொய்ப்பொருளென விடுக்குமாறு வேண்டுகிறார்.

அரும்பதவுரைகாரர்:

''குறிப்பிட்ட ஒருகாலத்தில் வாழும் மக்களிடையே 'அறிவுப் பசி' தலையெடுக்கின்றபோது தங்கள் பழம்பெரும் நூல்களுக்குத் தங்கள் காலத்திய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப விளக்கம் தர அக்காலத்திய அறிஞர்கள் முயல்கின்றனர். அவருடைய உள்ளத்தில் ஆராய்ச்சி மனப்பான்மை மேலோங்கி நிற்கின்ற பொழுதும் பழமையில் புதியன காணவேண்டும் என்ற உணர்ச்சித் துடிப்பு உண்டாகின்ற பொழுதும் தங்கள் பழைய நூல்களுக்கு உரை எழுதுகின்றனர்'' என்ற க.த. திருநாவுக்கரசு என்னும் குறளறிஞர் கூற்றிற்கு இலக்கணமாய்ப் பாரதிதாசன் குறளுரை அமைந்துள்ளது.

இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட அவரின் சிந்தனை வளர்ச்சியே உரையாக உருவெடுத்துள்ளது. உரை எழுதுவதை இலக்கிய ஆக்க முயற்சியாகவே கருதி,

அதைக் கையாண்டுள்ளார். இலக்கணம், ஆசிரியர் உள்ளம் அறியாமை, சொற்பொருண்மை காணாமை என்பன போன்ற காரணங்களால் முன்னோர் உரையை மறுக்கும் நெறி பாரதிதாசனின் உரையிலும் காணமுடிகிறது. மறுத்துரைக்கும் நெறியில் ஆரியத்திற்குட்படாத, தமிழ்நெறித் தழுவுதலுக்குட்பட்ட வள்ளுவர் உள்ளத்தை மலரச் செய்துள்ளார்.

பாரதிதாசன் எழுதிய ஆத்திசூடி, கண்ணகிப் புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா ஆகிய நூல்களுக்கு அவரே உரை எழுதியுள்ளார். பாரதிதாசன் நயத்தகு உரையாசிரியர் என்பதை அந்நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன. எனவே ஆற்றல் மிக்க கவிஞராக மட்டுமல்லாமல் அரும்பொருள் உரைக்கும் உரையாசிரியராகவும் பாரதிதாசன் விளங்குகின்றார். □

5

வள்ளுவம் போற்றிய தெள்ளுதமிழ்ப் புலவர்

குறள்நெறிப் பற்று:

முப்பால் தந்தவர் மூதறிஞர் வள்ளுவர் ஆவார். முப்பாலைத் தம்பாடலாகிய தமிழ்ப்பாலுடன் கலந்தூட்டியவர் பாரதிதாசனாவர். பாரதிதாசன் புதுமைப் பாவலர் ஆவார்; புரட்சிக்கவிஞரும் ஆவார். ஆனால் பழமை இலக்கியங்களில் ஆழமான பற்று அவர் கொண்டிருந்தார். சங்க அகப்பொருளை விரும்பிய பாவேந்தர் அகப்பொருளின் சிறப்புணர்ந்து, அதனைக் காக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். நாட்டின் அகப்பொருள் இலக்கியங்கள் செழிப்புடன் வளரவேண்டும், பெருகவேண்டும் என்று விரும்பிய பாரதிதாசன் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங் களையும் நன்கு கற்றிருந்தார். அவற்றை விடக் குறளைக் கசடறக் கற்றதுடன் கற்றவாறே குறள் நெறியில் அவர் நின்றும் காட்டினார். குறள் நெறியே குவலயம் காக்கும் நெறியென உறுதியாக அவர் நம்பினார். வள்ளுவம் ஒவ்வொருவர் வாழ்வின் நடைமுறையானால் இற்றைச் சீரழிவிலிருந்து உலகம் உய்யும் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

பகுத்தறிவு நூல்:

பகுத்தறிவு இயக்கத்தில் பாரதிதாசன் ஈடுபாடு கொண்டார். மக்களுக்கு வாய்த்த நல்லவழி பகுத்தறிவாகும். பகுத்தறிவால் நலம் வகுப்பதுதான் திறம் எனக்கருதியதால், பகுத்தறிவிற்குப் புறம்பான ஏடுகளால் எந்தப் பயனும் விளையாது என்றும் அவற்றால் எள்ளைக்கூட அசைக்க இயலாதென்றும் குறிப்பிடும் பாரதிதாசன், பகுத்தறிவிற்குப் பொருந்திவரும் குறள்நெறியைத் தம் படைப்புக்களின் வாயிலாகப் பரப்புதலைத் தம் சிந்தையிற் கொண்டார்; செயற்படுத்தியும் அவர்காட்டினார்.

குறள்மணம் பரப்புதல்:

குறட்பெருமை பேசும் - குறள் மணம் வீசும் - குறள்நெறி விளங்கும் தன்மையில் குறளைச் சிறப்பித்துப் பல பாடல்கள் அவர் ஆக்கியுள்ளார். அவர் நெஞ்சைக் குறள் அள்ளியதுபோல் வேறு எந்நூலும் அவரது நெஞ்சைத் தொட்டதாகத் தெரியவில்லை. சிலம்பு பாரதிக்கு நெஞ்சை அள்ளும் சிலம்பாயிற்று. அவர் தாசனாருக்கோ குறள் நெஞ்சை அள்ளும் வாழ்விலக்கிய மாயிற்று. வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரும் பாரதியின் பாராட்டிற்கு உரியராயினர். அவர் அடியொற்றி வளர்ந்த தாசனாருக்கோ வள்ளுவரே அனைத்துமானார். குறளை நினைவுபடுத்தும் வகையில் சில பாடல் தலைப்புக்களையும் குறள் அதிகாரப் பெயர்களுடன் ஒத்துப்போகும் நிலையில் சில பாடல் அதிகாரத் தலைப்புக்களையும் அவர் கையாண்டுள்ளார். காப்பியங்களிலும் தனிப்பாடல்களிலும் எங்கெல்லாம் குறள் மணத்தைக் கமழச் செய்ய முடியுமோ, அங்கெல்லாம் குறள் மணத்தைக் குறைவின்றிக் கமழச் செய்துள்ளார்.

பாரதிதாசன் உணர்த்தும் வள்ளுவ உள்ளம்:

வள்ளுவரின் பாடற்பொருள்கள்:

சீரோங்கி வாழ்ந்த திருவள்ளுவர் இப்பாரோங்கி வாழச் செந்தமிழால் திருக்குறள் என்னும் செய்யுள் செய்யத் திருவுளங்கொண்டார். செய்யுள் என்பது செவ்விய உள்ளமாகும். அஃது நூலுக்காயிற்று. எனவே அது ஆகுபெயர் ஆகும். இனி, எப்பொருள் கொண்டு வள்ளுவர் செய்யுள் செய்தார் என்ற கேள்வி எழுகின்றது. நிலம், நீர், நெருப்பு, உயிர், விசும்பு ஆகியவை, அவற்றின் பகுதிகளாகிய உலகம், மக்கள், விலங்கு, பறவை முதலியனவும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவையும் அறிவு, முனைப்பு, மனம், ஆதி (மூலப்பகுதி), இறைவன் (பகவன்) ஆகியவையும் அறம், பொருள், இன்பம் ஆகியவையும் அவற்றின் நிலையின்மை யும் பிறவுமாகக் கூறப்பட்ட கருப்பொருள், நுண்பொருள் அனைத்தும் வள்ளுவரின் பாடற்பொருள்களேயாகும்.

நூற்பயன் நான்கு:

இப்பொருள்கள் அனைத்தும் அகப்பொருள், புறப்பொருள் என இருபெரும் பிரிவாக்கப்படும். செய்யுள் செய்வார் அகப்பொருளையும் புறப்பொருளையும் வைத்தேனும் இவ்விரண்டில் ஒன்றை வைத்தேனும் செய்யுள் செய்வர். அந்நெறியே பற்றி அகம், புறமாகிய இரு திணையையும் வைத்துத் திருவள்ளுவர் செய்யுள் செய்தருளினார் எனப் பாரதிதாசன் கருதுகின்றார். இனி, அகம், புறம் என்னும் இருபொருளும் பற்றிச் செய்யுள் செய்தாராயின் அவற்றால் எய்தும் பயன்களாக அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைப் பாரதிதாசன் காட்டியுள்ளார். இவ்வாறு நூற்பயன் நான்காகக் கொள்வது

வடவர் முறையன்றோ எனின் அன்று என அவர் குறிப்பிடுகின்றார். கடல்கொண்ட குமரிநாட்டு முதற் கழகத்தார் உலகிற்கு முதற்கண் அருளிய தமிழ் நான்மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கைப் பற்றியதாகும் என்பது அவரது அழுத்தமான கருத்தாகும். இங்ஙனம் வள்ளுவர் உள்ளத்தைத் தமிழ் தழுவிய உள்ளமாகவும் அறம் அணுவளவும் பிறழாப் பேருள்ளமா கவும் பாரதிதாசன் விளக்கமுறச் செய்துள்ளார்.

பாரதிதாசன் வழிப்புலனாகும் வள்ளுவர் வரலாறு:

போலிக்கதைகளைப் பொய்யாக்கல்:

திருவள்ளுவர்க்கு வரலாறு இல்லாமலே இருந்ததால் திருவள்ளுவர் ஆதி என்ற தாழ்த்தப்பட்ட மகளுக்கும் பகவன் என்ற பார்ப்பனுக்கும் பிறந்தார் என்ற அருமையான வரலாற்றை ஏற்படுத்தினார்கள் என்று கேலி தொனிக்கும் நிலையில் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார். வள்ளுவர்க்குப் பார்ப்பன வரலாறு ஏற்பட வேண்டும். அதையும் இப்படித்தானா ஏற்படுத்துவது என்று பாரதிதாசன் தமது வேதனையை வெளிப்படுத்துகின்றார். திருவள்ளுவர் பேரறிஞராகத் திகழக் காரணம் அவர் பகவன் என்னும் பார்ப்பனுக்குப் பிறந்தமையாலாகும் என்று தமிழ்ப் பகைவர்களால் கட்டிவிடப்பட்ட கற்பனைக் கதையை அவர் கடிந்துள்ளார். வள்ளுவரை இழிவுபடுத்தும் பொய்க்கதைகளனைத்தையும் தமது எழுத்து வன்மையால் முனை மழுங்கச் செய்தார்.

வயிறு வளர்க்கும் வகையற்ற புலவர்கள்

சோற்றுக்கென்றிருக்கும் செம்மையற்ற புலவர்களைத் தமிழை எதிர்ப்பாரின் அடிவீழ்ந்தெழும் இழிநிலை

உடையவராகப் பாரதிதாசன் காட்டுகின்றார். இவர்க ளெல்லாம் தொகையாம் செல்வத்தைப் போற்றுகின்றவர் களாதலால் ''சாஸ்திரத்தையும்'' தமிழென்றே பேசி நிற்பாராம். காற்றில் பறந்து போகும் பதராகக் காட்சி யளிக்கும் புலவர் சில்லோர் 'சீவல்லபரே' திருவள்ளுவரா னார் எனத் தப்பிதமாய்ச் சொல்லித் திரிகின்றனராம். செந்தமிழையும் செந்நாப்போதாரையும் தாழ்மைப் படுத்துவதற்காகவா இப்புலவர்கள் தம் நாவன்மையைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் நொந்து கொள்கின்றார்.

உள்படுகருமத்தலைமை:

வள்ளுவர் நெசவுத்தொழில் செய்தாரென்றும் சோதிடம் கணித்தாரென்றும் உழவுத்தொழில் செய்தாரென்றும் வள்ளுவர் தொழில் பற்றிய கதைகள் பலவாறாகப் பரவியுள்ளன. பாரதிதாசன் 'உட்படுகருமத் தலைவராக' வள்ளுவரைக் கருதுகிறார்.

''வள்ளுவன் சாக்கை எனும்பெயர் மன்னற்கு
உள்படு கருமத் தலைவற்கு ஒன்றும்''

என்னும் பிங்கலந்தைச் செய்யுளைத் தம் கருத்திற்கு ஆதாரமாக்கியுள்ளார். உள்படு கருமத்தலைமை என்பது வள்ளுவன் என்ற அலுவற் பெயரையே குறிக்கும் என்பது அவரது கருத்தாகும். பின்நாளில் வள்ளுவன் என்ற சொல் சாதியைக் குறிப்பதாகக் கருதும் நிலைமை உண்டாயிற்று.

வள்ளுவன் என்ற சொல் வண்மை என்பதன் அடியாகப் பிறந்தது. 'வண்மை' என்பது அறிவுவளத்தைக் குறிப்பதாகும். 'தேனருவிப்' பாடல் தொகுதியொன்றில்

வள்ளுவர் அரசவையில் உட்படுகருமத்தலைவராகப் பணிபுரிந்தார்என்பதைப்பாரதிதாசன்வலியுறுத்தியுள்ளார். 'வள்' என்று சொல்வது வண்மையாம் என்றும் மன்னர் உட்படுகருமத்தலைமை அலுவல் ஒன்றுக்கு வள்ளுவம் என்ற பெயரென்றும் சுட்டி, வள்ளுவர் ஆற்றிவந்த தொழிலை உணர்த்தும் பாரதிதாசன், அமைச்சரவையின் தலைவராகவும் அகம், புறம் காணும் வல்லவராகவும் தமிழ் மக்களின் பகைவரும் தம் தலையில் தூக்கியாடும் புலவராகவும் வள்ளுவரைப் படைத்துக் காட்டியுள்ளார்.

திருமண முறைகாட்டும் நறுமண நூல்:

தமிழர் திருமண முறையைத் தெளிவாக விளக்குகின்ற இலக்கியங்கள் இல்லை என்று கூறுவோரின் கருத்தை மறுத்துத் திருக்குறள் தமிழர் திருமண முறையை வெளிப்படுத்தும் நூல் என்று பாரதிதாசன் குறிப்பிடு கின்றார். வள்ளுவர் தந்த திருமணத்திட்டம் குறித்துப் பேசுகையில் ஒருவனும் ஒருத்தியும் மறைவாக ஒன்றுபடுவர் என்றும் பின்னர் வெளிப்படையாக வாழ்க்கையை அவர்கள் நடத்துவர் என்ற செய்தியைப் பாரதிதாசன் புலப்படுத்துகின்றார். பெண்ணிருக்கும் இடத்தைத் தெரிந்துகொள்ள மாப்பிள்ளையின் தந்தை பார்ப்பானிடத்தில் போவது பற்றியோ, கேளிக்கை, வாணம் கொளுத்துவது பற்றியோ, அம்மி, அருந்ததி பற்றியோ, தீ வளர்ப்பது பற்றியோ, பார்ப்பானுக்குச் செருப்பும் பருப்பும் கட்டணமும் பொட்டணமும் காலில் வைத்து விழுவது பற்றியோ வள்ளுவர் பேசவில்லை. தொல்காப்பியம், சங்கநூல்கள், காப்பியங்கள் முதலிய தமிழ் இலக்கியங்களில் இடைச்செருகல் உண்டென்றும் குறளில் மட்டும் இல்லையென்றும் பாரதிதாசன் சுட்டியுள்ளார்.

குறளும் கீதையும்:

வள்ளுவரைப் போன்றே ஆரியக் கருத்துகளுக்கு எதிரான பாரதிதாசனும் திருவள்ளுவமாலையில் இடம்பெற்றுள்ள,

''பகவற் கீதை பகர்ந்த கண்ணனை
நல்வட மதுரைக் கச்சென நவில்வர்
திருக்குறள் அருளிய திருவள் ளுவரோ
தென்மது ரைக்கோர் அச்சனைச் செப்புவர்''

என்னும் நல்கூர் வேள்வியார் பாடலை எடுத்துக்காட்டி, இதனால் கீதையும் குறளும் இருவேறு நூல்கள் ஆகும்; இருவேறு கொள்கைகளையுடையனவாகும்; இருவேறு மொழிகளில் இயற்றப்பட்டனவாகும்; இருவேறு பண்பாடுகளை உணர்த்துவனவாகும் என அறியுமாறு நம்மை வேண்டுகிறார். கீதை நான்மறையின் அடிப்படையில் எழுந்ததாகும். ஆனால் குறளோ ஆரூர்க் கபிலர் அருளிய எண்ணூல் அடிப்படையில் எழுந்ததாகும். எண்ணூல் என்பது வடமொழியாளர் வழங்கும் சாங்கியமாகாது. அது தத்துவ நூலேயாகும். ''சமயக்கணக்கர் வழிகூறாது உலகியல் கூறும் பொருள் இதுவென்ற வள்ளுவன்'' என்னும் கல்லாடனாரின் கூற்றின் அடிப்படையில் சிந்திப்போமானால் வள்ளுவர் எம்மதத்தையும் சாராதவராவார் எனத் துணியலாம். நிற வேறுபாட்டை ஒதுக்கியவர் தமிழ்த்திருவள்ளுவர் ஆவார். பழந்தமிழ்நாட்டின் பண்பாட்டையும் அற்றைத் தமிழர் ஆய்ந்த அறத்தையும் அவர்கள் கடைப்பிடித்து ஒழுகிய ஒழுக்கத்தையும் வள்ளுவர் தம் நூலில் திறம்பட எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆரியத்திற்கு அழுத்தமான மறுப்பு:

ஆரியக் கருத்துக்களுக்கு எதிராகத்தான் திருக்குறளை வள்ளுவர் இயற்றினார் என்ற தக்க தமிழறிஞர்களின் முடிவைப் பாரதிதாசனும் ஏற்றுக் கொள்கின்றார். ஆரியனும் வள்ளுவரும் பேசுவது போன்று ஆறு வெண்பாக்களைப் பாரதிதாசன் இயற்றியுள்ளார். ஆறு செய்திகளை ஆரியன் வள்ளுவர்க்கு உணர்த்தியதாகப் பாரதிதாசன் கற்பித்துக் கூறியுள்ளளார்.

அவை:

1. மேலுலகம் நல்லது.
2. தேவருலகே சிறந்தது.
3. மக்கள் பெறத்தக்கது மேலுலகே.
4. மேலுலகில் வாழ்பவர்களே நிலவுலகைப் படைத்தனர்.
5. ஆரிய நான்மறையே சிறந்தது.
6. மேலுலகில் வாழ்பவர்களுக்குப் பிணி ஏற்படுவ திில்லை. எனவே அவர்கட்கு மருந்து தேவையில்லை. வறுமையும் அவர்கட்கில்லை. ஆகவே பசி, பட்டினியால் அவர்கள் சாவதில்லை. இவ்வாறு ஆரியன் உரைத்த கருத்துக்களையெல்லாம் வள்ளுவர் தக்கவாறு மறுத்துப் பேசுவது போலவும் பாரதிதாசன் காட்டியுள்ளார்:

1. தாம்பிறந்த நிலவுலகமே நல்லது.
2. மேலுக்குமேல் இருப்பது நிலவுலகமாகும்.
3. மக்களைக் கொண்டது நிலவுலகு.
4. மக்கள் பெறத்தக்கது நிலவுலகே.
5. நிலவுலகின் ஏட்டுச் சுரைக்காயே மேலுலகம்.

6. மேலுலகில் இருப்பார்க்கு நோய் இல்லை என்றால் அங்கு உபேந்திரன் என்னும் மருத்துவன் இருப்பதாக ஏன் புராணங்கள் சுட்டுகின்றன? இரப்பாரில்லாத வாழ்க்கை சுவைக்காதென்றெல்லாம் வள்ளுவர் மறுத்துரைப்பதாகப் பாரதிதாசன் காட்டியுள்ளார். மனுவும் ஆரிய நான்மறையும் ஒரு குலத்துக்கொரு நீதி வகுத்தன. ஆயின் வள்ளுவர் பிறப்பில் உயர்வு - தாழ்வு இல்லையெனும் நீதியை வலியுறுத்தித் திருக்குறள் இயற்றினார். வள்ளுவரை மானுடக் குமுகாயம் உய்யப் பாடிய 'மானுடம்பாடி' என்று பாரதிதாசன் பாடியுள்ளார். அதற்குப்

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற குறளைச் சான்றாக்கியுள்ளார்.

ஒன்றுபட்ட உயர் குமுகாயம்:

பாரதிதாசனின் கருத்துப்படி வள்ளுவருக்கு நிறமில்லை; மதமுமில்லை. மதங்கட்கு அப்பாலிருந்தே வள்ளுவர் குறள் செய்துள்ளார். நிலவுலகிலுள்ள சில மதம் குறிக்கும் சொற்கள் கொண்டே உவகையொடு தத்தம் மதத்தில் வள்ளுவரைச் சேர்த்துள்ளனர். அவருக்குத் தெள்ளிவைத்த நீறிடுகின்றனர்; திருமண் சாத்துகின்றனர். அவரைச் செழும்பிண்டி அமர்ந்தானைச் சேர்ந்தவர் எனப் பொருத்தமின்றிப் பிறர் காட்டும் யாவும் சரி என்று பாரதிதாசனுக்குத் தோன்றவில்லை. ஒரு குமுகாய ஒழுங்கு, ஒற்றுமையைப் பெருமனத்தால், பேரன்பினால் நெருங்கிப் பிணைத்தவர் வள்ளுவராவார். வேற்றுமை நிழலை அருகில் நெருங்கவிடாமல் அன்னையாய்க் காப்பவரும் வள்ளுவரே. தமது எழுபதாம் ஆண்டிற்குப் பின்னும் நன்கு தாம் வாழ்வதற்கான 'நோற்றலின் ஆற்றல்'

தருபவரே வள்ளுவர் எனத்தம் அனுபவம் வாயிலாகவும் வள்ளுவரின் பெருஞ்சிறப்பை உணரச் செய்துள்ளார்.

வாழ்விக்கும் வள்ளுவநெறி:

தமிழர் வாழ்வாங்கு வாழ வழிசெய்வது வள்ளுவ நெறியாகும். வள்ளுவர் வாய்ச்சொல் பொய்யென விரிநீர் உலகில் எவரும் விள்ளார். 'கொடிது, கொடிது, வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை' என ஔவை குறிப்பிடுவதுபோல் உலகை அரித்து, உருக்குலையச் செய்யும் வறுமையிலிருந்து மீட்கக் காமத்தை வெல்லச் சொல்லும் புத்தநெறி பயன்படாது. மக்களின் தாழ்வு - உயர்வுப் போராட்டம் வேரற்றுப் போனால் உலகநலம் உருவாகும் எனக் குறிப்பிடும் பெரியார் நெறியும் உகந்ததாகாது. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர், தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்ற தெள்ளு தமிழ்ப் பாட்டுச் செப்பிய வள்ளுவர் நெறியே வறுமையிலிருந்து வையத்தை மீட்டிக் காக்கும் எனப் பாரதிதாசன் அழுத்தமாக நம்புகின்றார்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப் படும்' என்ற கருத்தினை வலியுறுத்தும் வள்ளுவ நெறி ஏழைக்கு இரங்குமாறு எடுத்துச் சொல்கின்றது. இன்சொலால் ஈத்தளிக்க வல்லாரையே உலகம் பாராட்டும் என உணர்த்துவதும் வள்ளுவ நெறியாகும். குறள் நெறியை மறந்தால் அறிவை இழத்தல், கோயில் உருவத்தைத் தொழுதல் போன்ற மூடப்பழக்கங்களுக்கு அடிமையாகும் அவலநிலை உருவாகும். ஏனெனில் அறிவு வாயிலான திருக்குறளில் கோயிலுக்கு இடமில்லை எனப் பாரதிதாசன் கோடிட்டுக் காட்டுகின்றார். குடும்ப விளக்கில் இக்கூற்று உரையாடல் வடிவத்தில் உணர்த்தப்பட்டுள்ளது:

நாடிமுத்து வேடப்பனிடம் இன்றியமையாத ஒன்றிற்காகப் பத்து உருபாயைக் கடனாகக் கேட்டான். வேடப்பனும் பணம் தர ஒப்பினான். அப்பொழுதில் வேடப்பன் மகளான 'அமிழ்து' குறள் ஒன்றைத் தூக்கித் 'தொப்' பென்று போட்டு, அதில் கோயிலைக் காட்டுமாறு வேண்டினாள். குறளில் கோயில் இல்லை என்ற விடை தந்தையிடமிருந்து வெளியாகின்றது. இதனைக் கேட்ட நாடிமுத்து பின்வருமாறு நவிலுகின்றான்:

''தில்லைக் கோவிலுக்குச் செல்ல எண்ணியே
பத்து ரூபாய் பணம் உன்னைக் கேட்டேன்
கோயில் இல்லையா குறளில்?
ஆயில்என் பணத்துக் கில்லை அழிவே''

எனக் காட்டும் பாரதிதாசன் வழிபடத் தகுந்தது வள்ளுவர் இயற்றிய குறளே தவிரக் கோயிற்சிலை இல்லை என்று குறளைத் தொழுத்தக்க நிலையில் உணர்த்தியுள்ளார். குறள் நெறி வழங்கினால் உலக இனவேற்றுமை பட்டுக்கெடும். தள்ளத்தகாத வள்ளுவர் வாய்மொழி எண்ணிய நலங்களை எல்லாம் சார்வார் இடத்தில் சார்த்திடச் செய்யும். வள்ளுவ நெறி வாழ்க்கை நெறியானால் குருதி தூய்மைப்படும். உயிர் செழுமைபெறும். உலகத்துன்பம் தூர விலகும். உலகு ஒழுங்குபெறும் என்றெல்லாம் வள்ளுவநெறியின் மேன்மை நலன்களை மேதினிக்குப் பாரதிதாசன் எடுத்துரைக்கின்றார்.

குறள்பால் குன்றா ஆர்வம்:

அறமும் மறமும்:

இந்நாளில் அறம் தேய்கின்றது; மாய்கின்றது. மறம் பெருகுகின்றது; பேயாட்டம் நிகழ்த்துகின்றது. மறந்தள்ளி அறம் கொள்ளப் பாரதிதாசன் காட்டும் வழியாது?

''அறமி தென்றும் யாம் மறமி தென்றுமே
அறிகி லாத போது - யாம்
அறிகி லாத போது - தமிழ்
இறைவ னாரின் திருக்குறளிலே ஒருசொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா?''

என்று குறள்பால் தாம் கொண்டுள்ள ஆவலையே பெற்றோர் வழி வெளிப்படும் ஆவலாகத் தாம் பாடியுள்ள 'இசையமுதில்' காட்டியுள்ளார். குறளை முழுமையாகப் பயிலுதல் தேவையில்லை. முழுக்குறள் கூடச் சொல்லத் தேவையில்லை. குறளின் ஒரு சொல் மறம்போக்கி, அறம் ஆக்கும் ஆற்றலுடையதென்றால் குறள் முழுவதற்கும் உரிய ஆற்றலை நம் கற்பனைக்கே பாரதிதாசன் விட்டு விடுகின்றார்.

பயில வேண்டுவன:

'குடும்ப விளக்கில்' தங்கம் எனும் பெண் நல்லாள் பச்சைப் புலவரிடம் பயின்று திரும்பிய தன்மகனைப் புலவர்கற்பித்ததைக் கூறுமாறு வேண்டிய பொழுது, நல்ல புறநானூற்றில் நான்கும் திருக்குறளில் கல்வி அதிகாரப் பத்துக் குறள்களையும் தனக்குப் புலவர் கற்றுத்தந்ததாக மைந்தனைக் குறிப்பிடச் செய்வதிலிருந்து குறள் எந்த அளவிற்குப் பாரதிதாசனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுள்ளது என்பதை உணரலாம். ஏனெனில் இன்று அகக்காதல் புறமாகிப் புன்மைப்பட்டுள்ளது. புறவீரம் அகமாகி அடங்கியுள்ளது. பண்டைத் தமிழரின் வீரத்தையும் காதலையும் இம்மண்ணில் மீண்டும் தழைக்கச் செய்யவேண்டும் என்று பாரதிதாசன் கருதியதால்தான் வீரம் விளம்பும் புறநானூறையும் அறத்துடன் கூடிய அகக்காதலைப் புலப்படுத்தும் குறளையும் இளமையில் படிக்கத்தகுந்த நூல்களாகச் சுட்டியுள்ளார்.

இல்லறத்தின் நல்லற நெறி:

சங்க காலத்தில் ஏறு தழுவுதலில் வெற்றிபெறுகின்ற ஆடவரே பெண்ணை மணக்கும் தகுதியுடையவர் ஆதல்போலப் பாரதிதாசனும் குறள் படிப்புப்பெற்ற ஆடவரையே மணத்தகுதி பெற்றவராக அறிவிக்க வேண்டுமென அவாவுகின்றார். குறட்செல்வம் அல்லாத வேறு எப்பெருஞ்செல்வமாயினும் தன்னை மணக்கும் தகுதினையத் தந்துவிடக் கூடாதென்றும் தமிழ்ப்பெண் முடிவெடுக்க அவர் தூண்டுகிறார். கணவன் - மனைவி என்ற இல்லற வாழ்க்கையின் இணையரையும் இன்றைய நாள் அரசுச் சட்டத்தின் விளைவாக அவ்வாழ்க்கை இணையர் பெற்றிருக்கும் இரு பிள்ளைகளையும் குறளின் ஈரடியாக அவர் உருவகித்துள்ளார்.

குறளைக்கற்ற நற்றமிழன் ஒருவனின் கூட்டுறவே பெண் ஒருத்திக்கு மக்கட்பேற்றைச் சிறப்பாக வழங்கும் என்பது அவரது திடமான கருத்தாகும். வள்ளுவர் அருளிச் செய்த சீர்மிகு அறநூல் ஆகிய குறள் சொல்லியுள்ள தலைவி மற்றும் தகுசீர்த்தித் தலைவன் போலவே மணம் பெற்று மணமக்கள் இன்புற்றிருந்ததாகக் 'குடும்ப விளக்கில்' குறிப்பிடுகின்றார். பிறந்த குழந்தைக்குப் பெயரிடத் தமிழ்ப் பெரியார்பால் தரத் தமிழரின் தமிழ்க் குழந்தை தமிழ்ப்பெயர் பெறுதல் வேண்டுமாதலால் வள்ளுவர் 'அமிழ்து' எனச் சுட்டியுள்ள அமையுறும் மழைபோல் நன்மை நல்கும் குழந்தைக்கும் 'அமிழ்தென்று' பெயர் அமைப்போம் எனக் 'குடும்ப விளக்கில்' காட்டப்படும் பெரியார் கூற்றின் வழியாகக் குறள்பால் கொண்டிருக்கும் குன்றா ஆர்வத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

புதுமணப்பெண், புதுமாப்பிள்ளை ஆகிய இருவரும் புலவராகிய வள்ளுவர் தந்த திருக்குறளின் பொருளாய்

வதற்கு (காமத்துப்பால்) வகை செய்துவைத்த இடமாக வும் வாழ்வில் இன்பம் பயக்கும் இடமாகவும் மணமக்கள் இன்பம் துய்க்கும் பள்ளியறை பாரதிதாசனுக்குக் காட்சியளிக்கின்றது. அறியாதவற்றை அறிவிக்கும் இடமே பள்ளியறையாகும். எனவேதான் கல்விக்கூடமும் துறவிகள் வாழும் இடங்களும் 'பள்ளி' என்ற பெயரையே பெற்றுள்ளன. உடற்கு இன்பம் தரும் கல்வி மட்டு மில்லாமல் உயிர்க்கும் உறுதிதரும் குறட்படிப்பும் பள்ளியறையில் இடம் பெற்றால் பள்ளியறைகளெல்லாம் வெறும் கலவிக் கூடங்களாக இல்லாமல் உயர் கல்விக் கூடங்களாகவும் மலரும் என்ற பாரதிதாசனின் உள்ளக் குறிப்பும் நமக்குப் புலனாகிறது. குறள் கலந்த சூழலில் துய்க்கும் மணவறை இன்பமே மனைக்கு நன்கலமாகிய நன்மக்கட்பேற்றையும் நல்கவல்லது என்பதையும் மறைமுகமாய் அவர் உணர்த்தியுள்ளார்.

வாழ்வில் முதுமைப்பருவம் வந்தெய்தும் காலத்திலும் குறளைப் பயிலும் பயிற்சியைக் கைவிடலாகாது என்ற கருத்தைக் 'குடும்ப விளக்கில்' 'முதியோர் காதல்' என்னும் பகுதியில் கீழ்வருமாறு விளக்குகின்றார்:

இரவில் பாற்கஞ்சி குடித்தபின் குறட்பாவின் இரண்டு செய்யுளைப் படித்து, அவற்றிற்கு விரிவுரையாவும் ஆய்ந்த பின்னரே துயிலச் செல்வதாக மணவழகர், தங்கத்தம்மை என்னும் முதியவர்களைப் பாரதிதாசன் பேச வைத்துள் ளார். உறங்கும்பொழுதும் குறள் உணர்வுடன் உறங்கி, எழும்பொழுதும் குறளுணர்வுடன்ஒவ்வொருவரும் எழவேண்டும் என்பது பாரதிதாசனின் வேணவாவாகும்.

மரபுப் புரட்சி:

'மழையுண்டா' என்று அமைச்சரிடம் மன்னன் கேட்கும் பண்டைய மரபிற்கேற்பப் பாரதிதாசனும் 'குறிஞ்சித்

திட்டில்' தாம் காட்டியுள்ள மன்னனை அமைச்சனிடம் கேட்கச் செய்கின்றார். அமைச்சனோ மரபுவழி விடை கூறாமல் புதிய மரபிற்குப் பொருந்தும் நிலையில் ஞாலத்து வள்ளுவர் நன்னெறியைவிட்டே மக்கள் ஒழுகுவதால் 'அமிழ்து ஒரு துளியுமில்லை' என அமைச்சனை விடையாகக் கூறச்செய்தமை குறள்பால் பாரதிதாசன் கொண்டிருக்கும் ஆர்வத்தை அடையாளம் காட்டுகின்றது.

தன்னேரில்லாத் தமிழும் தமிழ்நெறிக் குறளும்:

முதன்முதல் நான்மறை செப்பிய செந்தமிழை முத்தாகக் காட்டும் பாரதிதாசன் புகழ் மிகுந்த புதுவாழ்வு காட்டிடும் திருக்குறள் பூத்த பூம்பொழிலாகவும் தன்னேரிலாத தமிழைக்காட்டி மகிழ்கின்றார். எவைக்கும் மேலாய், எவைக்கும் உள்ளான, சுவைப்பட்டு உயிரில் உயிர்ப்போடு வாழ்க்கையில் ஒங்கியும் உயர்ந்தும் பாங்குற விரிந்தும் மேன்மைக்கெல்லாம் மேம்பட்டுத் திகழும் தமிழ் மொழியில்தான் ஒருவனாய் உலகிற்கு ஒப்பற்று உயர்ந்த வள்ளுவன் சொல்லாகிய புதையலைத் தாம் கண்டெடுத்ததாகப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார். பொன்சேர் தொல்காப்பியம், புறப்பொருள், அகப் பொருள் தன்னேரிலாக் குறள் இவைசார்ந்த இலக்கியம் பல்லாயிரத்தைக் கொண்டுள்ளதாகப் பைந்தமிழைப் பாரதிதாசன்காட்டியுள்ளார்.

திருக்குறள் நன்னெறி வாழ்வின் முதன்மை நெறியாகும்; செந்தமிழ் நாட்டான் பெற்ற தன்னெறியாகும். தமிழகம் மீள்வதற்குக் குறள் நன்னெறியே புகலாகும் எனப் புகல்கின்றார். நம் செயற்கெல்லாம் அறமே அடிப்படை யாகும். அறமென்றால் வள்ளுவர் அருளிய திருக்குற ளையே அவர் காட்டுகின்றார். திருக்குறள் நாம் நடந்து செல்லும் வழியை ஒளிபெறச்செய்யும் விளக்காகும்;

மனமாசறுக்கும் இனிய மருந்தாகும். திராவிடத்தை இழிநிலையிலிருந்து மீளச்செய்யும் வழி யாதெனில் குறளைக் கசடறக் கற்றலாகும். கற்க முடியாதவர் கற்ற அறிஞர்பால் குறள் கேட்டு ஒழுகுதல் வேண்டும். வானுக்குச் செங்கதிர் ஒன்றாகும். புனல் வண்மைக்குக் காவிரி ஒன்றாகும். நன்மானத்தைக் காத்து வாழ என்றும் இந்த வையத்திற்கு ஒன்றாவது குறளேயாகும் என்று குறளின்ஒப்பற்றதன்மையை அவர்உணர்த்தியுள்ளார். தாம் கூறிய கூற்றை உறுதிப்படுத்துவதற்காக மக்களால் உயர்ந்ததாகக் கருதப்படுகின்ற ஒன்றின் மீது ஆணையிட்டுக் கூறுவது இம்மண்ணின் மரபாகும். அம்மரபினைப் போற்றும் வகையில் தம் கூற்றை உறுதிப் படுத்துவதற்காகப் பாரதிதாசன் குறள்மீது ஆணையிட்டுக் கூறுகின்றார்.

குவலயம் போற்றும் குறளைத் தமிழ் ஏடென்றும் பொதுமறையென்றும் முப்பாலென்றும் அறநூலென்றும் தம் பாக்களிடையே பெயர் சூட்டி அவர் பாராட்டுகின்றார். இக்குறளை யாத்த வள்ளுவப் பெருமகனாரை இறைவனார், ஆன்றோர், புலவர், தேவர் என்றும் பெயரிட்டு அவர் சிறப்பித்துள்ளார். 'தொழுதெழுவாள், கசடறக் கற்க, இல்லாரை எள்ளுவர், ஒழுக்கம் விழுப்பம் தரும்' எனப்படும் வள்ளுவர் கையாண்ட தொடர்களையே தாம் பாடியுள்ள பாடல்களுள் சிலவற்றிற்குத் தலைப் பாக்கியுள்ளார். 'திருக்குறள் படித்தான்' என வள்ளுவர் நூலின் பெயரையே காதற்பாட்டொன்றில் தலைப்பாக்கி யுள்ளார். வள்ளுவர் சுட்டியுள்ள 'நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல், கல்வி, ஒப்புரவு, அறிவுடைமை, மக்கட்பேறு என்னும் அதிகாரத் தலைப்புக்களையே தாமும் படைத்துக்காட்டி, அவற்றிற்குப் புது விளக்கமும் அவர் தந்துள்ளார்.

குறளின் அமைப்பும் அழகும்:

தெள்ளுதமிழ் நடையில் சின்னஞ்சிறிய இரண்டடிகளால் யாக்கப்பட்ட திருக்குறள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் அறம், பொருள், இன்பப் பகுப்புடையதாய், அள்ளுதொறும் அவரது கருத்திற் சுவையளிக்கின்றது. அதனை உள்ளுதொறும் உயர்வு அவரது சிந்தனையில் உருவாகின்றது. வள்ளுவன் வாய்மொழியில் அவரது கருத்துப்படிப் பொல்லாதது எதுவுமில்லை; வாழ்வின் அனைத்துத் துறைகளையும் வெல்லாதது இல்லை; புரைதீர்ந்த வாழ்வின் அனைத்து நிலைகளுக்கும் அழைத்துச் செல்லாதது இல்லை; பொதுமறையான திருக்குறளில் இல்லாதது எதுவுமில்லை. முப்பாலுக்கு எதுவும் இணையில்லை. குறளுக்கு முன்பும் அதற்குப் பின்பும் குறள் போன்ற உயர்ந்த நூல் இருந்ததில்லை. முன்னூற்றி முப்பது முத்தாக மூன்றுபடி அளந்த பிழை தீர் நெறி குறள்நெறியாகும். எத்திப் பழுத்தவர் ஏமாற்றும் ஆரியர் நான்மறை போல் ஏமாற்றும் அத்திப்பழமாகக் குறள் ஆவதில்லை என்றும் தித்திக்கும் முப்படிச்சுவையின் முப்பாலுடையது என்றும் பாரதிதாசன் குறளைப் பெருமைப்படுத்தியுள்ளார். சாதி, மக்கள் தாழ்வு-உயர்வு காட்டாமல் தீதகற்ற வந்ததே திருக்குறளாகும். நீனிலத்தில் யார்க்கும் நல்ல வழி அளிக்கும் ஆற்றல் பெற்றதே வள்ளுவர் ஆக்கிய குறள் நூலாகும் என்றெல்லாம் குறளின் அமைப்பையும் அழகையும் பாங்குற அவர் பகர்ந்துள்ளார்.

நாடக வடிவும் நல்ல கதை வடிவும்:

திருக்குறள் கருத்துக்கள் மக்கள் மத்தியில் எளிமையாகப் பரவுவதற்காக அவர் நாடக வடிவிலும் நல்ல கதை வடிவிலும் குறட்கருத்துக்களைப் பதியச்

செய்துள்ளார். புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'பொன்னி' இதழின் சார்பிதழான 'முத்து' என்னும் இதழில் திருக்குறள் 'ஊக்கமுடைமை, தீவினையச்சம்' என்னும் அதிகாரங்களில் இடம் பெற்றுள்ள இரு குறட்பாக்களைச் சிறு நாடகங்களாக்கியுள்ளார். அக்குறள்கள் பின்வருவன வாகும்:

1. ''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையா னுழை''.

2. ''தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை வீயாது அடியுறைந் தற்று''.

குறட்கருத்துக்களை மையமாகக் கொண்ட கதைவடிவ நிகழ்ச்சியையும் அவர் காட்டியுள்ளார்:

''மாணிக்கத்தின் பசுமாடு நோய்வாய்ப்பட்டது. வாகீச அய்யர் வருகை தந்தார். மாணிக்கம், நேற்று வந்தீர்கள். என் பசுமாடு நோயால் கிடந்தது. இன்றும் வந்தீர்கள் . உயிர்ஊசலாடுகிறது. மாட்டைக்காப்பாற்ற மருந்தெழுதிக் கொடுங்கள் என்று கேட்டான். உடன் அய்யர், 'உன் மனத்துன்பத்திற்கு மருந்தாக இதை எழுதிக்கொடுத்தேன். படித்துக்கொள்க' என்று கூறினார். 'முற்பிறப்பில் செய்த வினைப்பயனை வெல்லமுடியாது' என்று வெள்ளைத் தாளில் அய்யர் எழுதியிருந்தார். பின்னர் மாணிக்கத்திடம் வாகீச அய்யர் கூலி கேட்டார். இல்லையென்றான் மாணிக்கம். ஏனென்றான் பார்ப்பான். அதற்கு மாணிக்கம் பார்ப்பன் எழுதிக்கொடுத்ததையே மீண்டும் அவன் கையில் கொடுத்தான்.'' வள்ளுவர் ஆரியச்சமயச்சார்பான பல்பிறவிக்கொள்கைக்கு எதிர்ப்பாளர் என்ற கருத்தை இச்சிறுகதையில் பாரதிதாசன் எடுத்துரைத்துள்ளார்.

புரட்சிக்கவியின் புதுக்குறள்:

குறளில் ஈடுபாடு கொண்ட பாரதிதாசன் குறளைப் போன்று தாமும் ஒரு நூலைப் படைக்க வேண்டுமென எண்ணினார். அதற்குப் 'பாரதிதாசன் திருக்குறள்' எனப் பெயரிட்டார். அவர் பாடியுள்ள குறள்கள் பின்வருவனவாகும்:

1. ''எந்நற் பொருள்கட்கும் ஏங்கா தொருவயின்
மன்னலே ஆகும் மனம்''.

2. ''ஒருவன் புகழ்வான் ஒருவன் இகழ்வான்
இரண்டுக்கும் அப்பால் இரு''.

3. ''இடைச்செருகல் வள்ளுவரில் இல்லை படைத்தமிழ்
யாவினும் உண்டென்பேன் யான்''.

4. ''இருந்தாள் இருக்கின்றாள் என்றும் இருப்பாள்
வருந்தாள் மறத்தமிழ்த் தாய்''.

5. ''அவன்செய லாலவன் செல்வம் அடைந்தான்
எவன்செயலால் ஏந்துகின்றான் கை''.

ஆயினும் 'பாரதிதாசன் திருக்குறள்' முழுமை நிலையில் நூல்வடிவம் பெறவில்லை.

புரட்சித் திருமணத் திட்டம்:

நிராவிடர் புரட்சித் திருமணத் திட்டத்திற்குப் பாரதிதாசன் குறளையே அடிப்படையாக அமைத்துக் கொண்டார். திருமணத் திட்டம் குறித்துப் பாரதிதாசன் கூறிய கருத்துக்கள் பின்வருவனவாகும்: அவைத் தலைவர் ஒருவர் முன்மொழியப் பிறிதொருவர் வழிமொழிய வேண்டும். அதன்பின் திருமணத்தை நடத்தி வைக்கும் அவைத்தலைவர் திருமணமேடை இருக்கையில்

அமர்வார். மூடநம்பிக்கைகளைக் கொண்ட ஆரியத் திருமணமுறையை எதிர்த்துத் தமிழர் திருமணமுறையை வலியுறுத்தியும் அவர் பேசுவார். பின்னர், மணமக்களை வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியைக் கூறச் செய்வார். மணமக்களிருவரும் மாலையையும் கணையாழியையும் மாற்றிக்கொள்வர். அந்நிகழ்ச்சிக்குப்பின் தலைவர் மணமக்களைத் திருக்குறள் வழியில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுமாறு அறிவுரைகள் கூறுவதுடன் இல்வாழ்விற்கு ஏற்ற குறள்களையும் எடுத்து மொழிவார். எனவே 'திராவிடர் புரட்சித் திருமணத்திட்டம்' பாடுவதற்குத் திருக்குறளும் அவர்க்கு அடிப்படை யாயிற்று எனக் கருதுவதில் பிழையிராது.

குறள் போற்றுவாரைப் போற்றல்:

குறள்பால் தாம் ஈடுபாடு கொண்டிருந்ததுடன் அதன்பால் ஈடுபாடு கொண்டிருந்த நல்லறிஞர்களையும் பாரதிதாசன் பாராட்டி மகிழ்ந்துள்ளார். வாணாள் முழுவதும் குறளையே தம் பேச்சாகவும் மூச்சாகவும் கொண்டு நகைச்சுவை கலந்த நடையில் குறட்கருத்துக்களை மக்களிடையே மலரச் செய்த திருக்குறள் முனிசாமி பாரதிதாசன் பாராட்டில் உயர்ந்து நிற்கின்றார். ஒளவை அருளிய ஆத்திசூடியின் ஒரு தொடருக்கான உரையை எப்படி ஒருவர் எளிமையாக நினைவில் நிறுத்தி இனிது உரைப்பாரோ, அப்படித் திருக்குறள் முனிசாமி என்னும் அறிஞரும் முப்பால் ஆயிரத்து முன்னூற்று முப்பது குறளையும் அவற்றிற்குரிய பொருளையும் நினைவில் நிறுத்தி இனிது விளக்கும் ஆற்றலுடையவர் எனப் பாரதிதாசன் அவரைப் பாராட்டி மகிழ்கின்றார். நகைச்சுவை, மறச்சுவை, பிறசுவையும் விரவிய அவரது வாய்மொழி அனைத்தும் பெரும்பயன்

அளிப்பவையாகும். அரிசிமா இட்டலி அளிப்பதாய்ச் சொல்லிப் பாசிப்பயிற்றையும் உமியையும் படைப்பவர் திருக்குறள் முனிசாமியாகார் என உவமை வழியாகவும் அவரது உயர்வைப் பாரதிதாசன் காட்டுகின்றார். அவர் பேச்சும் எழுத்தும் அருங்குறளாகிய தேனாற்றிலிருந்து மொண்டு கொள்ளப்பட்டவையாகும் எனப் பாரதிதாசன் பகர்கின்றார். குறட்பயன் கொள்ளத் திருக்குறள் முனிசாமி கூறிய சொல்லை நாம் ஏற்றுக் கொள்ளுதல் குறளைப் பயின்றதற்கு ஒப்பாகும் என அவர் சொல்லிற்குக் குறட்பெருமையைக் கூட்டுவித்து மகிழ்கின்றார்.

□

6

பாரதிதாசன் பாக்களில் குறளாட்சி

பாரதிதாசன்தம் பாடல்களில் குறளைப் பல்வகையில், பல்வடிவில் பயன்படுத்திக் காட்டியுள்ளார். முழுமை வடி.வத்தில் குறள்கள் சில முத்தாய்ப்பாகக் காணப்படுகின்றன. வள்ளுவத் தொடர்களும் சில்லிடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறள்கள் சில கவிஞனின் கைவண்ணத்தில் புது விளக்கம் பெற்றுத்தடம் பதித்துள்ளன. குறட்கருத்துக்களை எதிரொலித்துக் காட்டும் பாடல்வரிகளும் ஏற்றமுற ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

முழுக்குறளாய் முகிழ்த்தவை:

''வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்''

என்ற குறளின் வழித் தம் செயல்களைச் செம்மையாக ஆற்றும் திராவிடர் இயல்பைத் தம் பாடலாகிய 'திராவிடர் திருப்பாடலில்' விளக்கியுள்ளார். அதே திருப்பாடலில்,

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

என்ற குறள்நெறி ஒழுகும் நிலமாகத் திராவிடத்தைச் சுட்டியுள்ளார். வடநூல் கொண்டே வள்ளுவர் குறளை இயற்றினார் என்ற தவறான எண்ணம் ஏற்படும்படிப் பரிமேலழகர் உரை செய்தார் என்பதை மறுக்குமிடத்தில்,

''வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று''

என்ற குறளை ஆதாரமாக அவர் பயன்படுத்தியுள்ளார்.

பாரதிதாசன் திராவிடர் புரட்சித் திருமணத் திட்டத்தைத் தம் பாடலில் வகுத்துள்ளார். அதில் மணவினை நிகழ்த்தும் தலைவரின் அறிவுரைகளாக,

''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு''.

''வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று''.

''இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு''

என்னும் குறள்கள் இடம் பெற்றுள்ளன. 'குடும்ப விளக்கில்' குழந்தைச் செல்வத்தைச் சிறப்பிக்கும் இடத்தில்,

''அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்''

என்னும் குறளைக் கையாண்டுள்ளார். குறிஞ்சித்திட்டில் அமைச்சர் வழியாக அரசியின் பண்புநலனைச் சுட்டுமிடத்தில்,

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்ற குறள் எடுத்தாளப்பட்டுள்ளது.

'அமிழ்து எது?' எனத் தலைவன் ஒருவன் தன் தலைவிக்கு உரையாடல் வழி உணர்த்த முற்பட்ட பொழுது,

''வானின் றுலகம் வழங்கி வருதலான்
தான்மிழ்தம் என்றுணரற் பாற்று''.

''வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி''.

''உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலான் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்''

என்னும் குறள்களைக் கவிஞர் இடம்பெறச்செய்துள்ளார். பொங்கல் வாழ்த்துக் குவியலில் இடம்பெற்றுள்ள 'உழவர் திருநாள்' என்னும் திருப்பாட்டில் உழவரை உயர்த்திக் கூறும்பொழுது,

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

என்ற குறள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

'புரட்சிக்கண்ணகிக் காப்பியத்தில்' பாண்டிய மன்னன் தன்தவ்றறிந்து இறக்கவும் பாண்டியனின் உயிர் போன்றவளான பாண்டிமாதேவியும் உடனிறந்து போவதைக் கவிஞர் குறிக்கும் இடத்தில்,

''நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது''

என்ற குறள் காட்டப்பட்டுள்ளது. 'மணிமேகலை வெண்பாவில்' மணிமேகலையை அறம் பேசுகின்றவ ளாகக் காட்டுமிடத்தில்,

''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்''

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என்ற குறள் அறங்களைப் பேசுபவளாக மணிமேகலை கவிஞரால் படைக்கப்பட்டுள்ளாள்.

'பன்மணித்திரளில்' 'இந்தியா?' என்னும் பாடலில்,

''ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து''

என்ற குறள்வழித் தமிழரின் இந்திமொழித் திணிப்புப் பற்றிய எதிர்ப்புணர்வை எடுத்துச் சொல்லியுள்ளார்.

'உலகுக்கு மீட்சி உண்டா?' என்ற பாடலில்,

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற குறள் நெறியையே வறுமை தீர்க்கும் வழியாக அவர் வலியுறுத்துகின்றார். வள்ளுவ நெறிப்படி வாழும் முறையை வகுத்துக்காட்டியுள்ள பாரதிதாசன்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''.

''இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு''.

''ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை''

என்ற குறள்களை வாழ்க்கை நெறிக் குறள்களாக வகுத்துள்ளார்.

''கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு''

என்ற குறளே தமது தளர்ந்த அகவையிலும் தமக்கு உரமும் திறமும் தந்ததாகக் கூறுவதன் வாயிலாகக் குறள்நெறிச் செம்மை வாழ்விற்குத் தம்மையே சான்றாக்கியுள்ளார்.

வள்ளுவத் தொடர்களாய் வாழ்வு பெற்றவை:

'புரட்சிக் கவியில்' தமிழ்ப்புலவன் உதாரன் மன்னன் மகளாகிய அமுதவல்லியைத் தன் பிறப்புத் தாழ்வைக் கருதிக் காதலிக்க மறுக்கும் பொழுது குறிப்பிட்ட,

'அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யன்றோ' என்னும் வள்ளுவத் தொடர்,

''அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்''

என்ற குறளை நமக்கு நினைவூட்டுகிறது. 'இசையமுதில்' சிறுவர்க்கு அறிவுரை கூறுமிடத்து இடம்பெற்றுள்ள,

''அறத்தால் வருவதே இன்பம்'' என்பது,

''அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல''

என்ற குறளிலிருந்து எழுந்ததாகும். 'குடும்பவிளக்கில்' 'விருந்தோம்பல்' பகுதியில் விருந்தோம்பலின் சிறப்பைச் சித்திரிக்கும் இடத்துப் பாரதிதாசன் பயன்படுத்தியுள்ள,

''மோந்தால் குழையும் அனிச்
சப்பூ முகமாற்றம்
வாய்ந்தால் குழையும்
வருவிருந்து.....''

என்ற வரிகள்,

''மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து''

என்ற குறளை நம் நினைவில் நிறுத்துகின்றன. அதேநூலில் 'பிறர்நலம்' எனும் பகுதியில் பாரதிதாசன் கையாண்டுள்ள,

''வறியார்க்கொன் றீந்தால்தான்
நெஞ்சில்வரு மின்பம்
அறியா திரான்...''

என்பது,

''வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து'',

''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்''

என்ற குறள்களிலிருந்து பெறப்பட்டனவாகும். அதே பகுதியில் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ள,

''சாதலின் இன்னாத
தில்லையென்று சாற்றிடினும்
ஏதுமவன் சாகுங்கால்
இன்பமே ...''

என்பதுவும்

''தவம்செய்வார் தம்கருமம்
செய்வார்.....''

என்பதுவும்

''சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை'',

''தவஞ்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு''

என்ற குறள்களின் குறுகிய வடிவங்களாகும். அதேநூலில் 'முதியோர்காதல்' என்னும் பகுதியில் மணவழகர்

மணிமொழியாரிடம் நிலைத்த இன்பம் தரவல்லது எது என்பதைப் பற்றிக் கூறும் இடத்தில் பாரதிதாசன் காட்டியுள்ள,

''அன்பின் வழிய துயிர்நிலை'' என்பது,

''அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு''

என்ற குறளின் சுருங்கிய வடிவாகும்.

'திராவிடர் திருப்பாடலில்' இடம்பெற்றுள்ள ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்பது,

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''

என்ற குறளின் முதலடியாகும். உழவின் சிறப்பை உயர்த்திப் பாடியுள்ள பகுதியில் காணப்படும்,

''உழவே தலை'' என்பதுவும் குறிஞ்சித்திட்டில் அந்நிலப்பகுதி மன்னனால் அழைத்து வரப்பட்ட தியவளான விநோதை என்பாள் வழி வெளிப்படும்,

''எண்ணித் துணிந்திடுக'' என்பதுவும்

''சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'',

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு''

என்ற குறள்கள் தந்த நன்கொடையாகும்.

பாரதிதாசன் விளக்கம் பெற்ற விழுமிய குறள்கள்:

குறள்களைச் சுட்டிக்காட்டியிருப்பதுடன் உரையா சிரியர் போன்றே அக்குறள்களுக்குப் புரிந்து கொள்ளும் நிலையில் எளிய விளக்கங்களையும் பாரதிதாசன்

தந்துள்ளார். அங்ஙனம் விளக்கமுற்படும்பொழுது மரபு வழி நின்று விளக்கியிருப்பதுடன் புதுமைபூத்துப் பொலியும்தன்மையிலும் விளக்கியுள்ளார்.

'திராவிடர் புரட்சித் திருமணத்திட்டம்' என்னும் பாடலில் மணமக்கள் தலைவர் வழிப்பெற்றுள்ள மூன்று வாழ்த்துக்குறள்கள் பாரதிதாசன் எளிய விளக்கத்தைத் தாங்கியுள்ளன. அவை:

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

என்ற குறளை,

''இல்வாழ்வில் அன்பும்
அறமும் இருக்குமெனில்
நல்லதன்மை நல்லபயன்
நாளும் அடையுமன்றோ-''

என்று தம் எளிய உரை கொண்டு விளக்குகின்றார்.

''மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

என்ற குறளை,

''வாழ்க்கைத் துணைவி
மனைக்குரிய மாண்புகொண்டு
வாழ்வில் அவனின்
வருவாய் அறிந்து
செலவுசெயல் வேண்டும்''

என்று பாரதிதாசன் தமது எளிய உரையால் சிறப்பித்துள்ளார்.

''தன்னையும் தக்கபடி
காத்துக் கொளல் வேண்டும்
தன்கொழுநன் தன்னையும்
காத்திடல் வேண்டும்
சீர்சால் திராவிடர்

பண்பு சிதையாமல்
நேர்மை மறவாமல்
நிற்பவளே பெண்ணாவாள்''

என்பது,

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்ற குறளுக்குப் பாரதிதாசன் தந்த எளிய உரையாகும்.

'குறிஞ்சித்திட்டில்' மன்னனுக்கு அவன் துணைவி யாரின் சிறப்புப் பற்றி அமைச்சர் எடுத்துக்கூறும் போது,

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்ற குறளை மரபு வழி நின்று பாரதிதாசன் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்:

''இல்லாள் கடமை இவைகளாம்; அவற்றை அந்
நல்லாள் நடத்தவும் தவறாள் அன்றோ?
தன்னைக் காத்துக் கொண்ட தையல்
உன்னைக் காக்கும் உறுதி பூண்டாள்
அன்றியும் தன்குடிக் கமைந்த பெருமைக்கும்
ஒன்றும் கேடு வராவகை உணர்ந்தவள்
இவைகளில் சோர்வு கொள்ளுவா ளில்லை''.

''ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை''

என்ற குறளைப் பின்வருமாறு மரபு வழி அவர் விளக்கியுள்ளார்:

''உள்ளம் கடன் வாங்குகையில் உவப்புறும்
கொடுத்தவன் வட்டியோடு கேட்கையில் கொலைபடும்
ஆதலின் அருமைத்தமிழரே கேட்பீர்
கடன்படு நிலைகளுக்கு உடன்பட வேண்டாம்''.

பாரதிதாசன் கைவண்ணத்தில் புதுமை விளக்கம் பெற்றுத் திகழும் குறள்களும் உண்டு.

''உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

என்ற குறளுக்கு,

''வாய்மை அடிப்படை மக்களைச் சேர்க்கும்
மாண்பிலா ஆட்சி யாளரை நீக்கும்
தாய்மொழி தன்னையும் மீட்டுக் காக்கும்''

என்ற புத்துரையை வழங்கிப் பாரதிதாசன் பூரிக்கின்றார்.

''ஒற்றுமை ஒன்றினால் அச்சம் பறக்கும்
ஊருக் குழைப்பதோர் வீரம் பிறக்கும்
சற்றும் பிசகாமல் எண்ணிய நலங்கள்
சாரும்.....''

எனபது,

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

என்ற குறளுக்குப் பாரதிதாசன் ஊட்டிய புத்துரையாகும்.

''துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்''

என்ற குறள்,

''நாட்பட்டுப் போனஓர் சட்டத்திலே
ஒரு நல்லது செய்யாத சட்டத்திலே
ஆட்பட்டுப் போகாமல் ஒற்றுமையாயதை
ஆற்றலில் மாற்றுக''

என்ற பாரதிதாசனின் புத்துரையைப் பெற்றுள்ளது.

''கெஞ்சினால் மிஞ்சுவர் கேடாள வந்தார்
கிளர்ச்சி தேவை''

என்ற பாரதிதாசனின் புதிய விளக்கத்திற்கு,

''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்''

என்ற குறள் உரிமைப்பட்டதாய் உள்ளது.

''பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு''

என்ற குறளுக்கு,

''இவ்வாறு தூய்மை செய்யப்பட வேண்டும் வீடு.
பல்வகைக் கட்சிகள் கூட்டிக் கூட்டிப்
பகை வளர்த்தனர் நீட்டி நீட்டி
எல்லாக் கட்சியும் ஒன்றுபட வேண்டும்''

என்று இற்றைக்காலச் சூழ்நிலைக்கு ஏற்பப் பாரதிதாசன் புத்துரை வழங்கியுள்ளார்.

அதிகாரப் புது விளக்கம்:

பாரதிதாசன் வள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ள அதிகாரப் பெயர்களும் ஒத்துப்போகும் நிலையில் தாமும் சில அதிகாரங்களுக்குப் பெயர் சூட்டியிருப்பதுடன் 'நன்றியறிதல்' என்னும் பெயர் கொண்ட அதிகாரத்தில்,

''என்றுமே ஒருவர் செய்த
நன்றியை மறக்காதே
இந்நாட்டின் பண்பாட்டைத்
துறக்காதே''

என்று தமது புதுப்பொருளை அவர் இடம்பெறச் செய்துள்ளார்.

''உன்னைப் பிறர் வைதாலும்
உன்பொறுமை கெடவேண்டாம்
உனக்கொரு தீங்குசெய்தால்
விடவேண்டாம்''

என்ற புதுப்பொருள் கொண்டு 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தைப் பாரதிதாசன் விளக்கியுள்ளார்.

''தமிழ் மொழியைப் பழிப்பவனைத்
தாக்காமல் விடாதே
தனிமுறையில் கடுமொழியைத்
தொடாதே!''

என்ற புதுப்பொருள் 'இன்சொல்' என்னும் அதிகாரத்திற்குப் பாரதிதாசனால் தரப்பட்டுள்ளது.

''தீயவர்க்கும் ஒருதீங்கும்
செய்யாமல் விலக்குவாய்
தாய்நாட்டை வருத்துவோரைக்
கலக்குவாய்''

என்பது 'இன்னாசெய்யாமை' என்னும் அதிகாரத்திற்குப் பாரதிதாசன் வழங்கிய புதுப்பொருள் ஆகும்.

'கல்வி' எனும் அதிகாரத்தைத்

''தமிழ்க்கல்வி கற்க வேண்டும்
அமிழ்தாக நன்றன்றோ
அயல் மொழியை ஆதரித்தல்
தீதன்றோ?''

என்ற புதுப்பொருள் கொண்டு பாரதிதாசன் விளக்கிக் காட்டியுள்ளார்.

'ஒப்புரவு' என்னும் அதிகாரம்,

''நமக்கென்ன என்றிராதே
நமில்ஒருவன் நைகையில்
நறுக்கு வாய்பகைவர் தீங்கு
செய்கையில்''

என்ற புதுப்பொருள் பெற்று விளங்குகின்றது.

'அறிவுடைமை எனும் அதிகாரம்,

''சாதியால் சமையங்களால்
அறிவு தழைக்காது

தமிழ் நூலில் மடமையே
இருக்காது''

என்ற புதுப்பொருளால் பொலிவுற்றுள்ளது.

''ஆதியில் இருந்ததில்லை
ஆரியப் பொய்ந்நெறி
ஓதும் தமிழ்காட்டுவதே
மெய்ந்நெறி''

என்பது 'மெய்ந்நெறி' என்னும் அதிகாரம் பெற்றுள்ள புதுப்பொருள்விளக்கமாகும்.

கதைவடிவ விளக்கம்:

கதை நிகழ்ச்சி வடிவத்திலும் பாரதிதாசனின் குறள் விளக்கம் அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சி 'குடும்ப விளக்கில்' இடம்பெற்றுள்ளது:

''சின்னஞ்சிறு குழந்தையான 'அமிழ்து' சிறகு விரித்துச் செங்கால் அன்னம்போல் நடந்து தாழ்வாரத்தில் இடையிலிருந்து மைக்கூட்டை எடுத்துக் கொல்லையில் உள்ள முல்லைக்கொடியில் அதைச் சாய்த்தாள். அங்கு நீலம் சார்ந்த சேற்றில் சிற்றில் ஒன்று செய்து முடித்தாள். பின்தந்தை உண்ணும் தயிர்ச்சோற்றைத் தன் அங்கையால் பிசைந்தாள். நிலா நிறத்தயிர்ச் சோறு நீலநிறத் தயிர்ச் சோறாக மாறிற்று. தந்தையாகிய வேடப்பனும் அவளுடைய செய்கையைக் கண்டு வெறுப்படையாமல் அங்கையால் அவள் அள்ளித் தந்த சோற்றை விரும்பி வாங்கி உண்டான். சோறும் சேறும் தந்தைக்குத் தேனாகவே தித்தித்தன எனக் கதை நிகழ்ச்சி வடிவத்தில்,

''அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்''

என்ற திருக்குறளைப் பாரதிதாசன் சுவையாக விளக்கியுள்ளார்.

நெடும்பாடல் வடிவ விளக்கம்:

நெடும்பாடல் வடிவத்திலும் பாரதிதாசனின் குறள் விளக்கம் காணப்படுகின்றது.

''வானின்றுலகம் வழங்கி வருதலான்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று''

என்னும் குறட்கருத்தை விளக்க எழுதிய நெடும்பாடலே 'அமிழ்து எது?' என்பதாகும். தலைவன்தலைவியிடையே நிகழும் உரையாடலாக இப்பாடல் அமைந்துள்ளது. அமிழ்து என்பதற்குத் தலைவன்தலைவியிடம்,

''அமிழ்தென்றால் மேல்நின்
றமிழும் உணவாம்
.....
'அமிழ்என்றும் துவ்'வென்றும்
சொல்இரண்டுண் டத்தொடரில்''

என்று பொருள் உரைக்கின்றான். மேலும் அமிழ்து என்பதற்கு மழை என்பது பொருள் என அவன்வழிப் பாரதிதாசன்குறிப்பிடுகின்றார்.

''வானின்றுலகம்
வழங்கிவருதலால்
தானமிழ்தம் என்றுணரற்
பாற்றென்று சாற்றிய
வள்ளுவர்பாட்டை
வகையாகச் சொல்லி, அதற்
குள்ள கருத்தைஉரை.
அதையும் கேட்பாய்
அமிழ்தென் றுணரும்
அருமை மழைக்கே
அமையும் எனஉரைத்தார்
வள்ளுவரே அல்லவா?''

அமிழ்தம், அமுதம் முதலிய சொற்கள் அமிழ்து என்ற சொல்லில் இருந்து தோன்றியவை என்றும் வடமொழியாளர்கள் குறிப்பிடுகின்ற 'அம்ருதம்' என்ற சொல்லிலிருந்து அமிழ்து என்ற சொல் பிறக்கவில்லை யென்றும் பாரதிதாசன் விளக்குகின்றார். அம்ருதம் தேவர்கட்கு மட்டும் கிட்டியது. ஆயின் அமிழ்து எனப்படும் மழை உலகையும் உலக மக்களையும் காக்கின்றது. இங்ஙனம் இருசொற்கள் உணர்த்தும் பொருள் வேறுபாட்டையும் பாரதிதாசன் சுட்டியுள்ளார்.

பாரதிதாசன் அமிழ்து என்னும் சொல்லுக்கு மழை என்று பொருள் என்பதை விளக்க மேலும் இரு குறள்களை எடுத்துக் காட்டுகின்றார். அவை:

''வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி''.

''உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலான் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்''.

பாரதிதாசன் பிறிதொரு நூலான 'குடும்பவிளக்கிலும்' (மக்கட்பேறு) அமிழ்து என்பது மழையென்றே பொருள்படும் என்கிறார்:

''வானின்று மண்ணில் வந்து
மக்களைக் காக்கும் அ ஃ தது
தேன் அன்று; கரும்பும் அன்று;
செந்நெல்லின் சோறும் அன்று;
ஆன் அருள் பாலும் இன்றே;
அதன் பெயர் அமிழ்தாம்! தொன்மை
ஆனோ ருலகைக் காக்க
அமிழ்வதால் மழையய ஃ தேயாம்''

என்னும் பாடற்பகுதி இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

கோலக் கருத்துக்களில் ஞாலக்குறள்:

முழுமையாகவும் தொடராகவும் கதை நிகழ்ச்சியாக வும் நெடும்பாடலாகவும் குறளைப் பயன்படுத்தியுள்ள பாரதிதாசன் கருத்துக்கள் நிலையிலும் குறள் மணத்தைக் கமழச் செய்துள்ளார். கோலக் கருத்துக்களில் ஞாலக் குறளை இடம்பெறச் செய்துள்ளமை குறள்பால் பாரதிதாசன் கொண்டிருந்த தோழமையையும் அவரது குறள் ஆளுமையையையும் புலப்படுத்துகிறது. குறளை நினைவிற்குக் கொண்டு வரும் தன்மையில் பாரதிதாசன் காட்டியுள்ள கருத்துக்கள் ஊற்றாய்ப் பெருகிப் பாடல்வரிகளைக் குறளுக்கு உரிமைப்படுத்தியுள்ள இடங்கள் பாரதிதாசனின் பாடல்களில் மிகப் பலவாகும். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' என்ற குறள் தொடருக்கேற்பப் பாரதிதாசன் கைப்பட்ட இடத்தி லெல்லாம் கருத்து வடிவக் குறளாட்சியே முதன்மை பெற்றுள்ளது. அவரது குறட் கருத்துக்க ளெல்லாம் வலிந்து புகுத்தப்பட்டவையல்ல; இடத்திற்கேற்ப இயல்பாய் எழுந்தனவாகும்.

ஓர் அதிகாரத்தில் ஒரே குறளின் கருத்தைப் பத்து முறை பயன்படுத்தி வலியுறுத்தியுள்ள வள்ளுவரைப் போலவே வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் குறட்கருத்துக்களைப் பெய்து, குறளின் சீரையும் சிறப்பையும் பாரதிதாசன் பாடலெங்கும் பரப்பியுள்ளார். பாரதிதாசன் புலமையில் உருவான புதுக்குறளோ என்ற எண்ணம் ஏற்படும் நிலையில் சிலவிடங்களில் குறட்கருத்தக்களைத் தொடர்ச்சியாக அவர் பயன்படுத்தியுள்ளார். குறள் உடம்பில் தமிழ்ச்சட்டையை அணிந்து அழகு பார்த்தவர் அவராவார். உள்ளிழுக்கும் உயிர்மூச்சு அவருக்குத் தமிழென்றால் குறள் கலந்த தமிழ் அவர் வெளிவிடும் மூச்சுக்காற்றாகும். வானை மறந்த நிலவும் தேனை மறந்த வண்டும் வாளை மறந்த வீரனும் இருப்பது அரிது போல்

குறளை மறந்திருத்தல் பாரதிதாசனுக்கும் அரிதாகும். பாடாத தேனீ, பசியாத நல்வயிறு, உலவாத தென்றல் பார்த்ததுண்டோ? அது போல் குறள் மணம் பரப்பாத பாரதிதாசனைப் பார்த்ததுண்டோ? குறளால் பாரதிதாசன் தகுதிபெற்றமையும் பாரதிதாசனால் குறள் தகுதி பெற்றமையும் எடுத்துரைக்க முடியாச் சிறப்பினதாகும். பாரதிதாசனும் உள்ளமும் குறள் உணர்வும் பிரிக்க முடியாதபடி ஒன்றையொன்று பின்னிப்படர்ந்தனவாகும். இனி, பாரதிதாசன் கருத்துக்களில் மேலோங்கி நிற்கும் மேன்மை மிகு குறளாட்சியை முறையாகக் காண்போம்.

பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'வீரத்தாய்' என்னும் சிறுகாப்பியத்தில் படைக்கப்பட்டுள்ள அமைச்சன் கிழவி வேடம் புனைந்த அரசி விசயராணி பெற்றிருந்த அறிவுக்கூர்மையை,

''அறிவுபெற்ற படியாலே எல்லாம் பெற்றீர்'' எனப் பாராட்டப்பயன்பட்ட பாரதிதாசனின் வரி,

''அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்''

என்ற குறளிலிருந்து எழுந்ததாகும். 'உலகப்பன்' பாட்டில் இடம்பெற்றுள்ள,

''ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ''

என்ற வரிகளில்,

''ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு''

என்ற குறள் பொதிந்துள்ளது. 'இசையமுது' - சிறுவர் பகுதியில் காணப்படும்.

''ஆக்கிய சோறு கொஞ்சம் சிந்திக்கிடக்கும் - காக்கை
அழைத்துத்தன் இனத்தோடு குந்திப் பொறுக்கும்''

எனக் காக்கையின் இயல்பை விளக்கும் புரட்சிக் கவிஞரின் வரிகள்,

''காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ராார்க்கே உள''

என்ற குறளைத் தழுவியனவாகும். 'சிலம்பின் இறுதிப்பகுதியில் குட்டித்திருக்குறளோ எனக் கருதும்படி வள்ளுவர் மொழிந்துள்ள தனிமனித அறங்களை அடிகள் தொகுத்துத் தந்துள்ளார். அவரைப் போலவே பாரதிதாசனும் தாம்பாடியுள்ள 'இருண்ட வீட்டின்' இறுதிப்பகுதியைக் குறளிலுள்ள 'கல்வி, கல்லாமை' எனும் அதிகாரச் செய்திகளின் பிழிவாக ஆக்கியுள்ளார்:

''எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்டவீ டென்க
படிப்பிலார் நிறைந்த குடித்தனம், நரம்பின்
துடிப்பிலார் நிறைந்த சுடுகா டென்க
அறிவே கல்வியாம்; அறிவிலாக் குடும்பம்
நெறி காணாது நின்ற படிவிழும்
சொத்தெலாம் விற்றும் கற்ற கல்வியாம்
வித்தால் விளைவன மேன்மை இன்பம்
செல்வம் கடல்போல் சேரினும் என்பயன்?
கல்வி இல்லான் கண்ணிலான் என்க.
இடிக்குரற் சிங்கநேர் இறையே எனினும்
படிப்பிலாக் காலை நொடிப்பிலே வீழ்வான்
கல்லான் வலியிலான்; கண்ணிலான்; அவன்பால்
எல்லா நோயும் எப்போதுமுண்டு
கற்க எவரும்; எக்குறை நேரினும்
நிற்காது கற்க, நிறைவாழ்வென்பது
கற்கும் விழுக்காடு காணும்; பெண்கள்
கற்க, ஆடவர் கற்க! கல்லார்

முதிய ராயினும் முயல்க கல்வியில்
எதுபொருள் என்னும் இருவிழி யிலொரும்
படித்தால் அவருக்குப் பல்விழி கள்வரும்''.

எனக் கல்லாமையின் இழிவையும் கல்வியின் சிறப்பையும் அதன் இன்றியமையாமையையும் எடுத்துக்காட்டும் வரிகளில்,

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'',
''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு'',
''கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''

என்னும் குறள்கள் குடிகொண்டுள்ளன.

'குடும்ப விளக்கில்', 'விருந்தோம்பல்' பகுதியில்,

''ஆண்டு பலமுயன்றே
ஆக்குசுவை ஊண்எனினும்
ஈண்டு விருந்தினர்க்கும்
இட்டுவத்தல் - வேண்டுமன்றோ?''

எனவும்,

''இட்டுப்பார் உண்டவர்கள்
இன்புற் றிருக்கையிலே
தொட்டுப்பார் உன்நெஞ்சைத்
தோன்றுமின்பம்''

எனவும் விருந்தோம்பல் சிறப்பினை விளக்கும் வரிகள்,

''விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று?''
''ஈத்துவக்கும் இன்பம் அறியார்க்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்?''

ஆகிய குறள்களின் தாக்கம் பெற்றனவையாய் உள்ளன.

''உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்னும் குறளின் அடியொற்றியே,

''சாக்காடு பேரின்பம்
என்று நான் சாற்றிடுவேன்
தூக்கம் கெடலைத்
துயில் என்பீர் - வாய்க்கும்நல்
தூக்கத்தை இன்பமென்றீர்
அன்றோ? நெடுந்தூக்கம்
சாக்காடு இன்பம் என்றார்.''

என்ற பாடல் வரிகளைக் 'குடும்ப விளக்கில்' 'சாக்காடு நெடுந்தூக்கம்' என்னும் பகுதியில் பாரதிதாசன் அமைத்துள்ளார்.

''புகழ்ச்சியினைப் போக்கடித்தும்
தமிழுருயிர் வாழ்வதினும்
இறத்தல் நன்றே''

என்னும் பாடல் வரிகள்,

''வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்''

என்ற குறளின் மறுவடிவமேயாகும்.

'முல்லைக்காடு' என்ற தொகுப்பில் 'நல்லினம் சேர்தல்' என்னும் தலைப்பில்,

''சிறந்தநூற் பழக்கம்
ஆரிடம் உள்ளதோ அன்னவரிடம் - சிநேகம்
ஆகுதல் அல்லவோடா உன்கடமை''

என்றும்,

''மண்ணின் குணம் அங்குள்ள நீருக்குண்டு'' என்றும் இடம்பெற்றுள்ள வரிகள்,

''நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு'',

''நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு''

என்ற இரு குறள்களின் கொள்ளிடங்களாகும்.

''காதலா? கடமையா?'' என்ற குறுங்காப்பியத்தில் வாட்பொறை என்பான் தன் தங்கை கிள்ளைக்கு அறிவுறுத்தும்போது கையாண்டுள்ள,

''ஏழையர் அழுத கண்ணீர்
கூரிய வாள்எனக் கூறினார் பெரியோர்''

என்ற வரிகளால் பாரதிதாசன்,

''அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''

என்ற குறளை நினைவுபடுத்துகின்றார்.

''அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்''

என்ற குறளைப் பாரதிதாசன் தம்மனத்திற் பதித்துக் கொண்டதன்விளைவே,

''தீய பொறமையையும் - உடைமையிற்
செல்லும் அவாவினையும் - படுவாய்
காயும் சினத்தையும் - பிறருளம்
கன்ற உரைப்பதையும்
ஆயின் அகற்றிடுவாய் - உளத்தினில்
அறம் பிறக்குமடா''

என்ற 'திராவிடர் திருப்பாடலிலும்'

''தள்ளுக பொறாமை - ஒரு
தாய்வயிற்று மக்கள்
நீக்குக பேராசை - தம்பி

நிகர் எவரும் ஆவார்.
போக்கு சினம் தீச்சொல் - நீ
பொன் அறத்தை வாழ்த்து.
சேர்க்கும் அறம் உன்னை - ஒரு
தீங்கும் அற்ற வாழ்வில்''

என்று 'ஏற்றப் பாடலிலும் பயின்று வரும்' அறச் சார்புடைய அருமை வரிகளாகும். 'குடும்ப விளக்கில் 'மணவழகரை மாவரசர் பழித்துரைத்ததால் மனம் கனன்ற மணவழகர் தமக்கும் மாவரசர்க்கும் இடையே நிகழ்ந்ததைத் தம் துணைவியிடம் குறிப்பிடும்போது, மணவழகரின்துணைவியார்தம் கணவரை அறவழி நின்று திருத்த முற்பட்டபோது,

''நண்புளார் தீமை நாடினும் அதனைப்
பண்புளார் பொறுப்பர்; பகைமை கொள்ளார்
தீதுசெய் தார்க்கும் நன்மை செய்வர்
மூது ணர்ந்தவர் முனிவு செய்யார்''

எனக்குறிக்கும் வரிகள்,

''அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்'',

''இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று'',

''இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்''

என்னும் குறள்களின் விரிவான வெளிப்பாடுகள் ஆகும். பெண் நீங்கலாக உலகில் காணப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும் ஐம்புலன்களுள் யாதானும் ஒன்றிற்குத்தான் சுவையூட்டும். ஆனால் பெண்ணிடத்தில் மட்டுந்தான் ஐம்புலச்சுவையினை ஒருங்கே துய்க்க முடியும் என்பது

வள்ளுவர் வாய்மொழியாகும். பாரதிதாசனும் ஐம்புலச் சுவை நல்கும் பெண்ணின்பம் பற்றிப் பேசியுள்ளார்.

"தீண்டுதொறும் ஐம்புலனும் இன்பில் ஆழ்த்தும் பொன்னே"

என்று கண்ணகி நல்லாளைப் பாராட்டும் நிலையில் கோவலனைப் பாரதிதாசன் படைத்துள்ளார். பொதுவாக ஐம்புலன் இன்பம் சுட்டிய பாரதிதாசன் அவ்வைம் புலன்கள் யாவை என உணர்த்தும் நிலையில்,

"கண்மூக்குக் காது வாய்மெய்
இன்பத்திற் கவிழ்ப்பான்"

எனத் 'தொழுதெழுவாள்' என்னும் தலைப்பில் தலைவி ஒருத்தி தன் தலைவனிடம் பெற்ற இன்பப்பெற்றியைத் தன் தோழிக்குக் கூறுவதாகப் பாரதிதாசன் பாடியுள்ளார். இனி, இவ்வைந்தும் தனித்தனியே எவ்வகை இன்பம் நல்கும் என்பதையும்,

"மெய்யுற வாய்சு வைக்க
விழி, அழகுண்ண, மூக்கு
வெய்யசந் தனத்தோள் மோப்ப,
விளைதமிழ் காது கேட்க"

எனக் 'குடும்ப விளக்கின்' ஐந்தாம் பகுதியில் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். இப்பாடல் வரிகளில்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்ற குறளே பாரதிதாசன் உள்ளத்தில் நிலவியுள்ளது. குறளின் பொருளையும் விரிவாகவும் அவர் விளக்கம் செய்துள்ளார்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற குறட்கருத்தை விளக்கும் நிலையில் 'தொழுதெழுவாள்' என்னும் சிறுகதைப் பாடலைப்

பாடியுள்ளார். கணவனிடத்தில் பேரன்பு கொண்ட தலைவி,

''நிலந்தொழேன் நீர்தொ ழேன்விண்
வளிதொழேன் எரிதொ ழேன்நான்
அலங்கல்சேர் மார்பன் என்றன்
அன்பனைத் தொழுவதன்றி''

என்று கணவனைத் தொழுகின்ற முறையான செயலை அவர் விளக்குகின்றார். மேலும்,

''இயங்கிடும் உயிரன் னோனை
இருகையால் தொழுதெ ழுந்தேன்''

என்று கணவனைப் பேரன்பின் காரணமாகத் தொழுதெழுவதற்கரிய காரணத்தையும் அவர் காட்டு கின்றார். அதன்பின் தலைவனும் தலைவியும் குடிமக்களிடம் சென்றனர். மக்கள் தலைவனிடம் வறுமைத்துன்பத்தைப் போக்க உதவுமாறு வேண்டினர். தலைவி, 'பிழைத்தது மழை, என் அத்தான் பெய்' என்றாள். கொடுக்கும் இயல்புள்ள தலைவன் குடிகட்கெல்லாம் உடன் செந்நெல் மூட்டைகளை வண்டிகளில் அனுப்பி, ஏழை மக்களின் வாட்டத்தைப் போக்கினான்.

பெய்யெனப் பெய்வதில்லை மழை. ஒரு வேளை பெய்யுமானால் அம்மழை எவ்வளவு வளம் சேர்க்குமோ, அவ்வளவு நலம் சேர்ப்பவளாகக் கணவனை மட்டுமே தொழுதெழும் நங்கை நல்லாள் விளங்குவாள் என்பது பரிமேலழகர் இக்குறளுக்கு எழுதிய உரைக்கு மறுப்பாக எழுந்த புத்துரையாகும். மக்கள் துன்புறும் பொழுது பொருள்வளமுடைய தலைவனைப் 'பெய்' எனத் தலைவி வேண்ட, ஈத்துவக்கும் நெஞ்சினனான தலைவனும் தலைவியின் வேண்டுகோளை ஏற்றுத்தன் செல்வத்தைப் பெய்து மக்கள் குறை தீர்க்கின்றான் என இச்சிறுகதையில் மொழிந்துள்ளமை மேற்காட்டிய புத்துரைக்கு மேலும் அணி சேர்க்கின்றது. இங்ஙனம் தாம் பாடிய பாக்களில்

வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் வள்ளுவர் வழித்தடங்களைப் பாரதிதாசன் தவறாமல் பதித்துள்ளார்.

குறளாட்சிக்குக் காரணம்:

திருக்குறளை எடுத்தாள்வது மட்டும் பாரதிதாசனின் நோக்கமன்று. தக்க பின்னணி அமைப்புக்களிட்டு, அங்கே குறட்பாவினைப் பொருத்தி விட்டால் யாவர் மனங்களிலும் எளிதில் குறள் சென்று பதிந்துவிடும். தமிழினத்தாரிடையே இடைக்காலத்தில் ஏற்பட்ட ஒரு நீதி நூல் என்றளவில் பெயர்பெற்று ஒதுங்க நேர்ந்தது. நீதிநூல் என்ற முத்திரை பெற்று விட்டமையால் அதனை அடிக்கடி எடுத்துப் பயில்வோர் அருகினர். இதுகண்ட பாரதிதாசன் போன்ற புலவர்கள் உள்ளம் வருந்தியிருக்க வேண்டும். திருக்குறள் வாழ்க்கை நூல் என்பதைக் காட்டவேண்டும் என்ற கருத்துப்பற்றியே எல்லா வகையான இடங்களிலும் பாரதிதாசன் அந்த வான்மொழியை எடுத்தாண்டிருக்க வேண்டும்.

பாரதிதாசன் எடுத்தாண்டிருப்பது திருக்குறள் ஒன்று மட்டுமன்று. தொல்காப்பியம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களெல்லாம் அவரால் போற்றப்பட்டுள்ளன. ஆனால் திருக்குறள் பெற்ற மதிப்பினைப் பிற நூல்கள் அவரிடம் பெறவில்லை. பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றிய பெரியாராவார். அவருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய பெருந்தகையாளர் வள்ளுவராவார். இருவருக்கும் இடையிலே உள்ள காலப் பெருவெள்ளம் அவர் தம்மைப் பொருத்தவரையில் இல்லாமல் மறைந்து ஒழிகின்றது. இஃது இலக்கியத்தின் தலைமை சான்ற மாண்பாகும்.

காலம் மனிதனை வெல்லும். காலத்தை வெல்லுகின்ற ஆற்றல் இலக்கியத்திற்கு உண்டு. திருக்குறள் காலத்தை வென்றது. பல புலவர்களுக்கு வழிகாட்டியாக இன்றும்

நிலைத்து நிற்கின்றது. இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், திருத்தக்கதேவர், கம்பர் போன்ற பெரும்புலவர்கள் யாவருமே குறளின் சொல்லையும் பொருளையும் எடுத்தாண்டவர்கள்தாம் எனினும் பாரதிதாசனைப் போல் மிகுதியான குறட்பாக்களை எடுத்தாண்டவர் வேறு எவரும் இலர் என்பதைத் தயக்கமும் தடையுமின்றிச் சாற்றலாம். பாரதிதாசனைப் படித்து முடித்த பின் அவரை **'வள்ளுவப் பேரொளியர்'** என்றே சொல்லத் தோன்றுகிறது.

காட்டவேண்டிய கைம்மாறு:

''நயங்கொள் அவ்வியக்கம் தன்னை நாங்கள்
சுயமரி யாதை இயக்கமெனச் சொல்வோம்
அந்த இயக்கம் அறைவ தென்னவெனில்
எல்லாரும் ஓர்குலம் எனப்படல் வேண்டும்
எல்லாரும் இந்தியர் எனப்படல் வேண்டும்
எல்லாரும் பொதுவாய் இன்புறல் வேண்டும்
உயர்வு தாழ்வுகள் ஒழிந்திட வேண்டும்
பெண்கள் விடுதலை பெற்றிட வேண்டும்
கைம்மைக் கொடுமை களைந்திட வேண்டும்
காதல் மணமே காணுதல் வேண்டும்
பகுத்தறிவுச் செயல்கள் பரவுதல் வேண்டும்
மூடச்செயல்கள் முறிபடல் வேண்டும்
யார்க்கும் கல்வி ஈந்திடல் வேண்டும்
தொழிற்கல்வி எங்கும் தோன்றிடல் வேண்டும்
ஒருவனை ஏய்த்து மற்றொருவன் உண்ணும்
இருதயந் தன்னில் எரிமூட்ட வேண்டும்
சுதந்திரம் சமத்துவம் சகோதரத் துவமெனும்
இதந்தரு பதவி எவர்க்கும் வேண்டும்''

எனக் குறள்நெறிச் சாற்றின் பிழிவாகக் காணப்படும் பாரதிதாசன் பாடல்காட்டியுள்ள நெறியில் தாழ்ந்துள்ள

தமிழகத்தைத் தலைநிமிரச் செய்தலே வள்ளுவர்க்கும் பாரதிதாசனுக்கும் நாம் ஆற்றும் கைம்மாறாக அமையும்.

பயிலுவோம் ! பரப்புவோம்!

வள்ளுவர் வகுத்துள்ள நெறியில் பாரதிதாசன் காண விழைந்த குமுகாயத்தைப் படைப்பதற்குமுன் நாம் பயில வேண்டிய நூல் யாதென்பதைப் பாரதிதாசன் வரிகளிலேயே காண்போம்.

''நூலைப்படி - சங்கத்தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி
காலையிற்படி கடும்பகல்படி
மாலை, இரவு பொருள்படும்படி
கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வ தெப்படி?
அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம்படி
இறந்தத மிழ்நான் மறை
பிறந்த தென்று சொல்லும்படி''

என்றபடி குறளைக் கசடறக் கற்கப் பாரதிதாசன் வேண்டுகிறார். பிறநூல்களை ஏன் கற்கக்கூடாது என்பதை அவரிடமே கேட்டறிவோம்

''பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி?''

எங்ஙனம் கற்க வேண்டும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளதைக் காண்போம்.

''தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்காஇன் பம்மறுபடி
ஆகும்என்ற ஆன்றோர்சொற்படி''.

குறளும் தாசனின் பாக்களும்:

கொடுமை சூழ்ந்த உலகக் கோடையிலே இளைப் பாற்றிக்கொள்ளும் வகைகிடைத்த தரு மருவற்ற குறள் எனில், அத்தரு நிழலும் அந்நிழலில் கனிந்த கனியும் பாரதிதாசனின் பாக்களாகும். செம்மை வாழ்வாகிய நிலத்தில் ஓடுகின்ற ஓடை உயர் திருக்குறளானால், அவ்வோடையில் ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரும் உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரும் பாரதிதாசனின் கவிதைப் படைப்புக்களாகும். இலக்கிய மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்று புதுமைத் திருக்குறள் எனில், அப்பூங்காற்றில் விளைசுகமும் சுகத்திலுறும் பயனும் பாரதிதாசனின் புரட்சிப் பாக்களாகும். பாரதிதாசன் முன்னம் வள்ளுவர் பெயர் கேட்டார்; தமிழ் உலகின் மூலமுதல்வரான வள்ளுவரின் நெறிதனை உணர்ந்தார்; பின்னே அவரின் அரிய பேராற்றலை அறிந்தார்; அவருக்கே பிச்சன் ஆனார்; தம்மை மறந்தார்; தம்பெயர் கெட்டார்; தலைப்பட்டார் வள்ளுவர் வழியே.

பாரதியைப் பாராட்டப் பாரதிதாசன் பயன்படுத்தியுள்ள புகழ்வரிகளை வான்புகழ் வள்ளுவருக்கும் ஊனில் - உயிரில் - உணர்வில் தமிழையே உறையச் செய்த பாரதிதாசனுக்கும் சூட்டிமகிழ்வோம். வள்ளுவரும் பாரதிதாசனும் செந்தமிழ்த் தேனீக்கள்; பைந்தமிழ்த் தேர்ப்பாகர்கள்; குவிக்கும் கவிதைக் குயில்கள்; நாட்டின் பகையைக் கவிழ்க்கச் செய்யும் கவிமுரசுகள்; நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலவுகள்; காடுகமழும் கற்பூரச் சொற்கோக்கள்; கற்பனை ஊற்றாம் கவிதையின் திறம்

பாடவந்த மறவர்கள்; புதிய அறம்பாட வந்த அறிஞர்கள்; நாட்டிற் படரும் சாதிப்படைக்கு மருந்துகள்; மண்டும் மதங்கள் அண்டா நெருப்புக்கள்; அயலார் எதிர்ப்பிற்கு அணையா விளக்குகள்; குறளால் பாரதிதாசன் தகுதி பெற்றதும் குறள் பாரதிதாசனால் தகுதி பெற்றதும் என்னென்று எடுத்துச் சொல்ல முடியாச் சிறப்புத் தகுதிகளாகும்.

நூற்பயன்:

குறளைக் கற்றதனால் ஆயபயன்களைத் தம்மைக் கொண்டே கீழ்வருமாறு பாரதிதாசன் விளக்குகின்றார்:

''குறள் படித்தேன் குறள் படித்தேன்
குணமடைந்தேன் நான் - தூய
குருதிகொண்டேன் நான்!
உறுதிகொண்டேன் நான்!
குறள் படித்தேன் குறள் படித்தேன்
குறைக ளைந்தேன் நான் - மனக்
கொழுமை கொண்டேன் நான் - உயிர்ச்
செழுமை பெற்றேன் நான்
அறம் படித்ததேன் பொருள் படித்தேன்
இன்பம் படித்தேன் - அறி
வின்பம் குடித்தேன் உலகத்
துன்பம் துடைத்தேன்
திறம் படைத்தேன் உரம் படைத்தேன்
திருக்குற ளாலே - முப்பால்
திருக்குற ளாலே - உலகு
ஒழுங்குற ளாலே.''

குறளையும் குறள்நெறி நடந்த புரட்சிக்கவியின் பாடல்களையும் பயில வாரீர்! பயின்றவாறு நடக்க வாரீர்! வள்ளுவ நெறியில் புரட்சிக்கவியின் புத்துணர்வைத் தாங்கி இவ்வையத்தை நடத்த வாரீர்!

□

நூலின் பகுப்பும் தொகுப்பும் ஒப்பீட்டு ஆய்வுக்குப் புதுமையைச் சேர்க்கின்றன. ஆறு அத்தியாயங்களில் வள்ளுவரையும் பாவேந்தரையும், அவர்களது படைப்புகளின் உள்ளடக்கத்தையும், வள்ளுவம் பாவேந்தரிடம் ஏற்படுத்திய தாக்கத்தையும் நுட்பமாக வரையறுத்துக் கூறுகின்றார். பாவேந்தரிடம் மட்டுமின்றி, மற்றைய பெரும் புலவர்களிடமும் வள்ளுவத்தின் செல்வாக்கும் சொல்வாக்கும் ஊடுருவி நிற்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றபொழுது நாம் மெய்மறக்கின்றோம். இலக்கியத்தை எழுத்தெண்ணிப் பயின்ற பாங்கு பேராசிரியரின் ஆய்வுக் கதிர்வீச்சில் வெளிப்படுகின்றது.

அறிஞர் மா. பா. குருசாமி

